CMYK

# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 0101 வள்ளுவர் ஆண்டு: 2046 மாசி 23, சனிக்கிழமை 07.03.2015

13 லட்சம் பரிசு வெல்லுங்கள்

**வானிலை**
மேக மூட்டமான வானிலை காணப்படும் இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## குற்றச்சாட்டின்றி சிறையிலிருப்போர் விரைவில் விடுதலை?

கொழும்பு, மார்ச் 7
குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாமல்சட்டத்துக்கு முரணான வகையில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை, விடுதலை செய்வதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
போரின் இறுதிக் கட்டத்திலும், போர் முடிவுக்கு பக்.24



## ஜெயக்குமாரியை விடுதலை செய்க

வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 7
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மகளின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரியை, விடுவிக்க வேண்டும் என்று கோரி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. பக்.24

## புலனாய்வு பிரிவில் கோத்தாவின் கையாள்கள்!

கொழும்பு, மார்ச் 7
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உளவாளிகள் தற்போதும் புலனாய்வுப் பிரிவுக்குள் இருக்கின்றனர். அவர்களாலேயே நாட்டில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின்றன. புதிய அரசு வெளிநாடுகளுடன் ஏற்படுத்தும் தொடர்புகளையும் சீர்குலைக்கும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபடுகின்றனர். – இவ்வாறு



பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர. பக்.24

குடிதண்ணீரும் குடாநாடும் பக்.14

## கரைச்சியில் காணி படைக்கு சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களின் காணிகள் இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படவுள்ளது. கடந்த 26ஆம் திகதி அவற்றை சுவீகரிக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மீளவும் அது முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இராணுவத்தின் 20ஆவது பட்டாலியன் கஜபாகு றெஜிமன்டுக்காக இந்தக் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. பக்.02

# வலி.வடக்கில் மீள்குடியமர்வு புதனன்று

யாழ்ப்பாணம், மார்ச் 7
வலி.வடக்கு – வலி.கிழக்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எதிர்வரும் புதன் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. வளலாய் மற்றும் வசாவிளான் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளே முதல் கட்டமாக விடுவிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஆயிரத்து நூறு ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டிருந்தது. பக்.24

## தேசிய ஔடத சட்டவரைவு நிறைவேற்றம்

கொழும்பு, மார்ச் 7
தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டவ்வரைவ' திருத்தங்களுடன் நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.
சட்டவரைவுக்கு ஆதரவாக 68வாக்குகளும்,எதிராகஒரு வாக்கும் பக்.24

இலங்கை தலை நிமிர்வது எப்போது? பக்.16

## மருதங்கேணியிலும் மக்கள் காணி சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில், கடந்த காலங்களில் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்குச் சொந்தமான 11 ஹெக்ரேயர் காணி சுவீகரிக்கப்பட்டு பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். பக்.24

## தீயில் எரிந்து பெண் சாவு: பொலிஸார் விசாரணை

நெல்லியடி, மார்ச் 7
தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குடும்பப்பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
வடமராட்சியைச் சேர்ந்த 24 வயதுடைய குறித்த குடும்பப் பெண் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் கடும் தீக்காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அன்று அதிகாலையே அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பக்.24

13! லட்சம் வெல்லுங்கள்

## மைத்திரி – சுஷ்மா நேற்று சந்திப்பு



இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளார். இந்தச் சந்திப்பு ஜனாதிபதியின் விஜேராம இல்லத்தில் இடம்பெற்றது. (ந)

## அமைதிப்படைக்கு மோடி அஞ்சலி செலுத்துவார்

இலங்கை வருகையின்போது

யாழ்ப்பாணம், மார்ச் 7
மூன்று நாள் பயணமாக இலங்கை வரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையில் கொல்லப்பட்ட இந்திய அமைதிப் படையினருக்கு அஞ்சலி செலுத்துவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மோடியின் இலங்கைப் பயணத்தின்போது அவர் செல்லும் இடங்கள் தொடர்பான பயணத் திட்டத்தை வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டது.
கொழும்பு துறை... பக்.24

## பிரிட்டன் செல்கிறார் ஜனாதிபதி மைத்திரி

மகாராணி எலிசபெத்தையும் சந்தித்துப் பேசவுள்ளார்

கொழும்பு, மார்ச் 7
ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான குழுவினர், ஐந்து நாள் பயணமாக இன்று பிரிட்டன் புறப்படுகின்றனர். அந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தையும் சந்தித்துப் பேசவுள்ளார்.
ஜனாதிபதியாக மைத்திரிபால பதவியேற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். பிரிட்டனுக்கான முதல் பயணமுமாகும். ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் 17 பேர் கொண்ட குழுவினர் செல்லவுள்ளனர்.
இந்தக் குழுவில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள், ஊடக குழுவைச் சேர்ந்த ஒருவர் இடம்பெறவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சியில் காணி படைக்கு சுவீகரிப்பு

## நிறுத்தப்பட்டிருந்த நடவடிக்கை மீளவும் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7
கிளிநொச்சி மாவட்டத்தில், கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் பொதுமக்களின் காணியை இராணுவத் தேவைக்கு சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த மாதம் 26 ஆம் திகதி சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அந்த நடவடிக்கை மீளவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில், திருவையாறு மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே காணி சுவீகரிக்கப்படவுள்ளது. இராணுவத்தின் 20 ஆவது பட்டாலியன் கஜபா ரெஜிமன்டுக்காக இந்தக் காணி சுவீகரிப்படுகின்றது.
5 குடும்பங்களுக்குச் சொந்தமான மேற்படி காணியை சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல், கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது. இதனைச் சுவீகரிப்பதற்காக, கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது. அன்றைய தினம் குறித்த காணிகளின் உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். ஆனாலும் இராணுவத்தினர் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு வருகை தராத காரணத்தினால் அது ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில், ஒத்தி வைக்கப்பட்ட சுவீகரிப்பு நடவடிக்கையை மீளவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# இலத்திரனியல் மாயமாகும் ஊழியர் சேமலாப நிதியம்

## விளக்கக் கருத்தரங்கு 9ஆம் திகதி பொதுநூலகத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச் 7
ஊழியர் சேமலாப நிதியத்தை இலத்திரனியல் மயப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.
இலங்கை மத்திய வங்கியும் தொழில் திணைக்களமும் இணைந்து நடத்தும் இது தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த கருத்தரங்குக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள இருநூறுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கேகனகேஸ்வரன் தெரிவித்தார்.
தொழில் நிலையம் ஒன்றில் 20 பணியாளர்களுக்கு மேல் பணியாற்றினால் அந்த தொழில் நிலையங்களின் ஊழியர் சேமலாப நிதியை இலத்திரனியல் மூலம் அனுப்பி வைப்பதற்கான புதிய நடைமுறையை மத்தி வங்கி அறிமுகப்படுத்தவுள்ளது. தொழில் தருநர்கள் இலத்திரனியல் முறையூடாக ஊழியர் சேமலாப நிதியை அனுப்புதல் சம்பந்தமாக விளக்கங்களும் அறிவுறுத்தல்களும் இந்தக் கருத்தரங்கு மூலம் எடுத்துக் கூறப்படும். இந்தக் கருத்தரங்கில் இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதி கண்காணிப்பாளர் எம்.எஸ்.கே. தர்மரத்தின உட்பட வங்கியின் 15 உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.– என்று அவர் தெரிவித்தார்.
கருத்தரங்கு காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணி வரை இடம்பெறும்.கருத்தரங்கில் சகல தொழில் தருநர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.
அதேசமயம் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான நடமாடும் சேவை ஒன்று அன்றையதினம் (எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை) பண்ணை வீதியில் உள்ள மாவட்ட தொழில் அலுவலகத்தில் இடம்பெறும். இந்த நடமாடும் சேவை மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.– என்றும் அவர் தெரிவித்தார்.
இந்த நடமாடும் சேவை காலை 9 மணிதொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும். கணக்கு நிலுவைக் கூற்றைப் பெறுதல், பெயர், தேசிய அடையாள அட்டைகளை திருத்துதல் ஊழியர் சேமலாப நிதிய கணக்குகளை திருத்துதல், குறிப்பாக இறந்த உறுப்பினர் ஒருவரின் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற சேவைகளை இந்த நடமாடும் சேவையூடாக மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.– என்றும் தெரிவிக்கப்பட்டது(ற-17)

## 31ஆம் திகதிவரை உ/த பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி நேற்றையதினமான 6ஆம் திகதியே என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அது எதிர்வரும் 31ஆம் திகதி வரை யில் நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகமான டபிள்யூ. எம்.என். கே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.
பாடசாலைகளின் மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளின் மீது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற-22)

# 60 நாள்களுக்கு பகீரதிக்கு தடுப்பு

கொழும்பு, மார்ச் 7
கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட பிரான்ஸ் குடியுரிமை பெற்ற, 41 வயதான பகீரதியையும் அவரது 8 வயது மகளையும், மூன்று மாதங்களுக்கு தடுத்து வைத்திருப்பதற்கு பாதுகாப்பு அமைச்சரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
பிரான்ஸிலிருந்து 10 வருடங்களின் பின்னர், கிளிநொச்சியில் சுகவீனமடைந்த நிலையிலிருந்த தனது தாயாரைப் பார்ப்பதற்கு, பகீரதியும் அவரது மகளும் வந்திருந்தனர். கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர், இலங்கைக்கு வந்த இவர்கள் கடந்த 3 ஆம் திகதி கட்டுநாயக்காக விமான நிலையம் ஊடாக பிரான்ஸிற்குச் செல்ல முற்பட்டனர். இதன் போது அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்புலிகளின் முக்கிய தளபதியாக பகீரதி 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையில் செயற்பட்டுள்ளார். அதன் பின்னர் அந்த அமைப்பிலிருந்து விலகி, கடந்த 2005 ஆம் ஆண்டு பிரான்ஸிற்குச் சென்றிருந்தார். கடற்புலிகளின் முக்கிய தளபதியாக இருந்தமையினாலேயே, அவரைக் கைது செய்ததாக, பொலிஸார் தெரிவித்திருந்தனர்.
கைது செய்யப்பட்டிருந்த இவரை 72 மணித்தியாலம் தடுத்து வைத்திருந்து விசாரிப்பதற்கான அனுமதியைப் பொலிஸார் பெற்றிருந்தனர். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து அவர் விலகியிருந்தாலும், பல முக்கிய தாக்குதல்களில் அவர் பங்காற்றியுள்ளார். அத்துடன் 20 வருடங்களுக்கு இவ்வாறானவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை 72 மணி நேரம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், பாதுகாப்பு அமைச்சரின் அனுமதியைப் பெற்று (எம்.ஓ.டி) மூன்று மாதங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதியைப் பொலிஸார் பெற்றுள்ளனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், விசாரணைகள் முடிவுறாததால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவரைத் தடுத்து வைக்க உத்தரவு பெறப்பட்டுள்ளது.
இதன்படி, 90 நாள்களுக்கு அவரைத் தடுத்து வைத்திருக்க முடியும். எனினும் விசாரணைகளை விரைவாக முடிப்போம் என்று நம்பு கின்றோம். பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பகீரதியுடன் தங்கியிருக்க, பிரெஞ்சு குடியுரிமை பெற்ற அவரது 8 வயது மகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவர் இன்னொரு பாதுகாவலரிடம் செல்ல விரும்பினால் அதற்கு அனுமதி அளிக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற-5)

## மகளிர் தின விழா இன்று

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர்தின விழா இன்று காலை 9.30 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும். விழிப்புலனற்றோர் சங்க நிர்வாக அங்கத்தவர் திருமதி நகுலாம்பிகை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழ சித்த மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி திலகேஸ்வரி குமுதறஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வர்.

# குடிதண்ணீர் விநியோகம் வழமைக்கு வந்தது நேற்று

## கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 7
கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் விநியோகம் நேற்று மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் நேற்றுக் காலைவரை வழங்கப்படாதிருந்த குடிதண்ணீர் விநியோகம் நேற்று மதியத்துடன் வழமைக்குத் திரும்பியுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சுதுமலை வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளிலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அந்தப் பகுதிகளில் குடிதண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபை குடிதண்ணீர் வழங்கி வருகின்றது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திடீரென பிரதேச சபையினால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டனர். பிரதேச சபையின் குடிதண்ணீர் பவுசரைச் செலுத்தும் சாரதி சுகவீனம் காணமாக வரவில்லை. இதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவித்த பிரதேச சபையின் தவிசாளர், நேற்றையதினம் பிரதேச சபையின் வேறு ஒரு உப அலுவலகத்திலிருந்து சாரதி ஒருவரை மாற்றி, குடிதண்ணீர் விநியோகப் பணிக்கு நியமித்துள்ளதாகத் தெரிவித்தார்.
இதேவேளை, தற்போது வெயில் காலம் ஆரம்பித்துள்ளமையினால், குடிதண்ணீர் போதாமல் இருப்பதாகவும் எனவே, தாங்கிகளை கூடுதலாக வைக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-5-115)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு மறியல்

500 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த வரணி வடக்கு வாசியை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதிச் சென்ற பொலிஸார் கஞ்சா வைத்திருந்த நபரைக் கைதுசெய்தனர். இவருக்கெதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
விசாரணைகளின் பின்னர் இந்த நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-9)

# சிற்றுண்டிச்சாலையில் சுகாதாரச் சீர்கேடுகள்

## போதனா வைத்தியசாலையிடம் விளக்கம் கேட்கிறது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், மார்ச். 7
யாழ்.போதனா வைத்தியசாலைச் சிற்றுண்டிச்சாலையில் உணவுச் சீர்கேடு ஒரு வருடத்துக்கும் மேலாகத் தொடர்வதனால் அது தொடர்பில் அதன் நடத்துநரையும் வைத்தியசாலை நிர்வாகத்தையும் விளக்கமளிக்குமாறு யாழ்.நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
வைத்தியசாலையில் வைத்து விற்பனை செய்யப்படும் உணவுகள் வைத்தியசாலைக்கு வெளியேயுள்ள இடங்களில் வைத்துச் சமைக்கப்படுகின்றது. அந்த இடம் உரிய சுகாதார வசதிகளைக் கொண்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் பொது சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனையடுத்துத் தற்போதைய சமையலறையுள்ள இடத்தில் உரிய சுகாதார வசதிகள் இன்மையால் அந்த இடத்தில் சமைப்பது நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது மானிப்பாயில் வைத்துச் சமைக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.
அந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. கடந்த தவணை நீதிமன்றில் முன்னிலையாகியிருக்காத சிற்றுண்டி நடத்துநர், நேற்றுச் சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையாகியிருந்தார். தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த சுகாதாரப் பரிசோதகர், சமையலறையை 2 வாரங்களுக்குள் சீர்செய்யுமாறு சிற்றுண்டிச்சாலை நடத்துநருக்குக் கடந்த வருடம் டிசெம்பரில் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் தற்போது 3 மாதங்களாகிவிட்ட போதும் அந்த இடம் சீர்செய்யப்படவில்லையெனத் தெரிவித்தார்.
ஒரு வருடத்துக்கும் மேலாக இந்தப் பிரச்சினை தொடர்கிறது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பலரும் அதற்குச் சாட்சி. எனவே சுகாதாரச் சீர்கேடு தொடர்பில் சிற்றுண்டிச்சாலை நடத்துநரும், வைத்தியசாலை நிர்வாகமும் அடுத்த தவணையின்போது நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என்று நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.
தற்போது உணவு சமைக்கும் இடத்தை 2 வாரங்களுக்குள் சீர் செய்து உரிய சுகாதாரம் கொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் தவறின் வியாபார நடவடிக்கையை முடிவுறுத்த வேண்டிவரும் என்றும் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது. சிற்றுண்டிச்சாலை நடத்துநர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTING | 0777 692318
BCAS CAMPUS
JAFFNA

13 லட்சங்கள்
WOW!
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

# கிரிக்கெட் கொண்டாட்டம்






## காலிறுதிக்குள் இந்தியா



சமியின் வேகமும் டோனியின் நிதானமும் கைகொடுக்க மேற்கிந்தியத்தீவுகளை 4 இலக்குகளால் வெற்றியீட்டி ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடியது இந்திய அணி.

தீவுகளுக்கு திண்டாட்டமான நிலை. காலிறுதியைத் தக்க வைக்கப் போராட வேண்டிய நிலையில், இந்தியாவை எதிர்கொண்டது. தொடர் வெற்றியில் திளைத்திருந்த இந்தியாவுக்கு, மேற்கிந்தியத்தீவுகள் எல்லாம் ஒரு பொருட்டல்ல. இலகுவாக புரட்டிப் போடலாம் என்று களம் வந்தவர்களுக்கு, தீவுகளின் சீறிய பந்து வீச்சுக்கள் நெருக்கடி கொடுத்திருந்தது. ஆனாலும் லாவகமாக சமாளித்து இந்தியா தனது வெற்றி முத்திரையைப் பதித்தது.

வழக்கத்துக்கு மாறாக நாணயச் சுழற்சியில் இந்தியாவுக்கு தோல்வி. இதனால் துடுப்பெடுத்தாட தீர்மானித்து களமிறங்கியது தீவுகள். சிமித் ஒரு பவுண்டரி விளாசினார். பந்து சென்ற திசையிலே தானும் பின்னால் சென்றார். தீவுகள் 8 ஓட்டத்துக்கு ஒரு இலக்கு.

வெறித்தனமான கெய்ல் அடித்த பந்து மைதானத்தில் நேரே எழும்பியது. பிடிக்கு ஓடிச் சென்ற மோகித் சர்மா, பந்தைக் கோட்டை விட்டார். இதற்கிடையில் அவசர ஓட்டத்துக்கு முனைந்த சாமுவேல்ஸ், கிறீஸை விட்டு பாதித் தூரத்துக்கு மேல் இருக்கையில் பந்தை எஷீந்தார் சர்மா. ஹோக்லி ஓடிச் சென்று ரன் அவுட்டாக்கினார். இதனால் இரண்டாது இலக்கும் போனது.

இலக்குகள் வீழ்ந்தாலும் எகிறிப் பாய்ந்தது ஒரு சிக்சர். அடித்தது கெயில். அடக்கி வாசித்தனர் இந்திய ரசிகர்கள். கெயில் ருத்ர தாண்டவத்துக்கு தயார் படுத்துகையிலேயே, ஆட்டமிழந்தார். இதனால் இந்திய ரசிகர்கள் எம்பிக் குதித்தனர். நிம்மதிப் பெருமூச்சு டோனிக்கு அப்போதுதான் வந்தது. ஏன் ஒட்டுமொத்த இந்திய அணிக்கும் அப்போதுதான் சுவாசம் சீரானது.

தீவுகளின் இலக்குகளை இந்தியா இலகுவாக பிடுங்கி எடுத்தது. எதிர்புக்கள் எதுவுமின்றி சரணடைந்து கொண்டு சென்றது தீவுகள். தீவுகள் 67 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள். தத்தளித்த தீவுகளுக்கு கரம் கொடுத்தார் சமி. சமிக்கு பக்கபலமாக அணித்தலைவர் கோல்டர். அவ்வப்போது அதிரடி அவ்வப்போது நிதானம் என அனைத்தும் கோல்டரின் ஆட்டத்தில் வெளிப்படையாக தெரிந்தது. இணைப்பாட்டத்தை பிரித்துச் சென்றார் சமி. பின்வரிசை வீரர்களை வைத்து தாண்டவம்

பக்கம் 04

## டோனியிடம் ஆட்டோகிராப்

மேற்கிந்தியதீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கெய்ல், இந்திய அணித் தலைவர் டோனியிடம் துடுப்பாட்ட மட்டையில் ஆட்டோகிராப் வாங்கியுள்ளார்.

மேற்கிந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரரான கெய்ல், இந்திய அணித் தலைவர் டோனியிடம் சென்று, கான் ஐ கெட் ஆட்டோகிராப் கப்டன் என்று கேட்க, டோனி ஒரு நிமிடம் ஆடிப் போனார்.

பின்னர் சிரித்துக்கொண்டே கெய்லின் துடுப்பாட்ட மட்டையில் ஆட்டோகிராப் வழங்கினார். இருவரும் சிறிது நேரம் நகைச்சுவையாக பேசிக்கொண்டனர்.

டோனியிடம் ஆட்டோகிராப் பெற்ற துடுப்பாட்ட மட்டையைத்தான், கெய்ல் நேற்றைய ஆட்டத்தில் பயன்படுத்தியதாக, இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (5-ரி)

## எனக்கு எதுவும் தெரியாது

ஹோக்லி விவகாரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

எங்களுக்கு ஆதரவு வழங்க மிகப் பெரிய எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் வந்திருப்பது எங்களை நெகிழ வைக்கிறது. கிரிக்கெட் குறித்த தகவல்களை சரியான முறையில் மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டியது ஊடகத்தின் கடமையாகும்.

உண்மையிலேயே ஹோக்லி பிரச்சினையில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. நிச்சயமாக அது எனது எல்லைக்குட்பட்ட விவகாரம் கிடையாது.

நடந்தது என்ன என்பது தெரியாமல் அது குறித்து நான் எப்படிக் கருத்து கூற முடியும். நடந்த சம்பவத்தை விடுத்து, அடுத்து நடக்க போகும் ஆட்டம் குறித்து அனைவரும் பார்ப்போம் என்று அஸ்வின் தெரிவித்துள்ளார். (5-ரி)

## எச்சரிக்கை

ஊடகவியலாளரை தகாத வார்த்தையால் திட்டிய விவகாரம் தொடர்பாக இந்திய அணியின் உப தலைவர் விராட் ஹோக்லிக்கு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்திய வீரர்கள் அதுபோன்று மோசமாக நடந்து கொள்ள கூடாது எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்பு பேர்த் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹோக்லி, அங்கிருந்து திரும்பும் வழியில் ஊடகவியலாளர் ஒருவரை வாய்க்கு வந்தபடி வசைபாடிய விவகாரத்தால் சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்.

தன்னையும், தனது காதலியையும் பற்றி செய்தி வெளியிட்டதால் திட்டியதாகக் கூறிய ஹோக்லி, அதுபோன்ற செய்தி வெளியிட்டது வேறு ஒருவர் என்று தெரிந்த பின்பு, மற்றொரு ஊடகவியலாளர் மூலம் நடந்த சம்பவத்துக்கு மன்னிப்பு கோரினார்.

பக்கம் 04

## அநியாயம்

நவீன ஒருநாள் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கு அநியாயம் செய்கிறது என்று பாகிஸ்தான் பயிற்சியாளரான முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸ் சாடியுள்ளார்.

வேகப்பந்து வீச்சாளர்கள், ஏன் எந்த ஒரு பந்துவீச்சுக்குமே நவீன கிரிக்கெட் நியாயம் செய்வதில்லை. வட்டத்துக்குள் 5 களத்தடுப்பாளர்கள் எப்போதும் இருத்தல் அவசியம் என்றால் பந்து வீச்சாளர் கள் எங்கு பந்தைப் போடுவார்கள்?

கேளிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ என்று நான் ஊகிக்கிறேன். மக்கள் பெரிய சிக்சர்களை பார்க்க விரும்புகின்றனர். அதனால்தான் விதிமுறைகள் மாற்றப்பட்டுள்ளது.

பிட்ச்கள் மட்டையாகி உள்ளது. துடுப்பாட்ட வீரர்களின் உடல்தகுதி நன்றாக உள்ளது. மட்டைகளும் அடர்த்தியாக உள்ளது. இப்படியாக துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக நிறைய விடயங்கள் போய்க் கொண்டிருக்கிறது. இது ரசிகர்களை ஈர்க்கும் விதமாகச் செய்யப்படுகிறது.

என்னைப் பொறுத்தவரை கிரிக்கெட் ஆட்டத்தில் இருதரப்பினருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும், சம அனுகூலங்கள் இருப்பது அவசியம் என்றே கருதுகிறேன் – என்றார் வக்கார். (5-ரி)



இந்தியா- மே. தீவுகள் இடையிலான ஆட்டத்தில், இந்திய வீரர் ஜடேஜா கொடுத்த பிடியை தட்டித் தட்டிப் பிடி எடுக்கும் மே. தீவுகளின் சாமுவேல்ஸ்.

## இலங்கையின் பாதை சரியானது

உலகக் கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தினால் இலங்கை அணியின் தன்னம்பிக்கை அதிகரிக்கும் என்று அணியின் தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியை இலங்கை நாளை எதிர்கொள்கின்றது. இது தொடர்பாக இலங்கை அணியின் தெரிவு குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா கருத்து தெரிவிக்கையில், ஆஸ்திரேலியாவுடனான மோதல் மிக முக்கியமானது. அந்த அணியை வீழ்த்தும் பட்சத்தில் இலங்கை வீரர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இலங்கை அணியில் நல்ல மாற்றம் தெரிகிறது. பங்களா தேஷுக்கு எதிரான ஆட்டத்தில் சங்ககாரா, டில்ஷானும், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் திரி

பக்கம் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டும் நானே பாவமும் நானே
## வொட்ஸனின் சோகம்

சரியாக விளையாட முடியாமல் போன ஷேன் வொட்சனை ஆஸ்திரேலிய அணி, ஆப்கன் அணிக்கு எதிரான ஆட்டத்தில் உட்கார வைத்தது. 7 ஆண்டுகளுக்குப் பிறகு வொட்சனை ஆஸ்திரேலியா ஒரு நாள் ஆட்டங்களில் நீக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தனது நீக்கத்துக்குக் தானே காரணம் என்கிறார் ஷேன் வொட்சன். கடந்த 18 மாதங்களாக மூன்றாம் இலக்கத்தில் வொட்சன் களமிறங்கினார். ஆனால், ஸ்டீவ் ஸ்மித் ஆப்கன் அணிக்கு எதிராக இந்த நிலையில் களமிறங்கி ஓட்டங்களைக் குவிக்க இனி ஷேன் வொட்சனின் எதிர்காலம் ஒரு

பக்கம் 04

2015 உலகக் கிண்ணம்

**இந்தியா எதிர் மே.இ.தீவுகள்**
04 இலக்குகளால் இந்தியா வெற்றி

நாணயச் சுழற்சி மே.இ. தீவுகள்

*மே.இ. தீவுகள்*

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சிமித் | C டோனி B சமி | 06 | 20 | 01 | 0 |
| கெயில் | C சர்மா B சமி | 21 | 27 | 02 | 01 |
| சாமுவேல்ஸ் | RO ஹோக்லி | 02 | 07 | 0 | 0 |
| கார்ட்டர் | C சமி B அஸ்வின் | 21 | 43 | 03 | 0 |
| ரம்தின் | B யாதேவ் | 0 | 01 | 0 | 0 |
| சிம்மொன்ஸ் | C யாதேவ் B சர்மா | 09 | 22 | 0 | 0 |
| சமி | C டோனி B சமி | 26 | 55 | 02 | 0 |
| ரசல் | C ஹோக்லி B ஜடேஜா | 08 | 08 | 0 | 01 |
| ஹோல்டர் | C ஹோக்லி B ஜடேஜா | 57 | 64 | 04 | 03 |
| ரெயிலர் | C& B யாதேவ் | 11 | 16 | 01 | 0 |
| ரோச் | ஆட்டமிழப்பில்லை | 0 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | 21 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சமி | 08 | 35 | 03 | 02 |
| யாதேவ் | 10 | 42 | 02 | 01 |
| அஸ்வின் | 09 | 38 | 01 | 0 |
| சர்மா | 09 | 35 | 01 | 02 |
| ஜடேஜா | 8.2 | 27 | 02 | 0 |

TOTAL 182 (44.2)

1- 08 (சிமித்)
2- 15 (சாமுவேல்ஸ்)
3- 35 (கெயில்)
4 - 35 (ரம்தின்)
5 - 57 (சிம்மொன்ஸ்)
6 - 71 (கார்ட்டர்)
7 - 85 (ரசல்)
8 - 124 (சமி)
9 - 175 (ரெயிலர்)
10 - 182 (ஹோல்டர்)

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சர்மா | C ரம்டின் B ரெயிலர் | 07 | 18 | 01 | 0 |
| தவான் | C சமி B ரெயிலர் | 09 | 14 | 01 | 0 |
| ஹோக்லி | C சாமுவேல்ஸ் B ரசல் | 33 | 36 | 05 | 0 |
| ரஹானே | C ரம்தின் B ரோச் | 14 | 34 | 02 | 0 |
| ரெய்னா | C ரம்தின் B சிமித் | 22 | 25 | 02 | 0 |
| டோனி | ஆட்டமிழப்பில்லை | 45 | 56 | 03 | 01 |
| ஜடேஜா | C சாமுவேல்ஸ் B ரசல் | 13 | 23 | 02 | 0 |
| அஸ்வின் | ஆட்டமிழப்பில்லை | 16 | 32 | 0 | 0 |
| உதிரிகள் | | 26 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரெயிலர் | 08 | 32 | 02 | 0 |
| கோல்டர் | 07 | 29 | 0 | 0 |
| ரோச் | 08 | 44 | 01 | 01 |
| சிமித் | 05 | 22 | 01 | 0 |
| ரசல் | 06 | 43 | 02 | 0 |
| சாமுவேல்ஸ் | 3.1 | 10 | 0 | 0 |

TOTAL 185/6 (39.1)

1- 11 (தவான்)
2 - 20 (சர்மா)
3 - 63 (ஹோக்லி)
4 - 78 (ரஹானே)
5 - 107 (ரெய்னா)
6 - 136 (ஜடேஜா)

ஆட்ட நாயகன் சமி

# காலிறுதிக்குள் இந்தியா



ஆடினார் கோல்டர். இறுதி இலக்காக கோல்டரும் விடைபெற தீவுகள் 182 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. நிற்கின்ற போர்முக்கு இது ஒரு இலக்கா ? 25 பந்துப் பரிமாற்றத்தில் ஊதித்தள்ளி விடும் என்ற பரவலான அபிப்பிராயத்தில் களமிறங்கியது இந்தியா. 11 ஓட்டங்களுடன் விடைபெற்றார் தவான். தவானைப்பின் தொடர்ந்தார் சர்மா. 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகள்.தீவுகளின் பந்துகள் அடிக்கொரு தடவை தலையை நோக்கி எகிற ஆரம்பித்தன. அதற்கேற்ப அகலப்பந்துகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே சென்றன.

இனந்தெரியாததொரு பதட்டம் இந்திய அணியையும் ரசிகர்களையும் ஆட்கொள்ள ஆரம்பித்தது. பதட்டத்தை போக்கினார் ஹோக்லி. படிப்படியாக ஓட்டங்களை அதிகரித்துக்கொண்டு சென்றார் ரஹானேயுடன் இணைந்து. 33 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். சிறிது நேரத்தில் சினிக்கோவில் நீண்ட நேரமாக துல்லியமாக தேடப்பட்டு விடைபெற்றார் ரஹானே.

இந்திய அணியில் ரெய்னாவுடன் இணைந்து சிறந்த தலைமை இன்னிங்ஸை வெளிப்படுத்தினார் டோனி. ஆனால் ரெய்னா பொறுமை பேணும் நோக்கத்திலேயே இல்லை. இந்திய அணி 107 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள். எகிறும் பவுன்சர்களில் இலக்குகளை சரித்துவிடலாம் என்ற நம்பிக்கை கொஞ்சமும் குறையவில்லை தீவுகளுக்கு. தொடர்ந்து போராடிக்கொண்டே இருந்தனர். அவர்களால் ஜடேஜாவை மட்டும் வெளியேற்ற முடிந்தது. மேற்கொண்டு எதனையும் தீவுகளால் சாதித்துவிட முடியவில்லை. உதிரி ஓட்டங்களை அள்ளிக் கொடுத்த தீவுகள், இந்தியாவை தோற்கவிடாமல் தேற்றிக் கொண்டிருந்தனர். அஸ்வின் டெஸ்ட் பாணியில் பயணம். மறுமுனையில் தலைமை இன்னிங்ஸ் மீண்டுமொருமுறையில் நிரூபணம். முடிவில் இந்திய அணி 39 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 6 இலக்கை இழந்து வெற்றி யீட்டி ஹோலிப் பண்டிகையைசிறப்புறவழியனுப்பியது. சமி சொன்னதை டோனி செய்தார். (5-ரி)

## அதிகூடிய ஓட்டங்கள்

| | |
|---|---|
| 279 | கெயில் (மே.இ.தீவுகள்) 5 ஆட்டங்கள் |
| 270 | அன்வர் (ஐ.அ.இராச்சியம்) 4 ஆட்டங்கள் |
| 268 | சங்ககார (இலங்கை) 4 ஆட்டங்கள் |
| 257 | அம்லா (தெ.ஆபிரிக்கா) 4 ஆட்டங்கள் |
| 256 | திரிமன்னே (இலங்கை) 4 ஆட்டங்கள் |



## அதிகூடிய இலக்குகள்

| | |
|---|---|
| 13 | சவுத்தி (நியூஸிலாந்து) 4 ஆட்டங்கள் |
| 11 | டேவி (ஸ்கொட்லாந்து) 4 ஆட்டங்கள் |
| 11 | ரெயிலர் (மே.தீவுகள்) 5 ஆட்டங்கள் |
| 10 | ஸ்ரார்க் (ஆஸ்திரேலியா) 3 ஆட்டங்கள் |
| 10 | போல்ட் (நியூஸிலாந்து) 4 ஆட்டங்கள் |



# பாட்டும் நானே

நாள் போட்டிகளைப் பொறுத்த வரை கடினமே.

எனக்கு நிறைய வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. நான் ஓட்டங்களை எடுக்கவில்லை. அணியிலிருந்து நீக்கப்படுவது என்பது எப்போதும் ஏமாற்றமளிக்கக் கூடியதே. அணித் தேர்வுக் குழுவினர் என்னிடம் பேசினர். நான் போதுமான ஓட்டங்களை எடுக்கவில்லை. என் மீது தான் இதற்கான முழு காரணமும் உள்ளது. நான் என்னையே குறை கூறிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை, காரணம் நிறைய வாய்ப்புகள் எனக்கு அளிக்கப்பட்டது. நான் ஓட்டங்கள் எடுக்கவில்லை.

எனவே ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை. மீண்டும் வாய்ப்பு கிடைக்கும் அப்போது அதனை பயன்படுத்திக் கொள்வேன். இப்போதைய நிலைக்கு நானே காரணம் – என்றார். (5-ரி)



# ஆஸியை அசைக்க தீவிர பயிற்சி

உலகக் கிண்ணத்தை நடத்தும் நாடு. அதனை விட மிகப் பலமான நிலையிலுள்ள ஆஸ்திரேலிய அணியை, இலங்கை அணி நாளை எதிர் கொள்கின்றது. இதற்காக இலங்கை அணி வீரர்கள் மிகத் தீவிரமாக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். உலகக் கிண்ணத் தொடக்க ஆட்டத்தில் நியூஸிலாந்திடம் தோல்வியை தழுவினாலும், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இங்கிலாந்து ஆகிய அணிகளை வீழ்த்தி இலங்கை அணி அடுத்தடுத்த வெற்றிகளை பெற்றுள்ளது.

இந்த நிலையில் நாளை ஞாயிற்றுக் கிழமை சிட்னியில் உலகக் கிண்ணத் தொடரில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஆஸ்திரேலிய அணியுடன் இலங்கை அணி மோதவுள்ளது.

இதனையடுத்து இலங்கை வீரர்கள் தீவிர பயிற்சியில் களமிறங்கியுள்ளனர். ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி 6 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் இருக்கிறது. ஆஸ்திரேலியா 5 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலுள்ளது. (5-ரி)

# ஸ்கொட்லாந்து - பங்களாதேஷ் ஆட்டத்திலிருந்து...

ஸ்கொட்லாந்து – பங்களாதேஷ் அணிகள் நேற்று முன்தினம் மோதின. இந்த ஆட்டத்தில்,

→ கோயட்சர் – மம்சென் ஜோடி 4 ஆவது இலக்குக்கு 141 ஓட்டங்கள் சேர்த்தது. உலகக் கிண்ணத்தில் இதுதான் ஸ்கொட்லாந்து அணியின் அதிகபட்ச இணைப்பாட்ட ஓட்ட எண்ணிக்கையாகும். மேலும், 100 க்கு மேல் ஓட்டங்கள் எடுத்த ஜோடியும் இவர்களே.

* 95 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் உலகக் கிண்ணத்தில் பங்களாதேஷ் அணியில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார் தமிம் இக்பால். இவர், முகமது அஷ்ரபுல்லின் 87 ஓட்டங்கள் (2007, எதிர்: தென்னாபிரிக்கா) சாதனையை முறியடித்தார்.

* 318 ஓட்டங்கள் அடித்ததன் மூலம் டெஸ்ட் அந்தஸ்து பெறாத அணிகளில் 2 ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை எட்டிய அணி என்ற பெருமையை ஸ்கொட்லாந்து பெற்றது. இதற்கு முன், இங்கிலாந்துக்கு எதிராக அயர்லாந்து அணி 329 ஓட்டங்களை விரட்டி சாதனை படைத்தது.

→ உலகக் கிண்ணத்தில் 250 இற்கும் அதிகமான இலக்கை பங்களாதேஷ் அணி வென்றதே இல்லை. தற்போதுதான் முதல் முறையாக உலகக் கிண்ணத்தில் 300 இற்கும் அதிகமான ஓட்ட எண்ணிக்கையை விரட்டி வென்றுள்ளது. மேலும் உலகக் கிண்ண வரலாற்றில் அதிக ஓட்டங்களை விரட்டிய அணிகளில் 2 ஆவது இடத்தையும் பங்களாதேஷ் பெற்றுள்ளது. இதற்கு முன், இங்கிலாந்தை 329 ஓட்டங்கள் விரட்டி அயர்லாந்து வென்றதே அதிகபட்சமாக உள்ளது. (5-ரி)

# மொயின்கான் மீது கொட்டித் தீர்க்கப்பட்டது ஆத்திரம்

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் தொடர் தோல்விகளால் அந்த நாட்டு ரசிகர்கள் ஆத்திரத்தில் இருக்கின்றனர்.

பாகிஸ்தான் அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் இந்தியாவிடமும், 2 ஆவது ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகளிடமும் தோல்வியை தழுவியது. அணியின் இந்த மோசமான அடுத்தடுத்த தோல்வி ரசிகர்களை ஆத்திரமடையச் செய்துள்ளது.

இதற்கிடையில் பாகிஸ்தான் அணியுடன் தங்கி இருந்த தெரிவு குழு தலைவரான முன்னாள் வீரர் மொயின்கான் சூதாட்ட கிளப்புக்கு சென்றதால் சர்ச்சையில் சிக்கினார். அதனால் அவர் நாடு திரும்ப பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உத்தரவிட்டது.

இந்த நிலையில் பாகிஸ்தான் திரும்பிய மொயின்கான் கராச்சி விமான நிலையத்தில் வந்து இறங்கினார். அப்போது அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்க ரசிகர்கள் காத்திருந்தனர். அவர்கள், 'கிரிக்கெட்டுக்கு மொயின்கான் எதிரி, அவரை வெளியேற்று' என்று கோஷமிட ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து அவர் யாரையும் சந்திக்காமல் வேறு வழியாக விமான நிலையத்தில் இருந்து வெளியேறினார். இதனால் ஆத்திரம் அடைந்த ரசிகர்கள் தாங்கள் கொண்டு வந்த முட்டைகளை தங்களது தலையிலேயே உடைத்து எதிர்ப்பை வெளிகாட்டினர். (5-ரி)

## இலங்கையின் பாதை

மன்னே – சங்ககாரா ஜோடி சேர்ந்து சிறப்பாக விளையாடினர். இலங்கை அணியில் துடுப்பாட்டம் வலுவாக இருக்கிறது. அதே போல பந்துவீச்சில் மலிங்கா, திசர பெரேரா அசத்த தொடங்கியுள்ளனர். நாங்கள் சரியான பாதையை நோக்கி பயணிக்கிறோம் என்று கூறியுள்ளார். (5-ரி)

## எச்சரிக்கை

எனினும் இந்த விவகாரம் தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மற்றும், சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, ஹோக்லியை கடுமையாக எச்சரித்துள்ளது. (5-ரி)

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 4 | 0 | 0 | 8 |
| இலங்கை | 3 | 1 | 0 | 6 |
| ஆஸ்திரேலியா | 2 | 1 | 1 | 5 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 5 |
| இங்கிலாந்து | 1 | 3 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 3 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 4 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 4 | 0 | 0 | 8 |
| தென்னாபிரிக்கா | 3 | 1 | 0 | 6 |
| பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 4 |
| மே.இ.தீவுகள் | 2 | 3 | 0 | 4 |
| அயர்லாந்து | 2 | 1 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 3 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 4 | 0 | 0 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிரணிகளை புரட்டிஎடுக்கும் வீரர்களை புறக்கணித்தது இந்தியாவின் ஐ.பி.எல்.



உலகக் கிண்ணத் தொடரில் அசத்தி வரும் முன்னணி வீரர்கள், நடைபெற வுள்ள ஐ.பி.எல். தொடரில் கழற்றி விடப்பட்டுள்ளனர். அதன்படி, தென்னாபிரிக்காவின் அதிரடி வீரர் அம்லா நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் கலக்கி வருகிறார். இவர் இதுவரை 4 ஆட்டங்களில்விளையாடி 257 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவரும்மக்ஸ்வெல், வில்லியர்ஸ் போன்று அதிரடி காட்டும் வீரர் தான்.

ஆனால் ஐ.பி.எல். தொடரில் எந்த அணியும் இவரை வாங்க முன்வரவில்லை.

அடுத்து இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர்களான டில்ஷான் மற்றும் சங்ககார ஆகியோரும் இந்த ஐ.பி.எல் தொடரில் கண்டு கொள்ளப்படவில்லை. ஆனால் இவர்கள் தங்கள் அணிக்காக துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திவருகின்றனர்.

சங்ககார 4 ஆட்டங்களில் விளையாடி 268 ஓட்டங்களையும், டில்ஷான் 229 ஓட்டங்களையும் குவித்துள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி வீரர் சாமுவேல்ஸும்கழற்றிவிடப்பட்டுள்ளார். இவர் அந்த அணியில் கிறிஸ் கெய்லுக்கு அடுத்தபடியாக அதிக ஓட்டங்களைக்குவித்துள்ளார்.

4 ஆட்டங்களில் விளையாடி 192 ஓட்டங்களை எடுத்துள்ளார். (5-ரி)



# ரசிகர்களே... எனது படத்திற்கு தலைப்புச் சொல்லுங்கள்

இந்திய கிரிக்கெட் அணியின் சாதனை வீரராக இருக்கும் சச்சின், தன்னைப் பற்றிய படத்திற்கு பெயர் வைக்கும் பொறுப்பை தனது உயிருக்கு உயிரான ரசிகர்களிடமே ஒப்படைத்திருக்கிறார். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினுக்கு ஏராளமான ரசிகர்கள் பட்டாளமே இருக்கிறது. அவர் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த போது அனைவரும் சச்சின் இன்னும் கொஞ்சக் காலம் விளையாடுவதையே விரும்பினர்.

இந்த நிலையில் அவரது வாழ்க்கை படமாக வரவிருக்கிறது. இது பற்றி அவர் ருவிட்டரில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், விரைவில் என் வாழ்க்கையை அடிப்படையாக வைத்துப் படம் எடுக்கப்படுகிறது என்பதை பெருமையுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் படத்தில் உங்கள் அனைவரையும் ஈடுபடுத்த விரும்புகிறேன். படத்திற்கேற்றதலைப்பைப்பரிந்துரை செய்யுங்கள்.

உங்களின் எண்ணங்களைத் தெரிவியுங்கள். படத்திற்குப் பொருத்தமான தலைப்பை, தெரிவிப்பவர்களுக்கு ஸ்பெஷலானது காத்திருக்கிறது.

உங்களிடம் இருந்து தலைப்பைக் கேட்க காத்துக் கொண்டிருக்கிறேன், என்று ருவிட் செய்துள்ளார். (5-ரி)


**Tilko Jaffna City Hotel**



TILKO JAFFNA CITY HOTEL

- LUXURIOUS ROOMS
- BANQUET HALL
- SWIMING POOL
- GYM & SPA
- RESTAURANT
- CONFERANCE HALL
- FREE WIFI

70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka. Tel: 021 222 5969, Fax: 021 222 7201
e.mail: info@cityhoteljaffna.com Web: www.cityhoteljaffna.com



**தினம் ஒரு பரிசுப் போட்டி 22**

இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (09.03.2015) நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

............................................

பெயர் : ............................................

தே.அ.இல. : ............................................

முகவரி : ............................................

............................................

தொலைபேசி இல.: ..................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (08.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு



**பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

..............................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 28.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

**போட்டி விதிகள்**

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.



**BCAS CAMPUS JAFFNA**

5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

**மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

......................

தொலைபேசி

......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2½ லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1½ லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு



**அரையிறுதி பரிசுப் போட்டி**

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)...................... 2)......................

3)...................... 4)......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு



**MJ நியூ மைதிலி ஜூவலர்ஸ்**

யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்

தொ.பே: 021 221 7876 / 021 221 7876
E-mail: newmaithily@gmail.com
இல. 36,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**லக்கி பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்** பஸ்நிலையம் வீதி, நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி, பருத்தித்துறை.
**கனன் போட்டோ** 165 பிரதான வீதி, பருத்தித்துறை.
**சூரியா பாமசி** புதிய சந்தை, அச்சுவேலி.
**நகுலன்** 85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்** கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி வீதி, கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி.
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி.
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்** 103, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்** 14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே** செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ** கே.கே.எஸ். வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்** ஏ-9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி** ஏ-9 வீதி கொடிகாமம்.
**கஜானன்** அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி.
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்** ஏ - 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்** 31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி.
**டிலசிகா** 124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்** விசுவமடு.
**வரணா புக்சொப்** 755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்** குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்** வரணி.
**விநாயகர் களஞ்சியம்** அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்** வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,** நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்** காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை மேற்படி முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்கள் மனதில் குழப்பம் மிகுந்திருக்கும்; இதனால், அடுத்தவர் விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறு சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும்.

**இடபம்:** நிறைவேற்ற வேண்டிய பணி தாமதம் ஆவதால், மனதில் சஞ்சலம் உருவாகும். உறவினர் ஒருவரின் கூடுதல் அன்பை தொந்தரவு எனக் கருதுவீர்கள். உரிய முயற்சியால் தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும்.

**மிதுனம்:** நீங்கள் கடந்த நாள்களில் செய்த நற்செயலுக்கான நன்மை தேடி வரும்; மனதில் கூடுதல் மகிழ்ச்சியுடன் செயற்படுவீர்கள். அயல் வீட்டாருடன் உங்கள் மீது இருந்த மனக்கிலேசம் சரியாகும்.

**கடகம்:** சிலர் எதிர்பார்ப்புடன் உங்களை அணுகுவர்; நீங்கள் எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி எதனையும் வழங்க வேண்டாம். செயல்களில் நிதானம் பின்பற்றுவது, தகுந்த நன்மை பெற உதவும்.

**சிங்கம்:** உங்கள் எதிரி உருவாக்கிய கெடுசெயலை சமயோசிதமாக மாற்றுவீர்கள். சமூகப் பணியிலும் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் முன்னர் செய்த அபிவிருத்திப் பணி நல்ல பலன் தர ஆரம்பிக்கும்.

**கன்னி:** எதிர்கால நலன் குறித்த அக்கறை கொள்வீர்கள். உங்கள் குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவதில் ஆர்வம் வளரும். அன்றாடப் பணிகள் கூடுதல் கால அவகாசத்தில் நிறைவேறும்.

**துலாம்:** உங்கள் வாழ்வில் கூடுதல் வளம் பெற, புதிய வாய்ப்பு உருவாகும். முழு அளவில் பயன் அடைய நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**விருச்சிகம்:** மனதில் பெருமிதம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி நிலையை கண்டு பிறர் வியப்படைவர். இயன்ற அளவில் அறப்பணி செய்வீர்கள்.

**தனுசு:** உங்கள் வாழ்வில் கடந்த தினங்களில் உருவான சிரமங்களை சரி செய்யத் திட்டமிடுவீர்கள்; முயற்சிக்கான பயன் ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வீர்கள்.

**மகரம்:** உங்களின் கவனக்குறைவான செயலை, சிலர் பரிகாசம் செய்து பேசுவர். கூடுதல் நம்பிக்கையுடன் செயற்படுவது, உரிய நற்பயன் பெற உதவும்.


**கும்பம்:** கடந்த தினங்களில் உங்களுக்கு இடையூறாகச் செயற்பட்டவர், தன் சொந்த சிரமங்களால் விலகிப் போவார். திட்டமிட்ட செயல்களை நிறைவேற்றி கூடுதல் நன்மை பெறுவீர்கள்.

**மீனம்:** உங்கள் வாழ்வின் வளர்ச்சிக்கு எதிராக உள்ள சூழ்நிலைகளை அறிவீர்கள். சோதனைகளை வெல்ல மதிநுட்பத்துடன் புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவீர்கள்.

# ஹெட்செட் ஆபத்து

ஒரு நாளில் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக, ஹெட்செட் பயன்படுத்தினால், கேட்கும் திறன் பாதிப்படைவதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

இசையை சத்தமாகக் கேட்பதால் 1.1 பில்லியன் இளைஞர்கள் தமது கேட்கும் திறனை இழக்கும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓடியோ பிளேயர்கள், இசைநிகழ்ச்சிகள் போன்றவையும் கடுமையான அச்சுறுத்தலாகவே உள்ளன.



உங்க அலப்பறை தாங்க முடியலடா...



12 முதல் 35 வயதுக்கு உட்பட்ட 43 மில்லியன் பேர் கேட்கும் திறனை இழக்கும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பணக்கார மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் உள்ள இந்த வயதுக் கட்டமைப்புக்குள் உள்ளவர்களில் 50 சதவீதமானோர் தமது தனிப்பட்ட ஓடியோ சாதனங்களில் பாதுகாப்பற்ற அளவுகளில் சத்தத்தை கேட்பதாகவும் உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

வெறும் அழகினால்
ஆணின்
உண்மையான
அன்பைப்
பெற்றுவிடலாம் என
நினைக்கும் பெண்,
முட்டாள்..
அழகான பெண்ணே
வாழ்க்கையை
அழகாக்குவாளென
நினைக்கும்
ஆண், அடிமுட்டாள்.

I like



மரங்கொத்தி பறவையின் மீது மரநாய் ஒன்று சவாரி செய்ததை இங்கிலாந்தை சேர்ந்த ஒளிப்படக் கலைஞர் மார்டின் லீ–மே எடுத்துப் பதிவு செய்துள்ளார்.

# ரிலாக்ஸா வாசியுங்க...

நேர்முகத் தேர்வு நடத்துபவர் : நடுக் கடலில் ஒரு மாமரம் இருக்கு. அதிலிருந்து ஒரு மாம்பழத்தை எடுத்துட்டு வரவேண்டும் என்றால் எப்படி எடுப்பாய் ?

அமெரிக்க சிறுவன் : கப்பல்ல போய் எடுத்திட்டு வருவேன்...!

நேர்முகத் தேர்வு நடத்துபவர் : கப்பல் போகமுடியாத அளவுக்கு பாறை மரத்தை சுத்தி இருந்தா....?

ஜப்பான் சிறுவன் : சரி நான் விமானத்தில போய் எடுத்திட்டு வருவேன்...!

நேர்முகத் தேர்வு நடத்துபவர் : விமானம் இறங்க முடியாத அளவுக்கு பாறைகள் கரடு முரடா இருந்தா...?

நம்மாளு : அப்ப நான் பறந்து போய் எடுத்துட்டு வந்துருவேன்...!

நேர்முகத் தேர்வு நடத்துபவர் கோபத்துடன், 'பறந்து போகுறதுக்கு இறக்கை உங்கள் தாத்தா வா கொடுப்பார்...?'

நம்மாளு : கடல் நடுவுல மாமரம் உங்கப்பாவா நட்டார்...???

# சூரியனுக்கு ஆபத்தா ?

சூரிய குடும்பத்திற்கு அருகாமையில் உள்ள, பால் வெளி நட்சத்திரக் கூட்டங்களில் இருந்து ஒருவகையான துகள்கள் சூரியனை தாண்டிச் செல்கின்றன. இதனை 'டாக் மேட்டர்' என்று அழைக்கிறார்கள்.

குறித்த இந்தத் துகள்கள் சூரியனைத் தாக்கி அதன் வெப்ப நிலையைக் குறைத்து வருகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த துகள்கள் ஏன் உருவாகின்றன. அல்லது எவ்வாறு உருவாகின்றன என்பது கண்டறியப்படவில்லை. ஆனால் இவை சூரியனை தாக்கி வருகின்றன என்பது மட்டும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

ஹைட்ரஜன் தொடர் தாக்கம் சூரியனில் நடைபெறுவதால் தான், அதில் இருந்து தோன்றும் வெப்பம் மற்றும் ஒளி சகல இடங்களுக்கும் பரவுகின்றன.

ஆனால் தற்போது சூரியனை நோக்கி வரும் இந்த துகள்கள் சூரியனில் நடக்கும் தொடர் தாக்கத்தை மெல்ல மெல்ல குறைக்கும் சக்திகொண்டதாக இருக்கலாம் என்று பிரிட்டன் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதனால் சூரியனின் ஹைட்டரஜன் தொடர் தாக்கம் பாதிக்கப்பட்டு, வெப்ப நிலை குறையலாம் என்று எதிர்வுகூறுகின்றனர்.

# எமியைக் காப்பாற்றிய கருணா

உதயநிதி ஸ்டாலினுடன் எமி ஜாக்சன் நடித்து வரும் புதிய படத்தின் படப்பிடிப்பின் போது, விபத்துக்குள்ளான எமியை நடிகர் கருணாகரன் சாதுரியமாகக் காப்பாற்றினார்.

கேரளாவில் ஒரு காட்சி எடுக்கப்பட்டது. இந்த நிலையில் ஒரு மோட்டார் சைக்கிளில் உதயநிதி ஸ்டாலினும் கருணாகரனும் மற்றொரு மோட்டார் சைக்கிளில் எமி செல்லும் காட்சிகள் படமாக்கப்பட்டன. செங்குத்தான மலையோரத்தில் காட்சிகள் எடுக்கப்பட்டபோது, எமி ஜாக்சனின் மோட்டார் சைக்கிள் தடுமாறி மலையிலிருந்து சறுக்கி விழச் சென்றது. அப்போது உடனடியாக பாய்ந்து இறங்கிய கருணாகரன், மலையிலிருந்து கீழே விழ இருந்த எமியை காப்பாற்றினார். இது குறித்து எமி ஜாக்சனும் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, எமியை கருணாகரன் காப்பாற்றியதைக் குறிப்பிட்டு தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ள உதயநிதி ஸ்டாலின், 'கருணாகரன், உண்மையான ஹீரோ. எமியை காப்பாற்றினார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கருணாகரன், [illegible] என்று கிண்டலாகவும் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பாட சாலைகளின் பிள்ளை நேய அணுகுமுறை தொடர்பான கல்விக் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.கந்தாசன் கலந்து கொள்வார்.

ஆசிரியர், மாணவர், பெற்றோர் சார்பான ஆக்கங்கள் கண்காட்சிப் படுத்தப்படும். தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

யுனிசெப் நிறுவனத்தின் ஒரு செயற்றிட்டமாக இந்தக் கல்விக் கண்காட்சி இடம்பெறுகிறது. (வ)

## திருமலை மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்






திருகோணமலை, மார்ச் 7

வெளி மாவட்ட மீனவர்களுக்கு தமது கடற்பரப்பினுள் மீன் பிடிக்க அனுமதி வழங்கக் கூடாது என்று வலியுறுத்தி திருகோணமலை மாவட்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திரியாய், குச்சவெளி, நிலா வெளி, திருகோணமலை பகுதிகளைச் சேர்ந்த சுமார் 800 மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

வெளி மாவட்ட மீனவர்களின் அத்துமீறல்களால், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் சுட்டிக் காட்டினர்.

மீனவர்களின் கோரிக்கை தொடர்பில் கடற்றொழில் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் உபாலி சமரதுங்க தெரிவிக்கையில்: "இடம்பெயர் மீனவர்கள் நாட்டின் எந்தவொரு கடற்பரப் பிலும் மீன் பிடிப்பதற்கு அனுமதியுள்ளதாக அவர் கூறினார். திருகோணமலை கடற்பரப்புக்குள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான இடம்பெயர் மீனவர்களுக்குகடற்றொழில் திணைக்களத்தால் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாகவும், அவர் சுட்டிக் காட்டினார்.

திருகோணமலை கடற்பரப்பில் மீன்வளம் குறையுமானால், அந்த மாவட்ட மீனவர்கள் வெளிமாவட்டங்களில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் வெளி மாவட்ட மீன்பிடி படகொன்று கும்புறுபிட்டி கடற்கரையில் தீக்கிரையாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## மட்டு. ஊடகவியலாளருடன் சந்திப்பு அமெ. தூதரக ஊடகப் பேச்சாளர்




மட்டக்களப்பு, மார்ச் 7

மட்டக்களப்பு மாவட்டத்துக்கானபயணத்தை மேற் கொண்ட அமெரிக்கத் தூதரக ஊடகப் பேச்சாளரும், அமெரிக்கசெனட்டின்பணிப்பாளருமான நிகல்சுலிக், மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களை அண்மையில் சந்தித் துள்ளார்.

மாவட்டத்தில் பணியாற்றும் முழு நேர மற்றும் பகுதிநேர ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் ஊடகவியல் பணிகளை நேர்த்தியாகச் செய்யக்கூடிய ஏற்பாடுகள் குறித்தும், ஊடகத்துறையில் ஊடகவியலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பயிற்சித் தேவைகள் மற்றுமுள்ள வசதி வாய்ப்புக்களை மேம்படுத்துவது குறித் தும் கேட்டறிந்து கொண்டார். அத்துடன் துறைசார்ந்த ஊடகப் பயிற்சிகளை வழங்கும் ஏற்பாடுகளைச் செய்து தர முடியும் எனவும் அமெரிக்க அதிகாரி ஊடகவியலாளர்களிடம் தெரிவித் துள்ளார்.

இதேவேளை களுவாஞ்சிக் குடியில் இயங்கிவரும் இளைஞர் மேம்பாட்டுத் திட்டப் பாடசாலைக்கும் அவர் பயணம் செய்து அந்தத் திட்டத்தின் நடைமுறை குறித்தும் அறிந்து கொண்டார். அத்துடன் அமெரிக்க நிதி அனுசரணையில் இயங்கிவரும் மட்டக்களப்பு கேட்வே ஆங்கில மொழி அறிவூட்டல் கல்லூரியில் ஆங்கில மொழி கற்கும் மாணவர்களைச் சந்தித்துக் கலந்து ரையாடிய அமெரிக்க மத்திய கலாசார நிலையத்தின் பணிப்பாளர் நிக்கல் சுலிக் மாணவர்களது கற்றல் செயற்பாடுகள், மாணவர்களது ஆங்கில மொழி பேச்சாற்றல் குறித்து கேட்டறிந்துகொண்டார்.

அமெரிக்க அரசின் நிதியுதவியில் மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள 30 மாணவர்கள் இரு வருட ஆங்கில மொழிப் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டு தற்போது கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ–10)

## இடமாற்றச் சபையின் மூலம் ஆசிரியர் இடமாற்றங்கள்

### முன்னெடுக்குமாறு கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கம் வலியுறுத்து

மட்டக்களப்பு, மார்ச் 7

ஆசிரியர் இடமாற்றங்கள் தேசிய இடமாற்றசபையின் மூலமே மேற்கொள்ளப் படவேண்டும் என்று கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.ஜெயராஜா நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள் ளதாவது:

"கிழக்கு மாகாண கல்வி வலயங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தன்னிச்சையான தீர்மானங்களின் மூலம் ஆசிரியர் இடமாற் றங்களை மேற்கொள்கின்றனர். அத்துடன் பழிவாங்கும் செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன.

நீதி நியாயத்துக்காகப் போரா டும் ஆசிரியர்களுடன் அதிகாரிகள் சவால் விடுதல் போன்ற அற்பத்தனமான செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் அதிகம் காணப்படும் இடமாக திருகோணமலை கல்வி வலயம் காணப்படுகின்றது. இந்த நிலைமை உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் வரு டாந்தம் ஆசிரியர் இடமாற் றங்கள் இடம்பெறுகின்ற அதே வேளை, அதிபர்களுக்கான இட மாற்றங்கள் இடம்பெறுவதில்லை. இது ஒரு பாரபட்சமான ஏற்றத்தாழ்வு நடவடிக்கையாகும்.

ஐந்து வருடங்களை பூர்த்தி செய்த அதிபர்களுக்கு இட மாற்றங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடமாற் றங்கள் வழங்குவதன் மூலம் ஏற்றத்தாழ்வுகள், நிர்வாகச் சீர்கேடுகள், நிதிமோசடிகள் போன்ற ஊழல்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கும் ஆசிரியர்கள் அதிபர் உறவைப் பேணுவதன் மூலம் பாடசாலைகளின் அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கும் வழியேற்படுத்திக்கொடுக்க முடியும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சேவைநலன் பாராட்டு



### வி.கே. அருந்தவநாதன்

(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் வாழ்நாள் கூட்டுறவாளரும்) (07.03.2015)

குடாநாட்டில் கூட்டுறவு நிலைகுலைந்த வேளை தன்னில்
குடாநாட்டில் கூட்டுறவு உதவி ஆணையாளராய் உயர்வு கண்டீர்
பனை தென்னை வளத்துடனே, பலநோக்குக் கூட்டுறவும்
பல்வேறு கூட்டுறவும் பலங்கொண்டு இயங்கிடவே
நல்ல பல ஆலோசனை ஆற்றிநிற்கும் வல்லவனே
நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனாய் கனவிலும்
நனவிலும் கூட்டுறவின் உயர்விற்காய் உழைக்கும்
வாழ்நாள் கூட்டுறவாளனே உமை மறவோமே
எம் வாழ் நாளில்........

பனைவளம் பயன் பெற்று மனைவளம் சிறக்கவைக்கும்
சிறப்பான சேவை செய்த சிறந்ததோர் ஆணையாளர்
கூட்டுறவுத்துறை தனையே குறிப்பாக கொண்டுழைக்கும்
கூட்டுறவாளரில் ஐயா நீ முதல்வன்......
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சட்டம், விதி, துணைவிதியென
அத்தனைக்கும் மதிப்பளித்து ஏற்ற பதவிக்கும் ஏற்றம் தந்த
எங்கள் கூட்டுறவு உதவி ஆணையாளரே !!
வாழ்நாள் கூட்டுறவாளனெனும் பத்திரத்தை
கூட்டுறவாளர் ஆகிய நாம் வழங்குவதில் பெரும்
மகிழ்வடைகின்றோம்.
மனமுவந்தே வாழ்த்துகின்றோம்.
வாழியவே பல்லாண்டு.........பல்லாண்டு........

பாராட்டி வாழ்த்துவோர்:
பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவுச்
சங்கங்கள்,
கொத்தணிகள்
சமாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுபசாரமும் வரவேற்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,மார்ச் 7
யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் பிரிவுபசாரமும், வரவேற்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இடமாற்றம் பெறும் வி.கே. அருந்தவநாதனுக்கு பிரிவுபசாரமும், புதிதாக வருகை தரும் சு.கணேஷுக்கு வரவேற்பும் நடைபெற வுள்ளது. (வ-14)

TEGOSL
ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# அதியுயர் ஊடக விருதுகள் 2014

## சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் 16 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களை அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி குாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டுச் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்குக் கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிரிவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96,பேனார்ட் சோய்சா மாவத்தை, (கிருல வீதி), கொழும்பு - 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 10 ஏப்ரல் 2015 ஆகும்

# வடமராட்சி முள்ளி வீதியில் வழிப்பறிக் கொள்ளையர்கள்

## பயணிப்போர் அச்சத்தில்

கரணவாய், மார்ச் 7
வழிப்பறிக்கொள்ளையர்களின் அட்டகாசம் வடமராட்சி முள்ளி வீதிப் பகுதியில் அதிகரித்துள்ளதால் அவ்வீதிகளால் பயணம் செய்வோர் குறிப்பாக பெண்கள் பயணம் செய்ய அச்சம் தெரிவிக்கின்றனர்.
சனநடமாட்டம் குறைந்த வீதிகளில் காத்திருக்கும் பகற்கொள்ளையர்கள் தனிமையாக வருவோரிடம் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.
குறித்த பகுதியில் பொலிஸாரின் நடமாட்டமோ, பாதுகாப்போ இல்லாததை தமக்குச் சாதகமாகப் பயன் படுத்தும் இந்தத் பகற் கொள்ளைக் குழுவினர் தனிமையில் செல்வோரை பயமுறுத்தியும் வருகின்றனர்.
கடந்த புதன்கிழமை மாலை அந்த வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த பெண் ஒருவரை வழி மறித்த இரு இளைஞர்கள் தம்மை பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று கூறி அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.
அப்போது அந்த வீதி வழியாக வந்த பயணிகள் பஸ் சாரதி நிலைமையை உணர்ந்து பஸ்ஸை நிறுத்திய போது அவரையும் அச்சுறுத்தியதோடு வாகனத்தை அவ்விடத்தை விட்டு நகர்த்து மாறும் கடும் தொனியில் கூறியுள்ளனர்.
இதனை அடுத்து பஸ்ஸில் பயணம் செய்த இளைஞர்கள் இறங்கி வரவே குறித்த இருவரும் தமது மோட்டார் சைக்கிளில் பறந்து சென்று விட்டனர்.
இத்தகைய சம்பவங்கள் குறித்த வீதியில் அடிக்கடி இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.
இதேவேளை இந்தப் பகுதியில் காணப்படும் சிறிய பற்றைகளில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் மது போதையில் வரும் இளைஞர்கள் தாம் அழைத்து வரும் இளசுகளுடன் காமக்களியாட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் இதனைத் தட்டிக் கேட்கச் செல்லும் நபர்களுடன் சண்டை பிடிப்பதாகவும் அந்தப் பகுதிக்கு அண்மையிலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்வீதியில் மக்கள் பயமின்றி சுதந்திரமாக நடமாட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அந்தப் பகுதியில் இடம்பெறும் கலாசாரச் சீரழிவுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அந்தப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரிந்த நிலையில் பெண் ஒருவரின் எலும்புக் கூடும் மண்டை யோடும் மீட்கப்பட்டதுடன் கொலை செய்யப்பட்ட இளம் குடும்பப் பெண்ணின் சடலமும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-108)

## அகவை அறுபதில் சேவைநலன் பாராட்டு



சீவரத்தினம் அருணகிரிநாதன்
(பிரதம தொழில்நுட்ப உத்தியோகத்தர், தாவரவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

வையகத்தில் வயது அறுபதை
வாசமோடு பூர்த்தி செய்யும்
சீவரத்தினம் அருணகிரிநாதன்
வாழ்வில் பல பேறுபெற்று
வளமோடு வாழ்கவென
வாயார நாவார
வாழ்த்துகின்றோம் இந்நாளில்.

Best Wishes

தாவரவியல்துறை, யாழ், பல்கலைக்கழகத்தில் 1979ஆம் ஆண்டு தொடக்கம் பங்குனி 2015 வரை 36 வருடங்கள் நற்பணி செய்து ஓய்வு பெற்றுச் செல்லும்
சீவரத்தினம் அருணகிரிநாதன் அவர்களை
என்றென்றும் வளமுடன் வாழ்கவென இன்றைய நன்நாளில் வாழ்த்துகின்றோம்.
தாவரவியல்துறை சமூகம் - யாழ் பல்கலைக்கழகம்
07.03.2015

## 'ஆன்ம சங்கமம்'

வலி.தென்மேற்கு,மார்ச் 7
இராமகிருஷ்ண மிஷன் நலன் புரி நிலையமும் சிவகாமி அம்பாள் ஆலய பரிபாலன சபையும் இணைந்து நடத்தும் ஸ்ரீஇராம கிருஷ்ணரின் 'ஆன்ம சங்கமம்' என்ற நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சிவகாமி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.ராதா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ரிதமயானந்தஜி மகராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.
இராமகிருஷ்ண மிஷன் நலன் புரி நிலையத்தைச் சேர்ந்த நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகன் 'சுவாமி விவேகானந்தர் அழைக்கிறார்' என்ற தலைப்பில் ஆன்மிக உரை நிகழ்த்துவார்.
இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு திரிமூர்த்திகளின் அருளைப் பெறுமாறு ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.
இந்நிகழ்வில் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு படக் கண்காட்சியும் இடம்பெறும். (வ-115)

## வாஞ்சையுடன் வாழ்த்துகின்றோம்



31 ஆண்டுகள் ஆசிரியப் பணியில் யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 27 ஆண்டுகள் புவியியல் ஆசிரியராய், பகுதித்தலைவராய் சிறப்பாகக் கடமையாற்றி இன்று (07.03.2015) சனிக்கிழமை ஓய்வுபெறும்

மணிவிழா நாயகன்
உயர்திரு சுப்பிரமணியம் கிருஷ்ணராஜா அவர்கள்
(B.A, Dip.in Edu., SLTS-1)

புவியியல் பயிற்றுநற் புவியியலாளனாய்
புவியியல் ஆசான்கள் வியக்குவித்தகனாய்
செவிநுகர் கனிகளென கல்விதரு வித்தகனாய்
புவிமிசை என்றும் நீர் இனிதுவாழி வாழி

நண்பராய் மந்திரியாய் நல்லாசானாய்
பண்பினனாய் நல்லுறவாய் நெடுமகனாய்
புண்படாத வார்த்தைபேசு வாய்மையனாய்
கண்ணுலாவு நேசரேநீர் வாழி வாழி

திடம்கொள் நெஞ்சனாய் தந்தையாய்
உடன்பிறவாச் சோதரராய் உத்தமராய்
தடங்கன் புளியடியான் தண்ணளியான்
தடத்தில் வளர்பவரே இனிது வாழி

Congratulations

அன்புடன்
"செல்லமுத்தூஸ்"
புடைவை மாளிகை, நெல்லியடி.
(54228)(45.3.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழாவின் இறுதிநாள் திருவிழாவில் வைரவப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூச் சப்பரத்தில் வீதி வலம் வந்தார். (வ–17)

# பெண்கள் பிரச்சினை குறித்த இரு குறுந்திரைப்படங்கள்

## பிரிட்டிஷ் கவுன்சில் யாழ் கிளையால் இன்று திரையிடல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் பிரச் சினைகள் தொடர்பாக இரு குறும் திரைப்படங்களை திரையிட பிரிட்டிஷ் கவுன்சில் யாழ் கிளை தீர்மானித்துள்ளது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 2.30 மணி வரையில் 'ரோஜா சேலைகள்' என்ற திரைப் படமும்,3 மணிமுதல் 4.30 மணி வரை 'சல்மா' என்ற திரைப் படமும் திரையிடப் படவுள்ளன.

ரோஜா சேலைகள் திரைப்படம் உத்தரப் பிரதேசத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு ரோஜா குழுவினர் தமது பாணியில் தண்டனை வழங்குவதைப்பற்றி விவரிக்கின்றது.

சல்மா திரைப்படம் ஒரு பெண் ஆளுமையுள்ள அரசியல்வாதியாக வருவதை விவரிக்கிறது.

இவ்விரு திரைப்படங்களும் இலங்கைப்பெண்களின் பிரச்சினைகளை ஒத்தவை.

கிம் லோகிண்டோவினால் இயக்கப்பட்ட இந்த இரு குறும்படங்களும் பல விருதுகளைப் பெற்றுள்ளன.

15 வயதுக்கு மேற்பட்ட பெண்களை பிரிட்டிஷ் கவுன்சில் பெண்கள் அன்புடன் வரவேற்கின்றனர். (வ)

# பொதுக் கூட்டம்

வடமராட்சி,மார்ச் 7

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறைப் பிரதேச சங்கத்தின் 5ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் க.கதிரமலை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.கிருபாகரன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ். சீவரத்தினம், நிதி உதவியாளர் வே.சிவகுமாரன், பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்க யாழ். மாவட்ட தலைவர் வி.சிறிசக்தி வேல் ஆகியோர் கலந்து கொள் வார்கள்.

நம்பிக்கை நிதிய பிரதேச சங்க உறுப்பினரான ஏ.என். எஸ். திருச்செல்வம் கலா பூஷணம் விருது பெற்றமைக்கான கௌரவிப்பும் இடம்பெறும். (வ–173)

# ஆலோசனைக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 7

முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலய பாடசாலையைக் கட்டியெழுப்பும்வேலைத்திட்டத்துக்கான ஆலோசனைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

வித்தியாலய கலையரங்கில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ–4)


**காணி விற்பனைக்கு**

கொக்குவில் மேற்கு, ஞானபண்டிதா வித்தியாசாலைக்கு அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொ.பே: 075 210 2281 (57535) (45.3.7)

**வேலைக்கு ஆள் தேவை**

கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள திருமண சேவைக்கு பெண் உதவியாளர் தேவை. (வயது வந்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : - 077 321 8664

**காணிகள் விற்பனைக்கு**

பூநகரி நல்லூர் - கிளி/ 59 கி.சே பிரிவில் உள்ள நெடுங்கேணியில் 254 பரப்பும், ஆவரஞ்சாட்டியில் 47 பரப்பும், சட்டுவானையில் 27 பரப்பும், வான்கேணியில் 20 பரப்பும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

077 815 3187,077 612 5314

**யாழ். மாவட்ட உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்**

நாளை (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உழவு இயந்திர உரிமையாளர் ஆகிய நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு சங்கம் அமைப்பது தொடர்பாக ஒன்றுகூடல் ஒன்று நடத்த உள்ளோம். இதில் பங்குபற்றித் தங்களுடைய கருத்துக்களைக் கூறி இந்தச் சங்கத்தை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இடம்: பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு (டிப்போ அருகில்) - செயற்குழு

(57536) (45.7.3)


# ஆவண காப்பக திரையிடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 7

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் எட்டாவது நிகழ்வாக "வேறுபாட்டை உருவாக்கும் அப்படியொரு நாள்" நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். அடையாளம், முரண்பாடு பற்றிய பல்பகுதித் திரைப்பட நிகழ்வின் ஒரு பகுதியாக இடம்பெறும் இந்தத் திரையிடலை அனோமா ராஜகருணா உட்பட இன்னும் சிலர் எடுத்தாளுகை செய்துள்ளனர். (ஓ)

# ஜென்ம தின வைபவம்

ஆவரங்கால், மார்ச் 7

ஸ்ரீ கல்கி பகவானின் 67 ஆவது ஜென்மதின வைபவம் ஆவரங்கால், பருத்தித்துறை வீதியிலுள்ள ஆதவன் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த வைபவத்தில் விசேட நிகழ்வாக 67 திரவியங்களால் விசேஷ பாதுகாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஓ)


YOU CREATE

திருமறைக் கலாமன்றமும் கெயார் நிறுவனமும் இணைந்து நடாத்தும்

**கலைப்பொழுது**

இளையோர் உருவாக்கல் செயற்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளையோர் வழங்கும்

- நடனங்கள்
- நாடகம்
- கூத்து ஆடல் வடிவங்கள்
- குவேனி நாட்டுக்கூத்து

காலம் : இன்று (07.03.2015) சனிக்கிழமை

நேரம் : மாலை 5.30 மணி

இடம் : புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபம், இளவாலை.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

இணைப்பங்காளர்கள்:

பிரதேச செயலகங்கள்- யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய்

பிரதேச இளையோர் சம்மேளனம் - சண்டிலிப்பாய்

திருமறைக்கலாமன்றம் - இளவாலை

European Union

care

**மானிப்பாய் கோவில் பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**பதவிவெற்றிடம்**

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி : கணக்காளர். சம்பள குறி இல: 104/10

சம்பள அளவுத் திட்டம் :- 10700-120 X 10-130 X 10-13200

அ) கூட்டுறவுப் பணியாளர் 11 சம்பளத் திட்டக் கணக்குத் பதிவியலாளர் அல் லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பாணியாளர் 12 ஆவது சம்பளத்திட்டக் கணக்குப் பதிவியளாலர் அல்லது கணக்குப்பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியில் ஆறு (06) வருடங்களுக்குக் குறை யாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியல்ாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறு வனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்கள் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திர சித்தி/ கூட்டுறவு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பபடிவத்தை காரியாலயத்தில் ரூ 10 /= செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும். பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்துடன் கல்விச் சான்றிதழ். வதிவிடச்சான்றிதழ். பிறப்புச் சான்றிதழ். அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் 21.03.2015ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனுப்பப்படும் தபால் உறையின் இடது மேல் மூலையில் கணக்காளர் பதவிக் கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அப்பணியாளர்கள் தங்கள் சங்கத்துக் கூடாக விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்

கோவில்பற்று ப. நோ. கூட்டுறவுச் சங்கம் (வது),மானிப்பாய்.

**வரலட்சுமி**

**பிளாஸ்ரிக் வார்ப்பு தொழிலகம்**

சகல மோட்டார் வாகனங்களுக்குமான பிளாஸ்ரிக் பொருள்கள் புதிதாகவும் வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

உடைவுகளும் ஒட்டிக் கொடுக்கப்படும்.

இரண்டு வருட உத்தரவாதம் வழங்கப்படும்.

தொ.பே: கி.கேதீஸ்வரன் (57403) (4.3.7)

இல.286/2, அரசடி வீதி, நல்லூர். 077 351 2593

**பொருள்கள் விற்பனைக்கான கூறுவிலை கோரல்**

இணையத்தின் பாவனையில் இருந்த பொருள்கள் விற்பனை செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. அவற்றை திருத்தம் செய்து உபயோகிக்க முடியும். பொருள்களை பார்வையிட விரும்புபவர்கள் அலுவலக நாள்களில் காலை 9.00 - பிற்பகல் 4.00 மணிவரை இணையக் காரியாலயத்தில் பார்வையிடலாம். கூறுவிலைகள் 16.03.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "கூறுவிலை" எனக்குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

பொருள்கள் விவரம்:

1. போட்டோபிரதி இயந்திரம் - Sharp
2. Multimedia Projector
3. Computer
4. Scanner

தலைவர்,
யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
40, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**மணமகள்கள் தேவை**

☆ 80இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 24¼ பாவமுடைய மெக்கானிக் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

☆ 81 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 41 பாவமுடைய BBA முடித்து வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை

☆ 80இல் பிறந்த 4இல் செவ்வாய் 21 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

☆ 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 28½ பாவமுடைய C.I.M.A Accountant மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

☆ 82இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 23¼ பாவ முடைய வங்கியில் பணிபுரியும் சைவபோசன மண மகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

☆ 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 47 பாவமுடையஅரச சேவையாளராக பணிபுரியும் சைவபோசன மணமகனுக்கு சைவபோசன பட்டதாரி மணமகள்தேவை.

☆ 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 43 பாவமுடைய சைவபோசன டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி சைவபோசன மணமகள் தேவை.

☆ 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 26 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு BSC எக்கவுண்டன் இஞ்சினியர் மணமகன் தேவை.

☆ 85 இல் பிறந்த செவ்வாய் 73 பாவமுடைய நோர்வே பிரஜா உரிமைபெற்ற டாக்டர் மணமகளுக்கு, எக்கவுண்டன் இஞ்சினியர் மணமகன் தேவை.

கமலக்கண்ணன் திருமணசேவை

இல 62, இராமலிங்கம் வீதி,

[illegible]

TP : 077 607 0862

Majestic Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




பிரோன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021-2227712


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 05 . 1931

இறப்பு 04 . 03 . 2015

### கனகசபை மனோன்மணி (சின்னமணி)

வேலணையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை 2ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை மனோன்மணி 04.03.2015 புதன்கிழமை அன்று காலமானார் அன்னார் காலம்சென்ற அருணாசலம் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலம்சென்ற செல்லையா -பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையா- கனகசபையின் அன்பு மனைவியும் காளஞ்சென்றவர்களான மீனாட்சி, கனகம்மா, சிவபாக்கியம் மற்றும் அருளானந்த சிவலிங்கம் (சத்தியபாலன்) - (லண்டன்), ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி கலைவாணி (ரஜனி -லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனியும் ராணி, விஜயா(மிருசுவில்), ஜெயா(லண்டன்), செந்துநாதன் (லண்டன்), ஈசன், சிவம், ரங்கன், யோகன், சுகந்தன்(பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயும் இராஜலிங்கம் ரத்தினம்(மிருசுவில்) காலஞ்சென்றவர்களான சிவபாலன் கோபிதாஸ் (லண்டன்) மற்றும் ரோகினி (லண்டன்), சாந்தி, வனிதா, கௌரி குமுதா தாட்ஷா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் நித்தியா (அவுஸ்ரேலியா), நிரஞ்சன் (லண்டன்), நிஷானி, நித்தியா, டலிஷா,கவிஷா, டினா, பிருந்தன்(மிருசுவில்) தனுஷா, தர்ஷா, அனித், ரோசியன், வினோயா, எலக்ஷா, பதுஷா(லண்டன்), அபிராமி, சுபாஸ், நிவாஸ், நிருஷா, நிக்கோலா, எரிக்,அபர்ணா, கெவின், மனோஜ், அருஷன், ரனுஷன், சதுஷன், சுருதி, தர்ஷித்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.03.2015) ஞாயிற்றுக்கிழமை படித்தமகளீர் திட்டத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் படித்த மகளீர் திட்ட இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்


இல. 16, படித்த மகளிர் திட்டம் மிருசுவில்.
077 9594 391

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவஞானம்

(சமாதான நீதிவான்)



மலர்வு 22.07.1942

உதிர்வு 06.03.2015

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாவும் வவுனியா, பண்டாரிக் குளத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆறு முகம் சிவஞானம் 06.03.2015 வெள்ளிக்கிழமை அதிகாலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பறுவதம் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், செல்வத்தின் அன்புக் கணவரும், ஞானச்செல்வன் (இங்கிலாந்து), ஞானச்செல்வி (நோர்வே), கலைச்செல்வி (சுவிற்சர்லாந்து), பவானி (இலங்கை வங்கி -தலை மையகம்) ஆகியோரின் தந்தை யும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - தம்பிராசா, இராசதுரை, தவமணி மற்றும் யோகலட்சுமி, பாலச்சந்திரா (கனடா) ஆகியோரின் சகோதரரும், தங்கரத்தினம் பத்மாதேவி (கனடா), அற்புதமேரி, காலஞ்சென்ற தியாகராசா, சோமதிருச்செல்வம், சர்வேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி, நாகேஸ்வரி (கனடா) ஆகியோ ரின் மைத்துனரும், லசந்தினி (இங்கிலாந்து) அருள்மாறன் (நோர்வே), வேல்மாறன் (சுவிற்சர்லாந்து), அருணன் (ஹற்றன் நஷனல் வங்கி, வவுனியா) ஆகியோரின் மாமனும், அக்ஷன், ஆஷகன், அருட்சுணன், அபிஷன், அயிவவன், அபிநயா, அபிராம், அகிஷன், அனுஷன் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.158,
2 ஆம் ஒழுங்கை, பண்டாரிக்குளம்,
வவுனியா.
தொ.பே. 024 222 1830

தகவல்:
குடும்பத்தினர்.

(56220) (15.3.7)

## மரண அறிவித்தல்



### பேரம்பலம் பாலசுப்பிரமணியம் (BATA பாலா)

(நுகேகொட பிரபல வர்த்தகர்,
கோபிநாத் D.S.I ஏஜென்சி (வவுனியா),
K.T.M. பஸ் உரிமையாளர்)

காரைநகர் களபூமி பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், 83/1, ஹம்டன் லேன் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் பாலசுப்பிரமணியம் நேற்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் (Jaffna Stores) பேரம்பலம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிறாப்பர் முருகேசம்பிள்ளை - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலினி, கோபிநாத் (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்குமாரின் (Navigation officer) மாமனும், அருளாம்பிகை, அருட்செல்வம், கமலாதேவி, சிவபாதம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சபாரட்ணம், காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவசுப்பிரமணியம், தவமணி, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சந்திரமதி, ஞானாம்பாள், கமலாதேவி, சுந்தராம்பாள், கணேசலிங்கம், தேவநாயகி ராஜகுலசூரியர் ஆகியோரின் மைத்துனரும், ராஜலிங்கம், சிவபாலன், பரஞ்சோதி, காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் செல்வராஜா, ஈஸ்வரி, தயாபரிதேவி, புஸ்பகாந்தி ஆகியோரின் சகலனும், கனகேஸ்வரியின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்டின மலர்சாலையில் இன்று (07.03.2015) சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பொரளை பொதுமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83/1, ஹம்டன்லேன்,
வெள்ளவத்தை.
011 236 5325

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

(57388) (45.3.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Google Glass விற்பனை இடைநிறுத்தம்

கூகுள் நிறுவனம் கடந்த வாரம் அறிவித்ததை போன்று நேற்றைய தினத்துடன் தற்போதைய வடிவமைப்பைக் கொண்ட Google Glass விற்பனையை நிறுத்தி யுள்ளது.
2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதன் முறையாக Google Glass அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ளன.
நேற்றைய தினம் ஒரு Google Glass ஆனது 1500 அமெரிக்க டொலர்கள் பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் Google Glass இன் புதிய பதிப்பு விரைவில் அறிமுகமாகலாம் எனவும், இதன் பெறுமதியும் 1500 டொலர்கள் வரை இருக்கலாம் எனவும் எதிர்பார்க் கப்படுகின்றது.

# வயர்லெஸ் சார்ஜ் தொழில்நுட்பத்தைக் கொண்ட ஸ்மார்ட் கடிகாரம்

சம்சுங் நிறுவனம் விரைவில் வயர்லெஸ் தொழில்நுட்பம் மூலம் சார்ஜ் செய்யக்கூடிய ஸ்மார்ட் கைக்கடிகாரத்தை அறிமுகம் செய்யவுள்ளது.
இது தொடர்பாக SamMobile நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலின்படி இந்தக் கடிகாரமானது Orbis எனும் பெயருடன் வட்ட வடிவம் உடையதாக சம்சுங் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
மேலும், இதில் Tizen இயங்குதளம் நிறுவப் படவுள்ளதாகவும், பார்சிலோனாவில் இடம் பெறவுள்ள Mobile World Congress நிகழ்வில் அறிமுகப்படுத்தப்படலாம் எனவும் தெரிகிறது.







# மலேரியாவை எதிர்க்கும் மரபணு மாத்திரை கண்டுபிடிப்பு

மலேரியா நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிகளின் தாக்கத்தை கட்டுப்படுத்தக்கூடிய மரபணு மாத்திரை உருவாக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் குறிப்பிட் டுள்ளனர்.
மலேரிய ஒட்டுண்ணிகளுடன் இணைந்து அவற்றின் வீரியத்தை குறைக்கவல்ல பிறழ்வுள்ள மரபணு வைக் கொண்டு இந்த மாத்திரை உருவாக் கப்பட்டுள்ளது.
தாய்லாந்திலுள்ள Mahidold Oxford Tropical Research Unit (MORU) இல் பணியாற்றும் Dr.Olivo Miotto என்பவர் இதுபற்றி குறிப்பிடுகையில்; Artemisinin எனப்படும் இந்த மாத்திரை நீண்டகால ஆய்வின் பின்னர் மலேரிய ஒட்டுண்ணிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட சிறந்த மாத்திரை என தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேரளாவின் திருவனந்தபுரம் ஆற்றுக்கால் பகவதியம்மன் கோயில் பொங்கல் விழா நேற்று முன்தினம் நடைபெற்ற போது ,பிரபல நடிகைகள் உட்பட சுமார் 35 லட்சம் பெண்கள் பொங்கலிட்டு அம்மனை வழிபட்டனர். (14)

## போகோஹராம் தலைவரை சுட்டுக் கொல்வோம்

நின்ட்ஜாமினா,மார்ச் 7

நைஜீரியா, கமரூன் மற்றும் சாட் நாட்டில் தாக்குதல் நடத்தி வரும் போகோஹராம் தீவிரவாத குழுவின் தலைவர் அபுபக்கர் செகாவு எங்கு இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியும். அவர் உடனடியாக எங்களிடம் சரணடையா விட்டால், அவர் சுட்டுக் கொல்லப்படுவார் என்று சாட் நாட்டின் ஜனாதிபதி இத்ரிஸ் டெபி எச்ரிக்கை விடுத்துள்ளார்.

நைஜீரியாவில் சன்னி பிரிவின் போகோஹராம் தீவிரவாதிகள் கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு வன்முறைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அவர்களின் தாக்குதலில் இதுவரை ஆயிரக்கணக்கான மக்கள் சாவடைந்துள்ளனர். நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவிகளை அவர்கள் பணயக் கைதிகளாக சிறைப் பிடித்து வைத்துள்ளனர்.

நைஜீரியாவின்பல்வேறுபிராந்தியங்களில் போகோஹராம் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதல்களால், ஏராளமான நைஜீரிய மக்கள் அருகில் இருக்கும் சாட் மற்றும் கேமரூன் நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து, சாட் மற்றும் கமரூன் நாடுகளிலும் போகோஹராம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். நைஜீரிய மக்களுக்கு சாட் மற்றும் கமரூன் நாடுகள் தஞ்சம் அளிக்கக்கூடாது. அவ்வாறு அவர்கள் செய்தால், அவர்கள்மீது தாக்குதல் நடத்தவும் தயங்க மாட்டோம் என்று போகோஹரம் தீவிரவாத இயக்கத் தலைவர் அபுபக்கர் செகாவு எச்சரிக்கை விடுத்தார்.

போகோஹராம் தீவிரவாதத் தலைவர் அபுபக்கர் செகாவு கடந்த 3 நாள்களுக்கு முன்னர் திக்வா நகரில் இருந்து தப்பி ஓடியிருக்கிறார். அவர் உடனடியாக எங்களிடம் சரணடைந்தால், அவரை உயிருடன் சிறை பிடிப்போம். இல்லையென்றால், அவர் சுட்டுக்கொல்லப்படுவார் என்று சாட் நாட்டின் ஜனாதிபதி இத்ரிஸ் டெபி எச்சரிக்கை விடுத்துள்ளார்.(14)

## தினமும் பல தடவைகள் தூங்கும் பெண்



லங்காஷயர்,மார்ச் 7

பிரிட்டனின் லங்காஷயர் நகரில் வசித்து வரும் ஜாக்கி லாயிட் என்ற பெண், நான் நார்கோலெப்சி என்னும் தூக்க நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இவர் எப்போது தூங்குவார் என்பதே தெரியாது. இவரது நோய்க்கு எந்த மருந்தும் பயனளிக்காததால், சுயமாக மருத்துவம் செய்து கொள்ள அமெரிக்க சுகாதார துறையிடம் அனுமதி கோரினார். ஆனால் அவ்வாறு செய்வது பாதுகாப்பற்றது என்பதால், அவருக்கு அனுமதி அளிக்க சுகாதாரத்துறை மறுத்துவிட்டது.

அதையடுத்துதனது இரண்டுகுழந்தைகளின் உதவியுடன்,தன்னுடைய நிலை குறித்த வீடியோ ஒன்றை, பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் லாயிட் வெளியிட்டார். சமையல் கலைஞராக பணிபுரிந்த நான் கத்தியை பயன்படுத்தும்போது தூங்கியதால் என் வேலை பறிபோனது. நிற்கும்போது தூக்கத்தின் காரணமாக கீழே விழுந்து பலமுறை காயமடைந்துள்ளேன். இதனால் என் குழந்தைகளுடனும் என்னால் சரியாக பேசமுடியவில்லை. மேலும் கார் ஓட்டுவதையும் நிறுத்தி விட்டேன் என அந்த வீடியோவில் லாயிட் தமது சிரமநிலை குறித்துப் பேசியுள்ளார்.

# முடிவுறும் நிலையில் அணுசக்தி ஒப்பந்தம்

### ஈரான் வெளியுறவு அமைச்சர் தகவல்

வொஷிங்டன்,மார்ச் 7

அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இதுதொடர்பான பிற விவரங்கள் குறித்து பேச்சு நடைபெறுகிறது. இதேபோல், உலகின் சக்தி வாய்ந்த 6 நாடுகளுடன் அணுசக்தி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமது ஜாவத் ஜரீப் தெரிவித்துள்ளார்.



ஈரான் நாட்டில் அணுசக்தியைப் பயன்படுத்தி ஏராளமான அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக கடந்த காலங்களில் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்தன. ஈரான் மீது பல்வேறு பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டன. எனினும், காலப்போக்கில் இங்கிலாந்து, ஜேர்மனி, சீனா மற்றும் ரஷ்யா நாடுகள் ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தங்களை மேற்கொள்ளத் தொடங்கின.

அதைத் தொடர்ந்து, அமெரிக்காவும் ஈரான் நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தம்மேற்கொள்ளமுன்வந்தது. இதுதொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமது ஜாவத் ஜரீப்புடன் அமெரிக்க வெளியுறவு செயலர் ஜோன் கெர்ரி பேச்சு மேற்கொண்டு வருகிறார். ஈரான் நாட்டுடன் அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டால், அந்த நாடு தன்னிடம் உள்ள அணுப் பொருள்களை வைத்து அதிகளவில் அணு ஆயுதங்களைத் தயாரிக்க வழிவகுக்கும். இந்த ஒப்பந்தத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்க செனட் சபையில் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமது ஜாவத் ஜரீப், வொஷிங்டனில் தொலைக்காட்சி ஒன்றுக்குச் செவ்வி வழங்கியிருந்த போது ஈரான் நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்க தரப்பில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன்போது அரசியல் ரீதியான பேச்சுக்கள் முடிவடைந்தன. தற்போது அணுசக்தி ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தை எட்டியுள் ளது. அணுசக்தி தொடர்பாக பிற விவரங்களை இணைப்பது குறித்து பேச்சு நடைபெறுகிறது.

நாங்கள் எங்களிடம் உள்ள அணுசக்தியை சர்வதேச சமுதாயத்துக்கு பயன் அளிக்கும் வகையில் மட்டுமே பயன்படுத்த அணுசக்தி ஒப்பந்தங்களைமேற்கொண்டுவருகிறோம் எனத் தெரிவித்துள்ளார். (14)

## பறந்துகொண்டிருந்த விமானத்தை தொட முயன்ற சுற்றுலாப்பயணிகள்

ஜமைக்கா,மார்ச் 7

கரீபியன் தீவில் உள்ள மாகோ கடற்கரையில் சுற்றுலாப்பயணிகள் குளித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், பிரம்மாண்டமான பயணிகள்விமானம்ஒன்று கடலில் மிதந்து வருவது போல் தோற்றமளித்தது.



அப்போது அந்த விமானம் கடலுக்கு மிக நெருக்கமாக வந்து கொண்டிருப் பது தெரிந்தது. சிலர் விமானத்தின் முன் நின்று செல்பி எடுக்க முயற்சி செய்தனர். விமானம் கடற்கரையை நெருங்கி வந்ததும் அனைவரும் விமானத்தை தொட்டு விடலாம் என்ற நம்பிக்கையில் உற்சாகமாக கத்தியபடி துள்ளிக் குதித்தனர். சில அடி தூரத்தில்விமானம்தொடமுடியாதஉயரத்தில்பறந்துசென்றது.பின்னர்,செயின்ட் மார்டினில் உள்ள பிரின்சஸ் ஜுலியானா சர்வதேச விமான நிலையத்தில்அந்தவிமானம் பத்திரமாக தரை இறக்கப்பட்டது. (14)

## பொதுச்சொத்தை சேதப்படுத்தியவர்களுக்கு 9 மாத சிறை

கோலாலம்பூர்,மார்ச் 7

சிங்கப்பூரில் பொதுச் சொத்தைச் சேதப்படுத்தியமை மற்றும் அத்துமீறி நுழைந்தமை உள்ளிட்ட குற்றங்களுக்காக ஜேர்மனியர்கள் இரண்டு பேருக்கு 3 பிரம்படிகளும் 9 மாதச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

இருவரும் ரயில் ஒன்றின் மீது ஸ்ப்ரே மூலம் எழுத்துக்களைப் பதித்து பொதுச் சொத்தைச் சேதப்படுத்தியதாக தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டுள்ளனர். இந்தக் குற்றங்களை செய்து விட்டு சிங்கப்பூரில் இருந்து தப்ப முயன்ற இருவரையும் மலேஷியாவில்பொலிஸார்கைதுசெய்தனர்.(14)



# பனி மழையில் சிக்கிய 220 பேர் மீட்பு

ஜம்மு,மார்ச் 7

பனி மழையில் சிக்கிய 220 பேரை இந்திய விமான படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர். ஜம்முவில் உள்ள கிஷ்ட்வார் மாவட்டத்தில் கடும் பனி மழை பெய்து வருகிறது. இதனால் அங்கு வாழும் டிக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுவருகிறது.

அதைத் தொடர்ந்து அவர்களை மீட்கும் பணியில் 130 ஹெலிகொப்டர் குழுவினர் ஈடுபட்டனர். இது குறித்து விமானப்படை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 130 ஹெலிகொப்டர் குழுவினர் ஜம்முவில் ஒதுக்குப்புறமாக உள்ள கிஷ்ட்வார் மாவட்டத்தின் நவபச்சி, சோர் தார் ஆகிய கிராமங்களுக்குச் சென்றனர். அங்கு பெருமளவில் பனி கொட்டியதுடன் கடும் குளிர் வாட்டிக் கொண்டிருந்தது. இருந்தாலும் அவற்றைக் கருத்தில் கொள்ளாத மீட்புப் படையினர், பனி மழையில் சிக்கித் தவித்தவர்களில் 220 பேரை பத்திரமாக மீட்டு கிஷ்ட்வார் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தனர். மேலும், கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தில் ஜம்மு—காஷ்மீரில் ஏற்பட்ட வெள்ளத்தில் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொண்டவர்களும் இந்த மீட்புக் குழுவினர்தான் என்பது குறிப்பிடத்தக்கது என்வும் தெரிவித்தார். (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51 வயதான நபர் ஒருவரிடம் 50 ஆயிரம் வகை பேனாக்கள்

வொஷிங்டன்,மார்ச் 7

நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் டென்னிஸ் ஹாமில்டன். 51வயதான இவரிடம்தற்போது சுமார் 50ஆயிரம் வகையான பேனாக் கள் உள்ளன.

இது குறித்து அவர் கூறியதாவது: தன்னுடைய ஐந்தாவது வயதில் முதன் முறையாக தமது தந்தையிடம் இருந்து முதல் பேனாவைப் பெற்றவேளைமுதல்பேனா மீதான தமது மோகம் தொடங்கியதாகத் தெரிவித்துள்ளார். இருப்பினும் போனாக்களை தொடர்ந்து சேகரிக்கும் பழக்கம் கடந்த 25ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார். இவர் மை ஊற்றும் பேனா , போல்பாயின்ட் பேனா உட்பட பல்வேறு வகையான பேனாக்களைச் சேகரித்து வைத்துள்ளார். தன்னுடையபேனா சேகரிக்கும் பழக்கம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதா என்பது தெரியாது. அதே நேரத்தில் என்றாவது ஒருநாள் இது சாதனையாக ஏற்கப்படும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.(14)

# திக்ரித்தில் தொடரும் போர் மக்கள் பெரும் பாதிப்பு



பக்தாத்,மார்ச் 7

ஈராக்கில் திக்ரித் நகரை இஸ்லாமிய அரச ஆயுதக் குழுவினரிடம் இருந்து மீட்பதற்காக அரச படைகள் தாக்குதல்களை ஆரம்பித்து 5 நாள்களாகும் நிலையில், அந்தப் பகுதியில் வாழும் ஈராக்கிய பொது மக்களின் சிரமங்கள் குறித்து கவலைகள் அதிகரித்து வருகின்றன.

அரச படைகளோடு ஷியா ஆயுதக் குழுக்களும் சேர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றனர். முற்றுகையிடப்பட்டுள்ள இந்த ஊரில் இருந்து இடம்பெயர நேர்ந்துள்ளவர்கள் என நம்பப்படும் ஆயிரக்கணக்கான மக்களுக்காக நிவாரணப் பொருள்களை வாகனத் தொடரணிகளில் ஐநா அனுப்பியுள்ளது.

அரச படைகளின் தாக்குதலில் முக்கிய பங்கு வகிக்கும் ஈரான் ஆதரவு பெற்ற ஷியா ஆயுதக் குழுக்கள் ஒரு வகுப்புவாத பழிவாங்கலாக மாறிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது என அமெரிக்காவும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் எச்சரித்துள்ளன.

கடந்த வருடம் இஸ்லாமிய அரச ஆயுததாரிகள் திக்ரித்தை பிடித்த போது நூற்றுக்கணக்கான ஷியா இன சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். ஆயுததாரிகள் புதைத்து வைத்திருந்தசாலையோர குண்டுகள் மற்றும் பதுக்கிவைக்கப்பட்ட வெடிகள் காரணமாக அரச படைகளின் முன்னேற்ற வேகம் குறைந்துள்ளது. திக்ரித்தையும் அருகிலுள்ள இடங்களையும் சகல பக்கத்திலிருந்தும் சுற்றிவளைத்து முழுமையாக அடைத்துவிட்டு பின்னர் நகருக்குள் படையெடுப்பது என அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. (14)

# மாயமான மலேசிய விமானம் விரைவில் கண்டுபிடிக்கப்படும்

## ஆஸ்திரேலியப் பிரதமர் நம்பிக்கை



சிட்னி,மார்ச் 7

மாயமான மலேசிய விமானம் எம்.எச்–370 கண்டுபிடிக்கப்படும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபோட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மலேசியத்தலைநகர்கோலாலம்பூரில் இருந்து சீனத் தலைநகர் பீஜிங்கிற்கு 239 பயணிகளுடன்கடந்த வருடம் மார்ச் மாதம் மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குசொந்தமான எம்.எச்.370 போயிங் ரக விமானம்புறப்பட்டுச்சென்றது. அதில் 5 இந்திய பயணிகளும் இருந்தனர்.

அந்த விமானம் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் தரைக் கட்டுப்பாட்டுநிலையத்துடன்கொண்டிருந்த தொடர்பை இழந்தது. பின்னர் அந்த விமானம் என்னவானது, அதில் இருந்த பயணிகள் என்ன ஆனார்கள்? என்ற விவரம் கிட்டத் தட்ட ஒரு வருடம் கடந்த நிலையி லும் இன்று வரை உறுதியாகத் தெரியவரவில்லை.

மாயமான விமானம் விபத்துக்கு உள்ளாகி விட்டதாகவும், அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்து விட்டதாகவும், மலேசிய அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. எனினும் மாயமான விமானத்தை தேடும் பணி இன்னொரு பக்கம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதனால் அந்த விமானம் பற்றிய சர்ச்சை இன்னமும் ஓய்ந்த பாடாக இல்லை. அனேகமாக மாயமான விமானத்தை 11 மாதங்களுக்கும் மேலாகத் தேடுவது வரலாற்றில் இதுதான் முதல் முறையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நாளை 8ஆம்திகதியுடன் விமானம் மாயமாகி ஒருவருடம் நிறைவடைய உள்ளது. இந்த நிலையில் மாயமான மலேசிய விமானம் கண்டுபிடிக்கப்படும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபோட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நாடளுமன்றத்தில் பேசிய போது , மாயமான விமானத்தைதேடுவதில்எங்களுடைய நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு வெற்றிபெறும் என்று நாங்கள் உங்களுக்கு(விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர் களுக்கு) மீண்டும்உறுதிஅளிக்கிறோம். எப்போதும் இதே தீவிரத்துடன் தேடுதல் பணியில் ஈடுபடுவோம் என்று நான் வாக்குறுதிஅளிக்கமுடியாது.ஆனால் நாங்கள் எங்களால் முடிந்தவரையில் விமானம் மாயமான பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்போம், பதில் அளிப்போம், எனத் தெரிவித்தார்.மாயமானவிமானத்தை தேடும் பணி இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆஸ்திரேலியா தலைமையில் நடைபெற்று வந்தது. விமானத்தைத் தேடுவதில் ஈடுபட்டுள்ள கப்பல்கள் 60ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவில் கவனம் செலுத்துகின்றன. இந்தியப் பெருங்கடலில் மிகவும் கடினமான பகுதிகளிலும் தேடுதல் பணி நடைபெறுகிறது என்று டோனி அப்போட் தெரிவித்துள்ளார். விமானத்தைத் தேடும் பணிக்காக ஆஸ்திரேலியா மற்றும் மலேசியா ஆகியவை இணைந்து நிதி ஒதுக்கிள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# வெள்ளத்தால் 38 பேர் சாவு

ஆபிரிக்க நாடான தான்சானியாவின் வடமேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாகப் பெருக்கெடுத்த வெள்ளத்தில் 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிராமப் பகுதிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகள் முழுவதும் சேதமடைந்துள்ளன என்று ஜனாதிபதி மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் சின்யங்கா பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு குறைந்தது 82 பேர் படு காயம் அடைந்தனர். இந்தக் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி 3ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்தனர். அவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் சாலைகள் துண்டிக்கப்பட்டன.

இதனால், பல கிராமங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி 38 பேர் உயிரிழந்ததாகத் தான்சானியா ஜனாதிபதி மாளிகை தெரிவித்தது. இந்த மழைவெள்ளத்தால்பல இடங்களில் பயிர்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

தான்சானியாவில் மார்ச் மாதம் முதல்மே மாதம் வரை மழைக்காலமாகும்.

மழைக்காலத் தொடக்கத்திலேயே மழை வெள்ளம் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. (14)

# பேஸ்புக் கருத்தால் அமெரிக்கருக்கு சிக்கல்

வொஷிங்டன்,மார்ச் 7

பேஸ்புக்கில் தெரிவித்த கருத்துக்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அமெரிக்கத் தொழிலாளி ஒருவர் சிறைத் தண்டனையை எதிர் கொள்ள நேரிடும் என்று நம்பப்படுகின்றது.

ரயான் பேட் என்ற ஹெலிகொப்டர் திருத்துநர், சுகவீன விடுமுறையில் புளோரிடாவிலுள்ள தனது வீட்டுக்கு சென்றிருந்த நிலையில், அங்கிருந்தபடி தாம் வேலை பார்க்கும் நிறுவன உரிமையாளரை விமர்சித்திருந்தார். அவர் தனது 'நிறுவனத்தை முதுகில் குத்துபவர்கள்' என்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மக்களை இனத்தை அவதூறாகவும் குறிப்பிட்டு விமர்சித்திருந்தார்.

இந்தக் கருத்துக்கள் ஐக்கிய அரபு எமிரெட்ஸின்இறுக்கமான அவதூறுச் சட்டத்தை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டுஅவர்அமெரிக்காவிலிருந்து ஐக்கிய அரபு எமிரெட்ஸுக்குதிரும்ப வந்தவுடன் தடுத்து வைக்கப்பட்டார். இவர் குற்றவாளி என்றுதீர்ப்பளிக்கப்படும்பட்சத்தில் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கக் கூடும் எனவும் தகவல்கள்தெரிவித்துள்ளன. (14)



# கைதிகள் பரிமாற்றக் கோரிக்கை நிராகரிப்பு

இந்தோனேசியாவில் சாவுத் தண்டனையைஎதிர்நோக்கியுள்ளஇரண்டு ஆஸ்திரேலியப் பிரஜைகளையும் காப்பாற்றுவதற்காக, ஆஸ்திரேலிய அரசாங்கம் முன்வைத்திருந்த கைதிகள் பரிமாற்றத் திட்டத்தை இந்தோனேசிய அரசு நிராகரித்து விட்டதாக அந்த நாட்டு ஊடகங்கள் கூறுகின்றன.

பாலி நைன் குரூப்– என்று அழைக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கு இந்த இரு கைதிகளும் தலைமை தாங்கியிருந்ததாகக்குற்றம்சாட்டப்பட்டது. தற்போது ஜாவாக் கடலுக்கு அருகே உள்ள சிறைத் தீவு ஒன்றுக்கு மயூரன் சுகுமாரனும், அன்றூ சானும் மாற்றப்பட்டுள்ளனர். அங்கு, அவர்கள் மீது துப்பாக்கிச்சூடுநடத்தி சாவுத்தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது. தண்டனை நிறைவேற்றப்படும் திகதி இன்னமும் சில நாள்களில் அறிவிக்கப்படும் என்று இந்தோனேசியாவின் சட்டமா அதிபர் கூறியுள்ளார். (14)

# நைஜீரியாவில் 45 இற்கும் மேற்பட்டோர் படுகொலை

நைஜர்,மார்ச் 7

நைஜீரியாவின் வட கிழக்குப் பகுதியில் உள்ள போர்னோ மாகாணத்தில்உள்ள ஒருகிராமத்தில்போகோ ஹராம் பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படும் சிலர், நடத்திய தாக்குதலில் குறைந்தது 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

போகோ ஹராம் குழுவைக் கட்டுப்படுத்த நைஜீரிய இராணுவம் கடுமையாகப் போராடி வருகிறது. நஜாபா என்ற அந்தக் கிராமத்திற்குள் புகுந்த ஆயுததாரிகள் [illegible]டுகளைப் பார்த்துச் சுட்டனர். [illegible]றகு கிராமத்திற்குத் தீ வைத்தனர் [illegible]என இந்தத் தாக்குதலில் தப்பியவர்கள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தாக்குதல் நடந்துவிட்டாலும், அந்தப் பகுதி உள்ளடங்கிய பகுதி என்பதால், தற்போதுதான் அந்தத் தாக்குதல் குறித்து வெளியுலகிற்குத் தெரியவந்துள்ளது.

இஸ்லாமிய அரசை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக ஆயிரக்கணக்கான மக்களை போகோஹராம் கொலை செய்து வருகிறது.

ஆண்களையும் ஆண் குழந்தைகளையுமேஆயுததாரிகள்குறிவைத்துத் தாக்கியதாக சஹாரா ரிப்போர்ட்டர்ஸ்என்ற இணையத்தளம் தெரிவித்துள்ளது.

போர்னோ மாகாணத்தில் பெரும்பகுதியை போகோஹராம் கட்டுப்படுத்திவருகிறது. சமீபகாலமாக அருகில் இருக்கும் சத், கமரூன், நைஜர் நாடுகளின் மீதும் எல்லையைக் கடந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த மூன்று நாடுகளும் தற்போது நைஜீரியாவுடன் இணைந்து, போகோஹராமுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களாக நடந்த யுத்தத்தின் முடிவில் பல நகரங்களை இந்தக் கூட்டுப் படையினர் மீட்டுள்ளனர். (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீரும் குடாநாடும்

செல்வி வசந்தினி ஜீவரத்தினம்.
விவசாயபீடம்.3ஆம்வருடம்.
யாழ்.பல்கலைக்கழகம்



குடிதண்ணீருக்காக மக்கள் ஒற்றைக்குடத்துடன் இடுப்புடைய பல நூறு கிலோ மீற்றர்கள் பயணிக்கின்ற காலத்தில் வீட்டின் எல்லையோரம் வட்டக்கிணறு, துலா உழண்டி என பங்குக்கிணறுகளுடன் பங்குபோட்டு அள்ளிப் பருகிய இனம் எம் இனம். கால ஓட்டத்தில் பங்குக்கிணறுகள் பாழ். கிணறுகள் ஆகிப்போக வீட்டுக்குள் கிணறு ஊற்றெடுக்க ஆரம்பித்தன. சொந்தமண், சொந்த நீர், எம் உயிர், எம் தண்ணீர் என அள்ளிப்பருகி தாகம் தீர்த்துக் கொண்டது முழுக் குடா நாடும். இத்தனைக்கும் பூமி மாதாவைக் குளிர்விக்க ஓடிய நிலத்தடி நீர் ஓடையே எமக்கெல்லாம் வரப்பிரசாதமாகிக் கிடந்தது . ஆனால் குடிதண்ணீரில் கழிவு கலந்ததாகக் கூறி இன்று ஏன் ஊரெங்கும் போர்க்கொடி, ஊடகமெங்கும் செய்தி. உலகெங்கும் ஆர்ப்பாட்டம். ஏன் இந்த அவலம்? "தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே" என்றான் ஆதித் தமிழன். ஆனால் இன்றோ பழமொழிகள் பாழ்படும் அளவுக்கு கிணற்றுத்தண்ணீர் கறுப்பாகிப் பாழாகிக் போய்விட்டது.

குடாநாட்டில் குடித்தொகைச் செறிவுக்கு முக்கியமான காரணமாக அமைவது நிலத்தடி நன்னீர் வளமே. அதுவும் இல்லாதுவிடின் எப்போதே குடாநாட்டின் வரலாறு முடிந்திருக்கும். நல்ல சுத்தமான குடிதண்ணீர் குடாநாட்டின் நிலத்தின் கீழ் உள்ள பாறையடுக்குகளில் கிடைத்தமை பெரும் இயற்கைக் கொடையாகும். ஆனால் அதைக் கழிவு ஓயிலால் பாழ்படுத்தியது மனிதர்களின் செயலாகும். நன்னீர் என்பது உவர்த் தன்மையல்லாத தேவையான கனிமங்கள் நிறைந்த மாசுகளற்ற நீராகும். நன்னீர் பின்வரும் பயன்பாடுகளுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

மனிதர், விலங்குகளின் குடிதண்ணீர் தேவைகளுக்கு, விவசாய நடவடிக்கைகளுக்கு, அன்றாட செயற்பாடுகளுக்கு மேற்குறிப்பிட் முக்கியசெயன்முறைகளுக்கு நன்னீரே அவசியமாகும். உவர் நீர், சவர்நீர் என்பன பொருத்தமல்லாத நீர் வகைகளாகும்.

உவர் நீர் என்பது உப்புச் செறிவு அதிகமாக உள்ள நீராகும். (கடல் நீர்) இது குடிப்பதற்கோ விவசாயத்துக்கோ பொருத்தமில்லாத ஒன்றாகும். சவர்நீர் என்பது உவர்நீரும், நன்னீரும் கலந்த கலவையொன்றாகும். இந்த நீரும் அதிகளவு பொருத்தமற்ற நீராகும்.

நன்னீர் ஆனது ஆறுகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள், நிலத்தடி நீர் என்பனவற்றின் ஊடாக பெறப் படும் உன்னத வளமாகும்.

இந்த நன்னீரானது மனித செயற்பாடுகள் மூலமாக மாசடைந்து உபயோகத்துக்கு உகந்ததல்லாததாக மாறிவருகிறது. பின்வரும் செயற்பாடுகளினால் நன்னீர் மாசாக்கம் ஏற்படுகின்றது. வீட்டுக்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், மலக் கழிவுகள், இரசாயனப் பொருள்கள், எண்ணெய் மற்றும் கழிவு ஒயில் என்பன நீருடன் சேருதல்.

இதுபோன்ற மனித நடவடிக்கைகள் குடிதண்ணீரைப் படிப்படியாக மாசடையச் செய்து முழுமையான உபயோகத்துக்குப் பயன்படுத்த முடியாத நிலைக்கு மாற்றிவிடும்.

யாழ்.குடா மக்களின் கலாசாரத்தின் பிரகாரம் வீட்டுக்கு ஒரு மலசலகூடம் பேணப்படுகிறது. முன்னர் பொதுக் கிணறுகளே இருந்ததால் மலக்கழிவுகள் நீருடன் கலப்பது பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால் தற்போது தனிக் கிணறு, தனி மலசல கூடங்கள் இருப்பதனாலும் குடித்தொகை பரம்பல் அதிகரிப்பதனாலும், மலசல கூடத்துக்கும், கிணற்றுக்கும் இருக்க வேண்டிய தூரத்தை கருத்தில் எடுக்காது பலர் மலசல கூடங்களை அமைத்துவருகின்றனர். இதனால் மலக்கழிவுகள் நிலத்தினூடாகச் சென்று விரைவாக நிலத்தடி நீருடன் கலக்கின்றன.

மலக்கழிவில் பிரதானமாகக் காணப்படும் E-coli வகை பக்ரீரியாக்கள் மலத்தினால் மாசடைந்த நீரில் காணப்படுகின்றன. E-coli பக்ரீரியாவினால் மாசடைந்த நீரை மனிதன் பருகவே கூடாது. இதனால் பல மருத்துவப் பிரச்சினைகள் ஏற்படலாம். ஆனால் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள கிணறுகளில் E-coli பக்ரீரியா நினைக்கமுடியாத அளவு செறிந்துள்ளதை நீரியல் சம்பந்தமான ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆனாலும் குடாநாட்டு மனிதன் மறைமுகமாக மலம் கலந்த நீரையே பருகிக் கொண்டிருக்கிறான் என்பதில் வாசிக்கும் நீங்களும் ஒருவராக இருக்கலாம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கிணற்றுக்கும், மலசல கூடத்துக்கும் இடைப்பட்ட தூரத்தை சட்டத்தின் பிரகாரம் அமைத்தல் அல்லது மலக்குழி அற்ற மலசல கூடங்களை அமைத்து அந்த மலக் கழிவுகளை குழாய் வழியாகச் சேகரித்து, அகற்றி பொது மலக் குழியொன்றை அமைக்க அரசு திட்டமிடுதல் போன்றவற்றினூடாக கட்டுப்படுத்தலாம். மற்றொரு நிலத்தடி நீர் மாசாக்கம் விவசாய நிலங்களில் பிரயோகிக்கப்படும் இரசாயன வளமாக்கிகளினால் ஏற்படுத்தப்படுகிறது.



விவசாய நிலங்களில் அளவுக்கதிகமான இரசாயன வளமாக்கிகள், பூச்சி பீடை கொல் லிகளைபிரயோகிப்பதனால் வயல் நிலங்களில் தேங்கியுள்ள இரசாயனங்கள் புவியீர்ப்பு நீர் வழியே அசைந்து நிலத்தடி நீருடன் கலப்புறும். இதனால் நிலத்தடி நீர் மாசாக்கமடைந்து நஞ்சேற்றமடையும்.

நிலத்தடி நன்னீரில் இரசாயன வளமாக்கிகளிலுள்ள நைத்திரேற்று அயன் ($No_3$) பொசுபேற்று அயன்($Po4^{3-}$)செறிவு அதிகரிப்பதால் நன்னீர் மாசடைகின்றது. இந்த இரசாயன மாசாக்கமடைந்த நீரைப் பருகினால் புற்றுநோய் போன்ற ஆட்கொல்லி நோய்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது. இந்த மாசாக்கத்தை நீக்குவதற்கு பின்வரும் நடைமுறைகளை மேற்கொள்ளலாம். இரசாயன வளமாக்கிய பாவனையை இயன்றளவு குறைத்தல், சேதன பயிர்ச் செய்கையை (Organic farming) மேற்கொள்ளல், பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் இரசாயன வளமாக்கிகளை பயன்படுத்தல், சிறந்த அணைக்கட்டுக்கள், கிணற்றுக்கட்டுகளை ஏற்படுத்தல். மூன்றாவது முக்கிய பிரச்சினை குடாநாட்டு நிலத்தடி நீரில்கழிவு ஓயில்கலக்கப்பட்டமை. சுன்னாகம் அனல் மின் நிலையத்தினால் நிலத்துக்குள் தகுந்த சுத்திகரிப்பு இன்றி கொட்டப்பட்ட கழிவு ஒயில் வருடக் கணக்கில் கசிந்து நிலத்தடி நீருடன் கலந்தமையினால் ஓர் அவல நிலை ஏற்பட்டுள்ளது. சமீப காலமாக இந்த நிலைமை சுன்னாகம் பகுதியிலிருந்து அதை அண்டிய பகுதிக் கிணறுகளிலும் வேகமாகப் பரவி வருகின்றது.

புத்திசாதுரியமற்ற தொலை நோக்கற்ற, சூழலியம் பற்றி நோக்காத நிறுவனம் ஒன்றினால் இந்த அவலம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

போத்தலில்அடைக்கப்பட்ட குடிதண்ணீரை வாங்குவதற்கு வசதியில்லாதவர்கள், நல்ல கிணற்றை நோக்கி நாள்தோறும் அலைந்து திரிகிறார்கள். இது ஒரு பரிதாபமான நிலைதான். இதனைத் தடுக்க அரசே முன்வரவேண்டும். விரைவாக இந்த நீரை முழுமையான செம்மையான ஆராய்ச்சிக்குட்படுத்தி அதில் ஐதரோ காபன்களின் அளவு கனிமங்களின் அளவு, பார உலோகங் களின் அளவு என அனைத்தையும் கண்டு கொண்டு மனிதப் பேரவலத்துக்கு விரைவாகதீர்வெடுக்கவிரையவேண்டும். எனவே குடாநாட்டு நன்னீரிலுள்ள இந்த மூன்று பிரச்சினைகளும் தீர்ந்தால்தான் எம் தாயும் நாமும் பரம்பரையாக இங்கே வாழலாம். இல்லாது போனால் குடாநாடு விடுபட்டுபோன நாடாக [illegible] வில் இல்லை.

# பரிசில் வழங்கிய க்ளோகார்ட்

தேசத்தின் நம்பிக்கையை வென்ற வாய்ச்சுகாதார வர்த்தக நாமமான க்ளோகார்ட், வாய்ச்சுகாதார பராமரிப்புகளுடன் பற்சிதைவைத் தவிர்க்கும் வகையில் குடும்பங்களுக்கு உதவி வருகிறது. ஹேமாஸ் மனுபக்டரிங் நிறுவனத்தின் முன்னணி பற்பசை வர்த்தகநாமமான க்ளோகார்ட், பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் பெருமையுடன் ஈடுபட்டு வருகிறது.

மிகச்சிறந்த வாய்ச்சுகாதார பராமரிப்பு பழக்கங்களைக் கொண்ட தேசமாக உருவாக்க உதவிடும் வகையில் சிறந்த வாய்ச்சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு குடும்பங்களை ஊக்குவிக்கும் வகையில் அண்மையில் தனித்துவமான செயற்திட்டமொன்றை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது.

பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கையை உருவாக்கும் வகையில் குடும்பங்கள் மத்தியில் ஊக்குவிப்பு மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை அதிகரிப்பது தொடர்பில் க்ளோகார்ட் கவனம் செலுத்தி வருகிறது. இதில் பங்குபற்றிய குடும்பங்களுக்கு பணம் மற்றும் ஏனைய பரிசுகள் உட்பட மாபெரும் வெகுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

தமது வாய்ச்சுகாதாரத்தை பேணுவதுடன், 'பற்சிதைவிலிருந்து விடுபட்ட எதிர்காலம்' த்துக்கான உறுதிமொழியை வழங்கும் வகையில் குடும்பங்களை ஊக்குவிப்பது இந்த தேசிய செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். ப்ளோரைட் அடங்கிய பற்பசையினால் நாளொன்றுக்கு இரு தடவைகள் பல்துலக்குவது



தொடர்பில் விளக்கப்பட்டதுடன், இதனை குடும்பங்கள் தங்கள் நாளாந்த வாழ்வில் பின்பற்றுவதற்கான ஊக்குவிப்பு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தமது விழிப்புணர்வுக்கான உறுதிப்பாட்டினை வலியுறுத்தும் வகையில், க்ளோகார்ட் குழுவினர் நாடு முழுவதுமுள்ள 150 இடங்களுக்கு பயணித்துள்ளதுடன், 200,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஆர்வத்துடன் முன்வந்து க்ளோகார்ட்டின் பற்சிதைவு தவிர்ப்புக்கான உறுதிமொழியை அளித்துள்ளன.

'எமது செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த தாக்கம் குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். க்ளோகர்ர்ட் போன்ற ப்ளோரைட் அடங்கிய பற்பசை கொண்டு நாளொன்றுக்கு இரு தடவைகள் பல்துலக்குவதன் மூலம் உங்கள் வாய்ச்சுகாதார பழக்கங்களை மாற்ற முடிவதுடன், பற்கள் சம்பந்தமான பெரும்பாலான பிரச்சினைகளை கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். பற்சிதைவிலிருந்து விடுபட்ட தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கையரின் ஆர்வத்தைக் கண்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்' என ஹேமாஸ் மனுபக்டரிங் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரோய் ஜோசப் தெரிவித்தார்.

'பொறுப்பு வாய்ந்த நிறுவனமாகிய ஹேமாஸ் தமது முயற்சிகள் ஊடாக நாடு முழுவதுமுள்ள குடும்பங்கள் மத்தியில் சிறந்த வாய்ச்சுகாதாரத்தை மேம்படுத்தி வரும் கூட்டாண்மைக் குரலாக மாற்றமடைந்துள்ளது. பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்காக க்ளோகார்ட் செயற்திட்டம் மற்றும் மக்களின் வாழ்வை மெருகேற்றுவதற்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம்' என மேலும் அவர் தெரிவித்தார்.

பரப்புரையின் போது பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கையை கட்டியெழுப்புவதாக உறுதிமொழி அளித்த குடும்பங்கள் மற்றும் குடும்பத்தலைவிகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. பங்குபற்றியவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட பரிசிழுப்பின்போது தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாபெரும் பரிசிலை வெல்லும் வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா பணப் பரிசிலாக வழங்கப்பட்டது.

கேகாலை, தெனியாய மற்றும் கனேமுல்ல போன்ற பிரதேசங்களிலிருந்து ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான நிலையான வைப்பினை வென்ற அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மேலும் 12 குளிர்சாதனப் பெட்டிகள், 9 மடிக் கணினிகள், மவுண்டேயின் சைக்கிள்கள், பைகள் மற்றும் கைக் கடிகாரங்கள் போன்றனவும் பரிசில்களாக வழங்கப்பட்டன.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்



## சுன்னாகம் -புத்தூர் வீதி காப்பெற் வீதியாக மாறுமா?

சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் வீதியின் மோசமான நிலை காரணமாக இந்த வீதியில் பயணிப்பவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இந்த வீதி முறையாகப் பராமரிக்கப்படாததன் காரணமாக மேடு பள்ளங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் வாகனங்களில் செல்பவர்கள் குலுங்கியவாறு செல்வதைக் காண முடிகின்றது. குறிப்பாக ஓட்டோ, மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்களில் செல்பவர்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பெரிய வாகனங்கள் கூட சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணத்தை மேற்கொள்கின்றன.
முக்கியமான வீதிகள் எல்லாம் காப்பெற் வீதிகளாக மாறி வரும் போது இந்த வீதி மட்டும் முக்கியத்துவத்தை இழந்து காணப்படுகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட பெரும்பாலானவர்கள் தினமும் பயன்படுத்துகின்ற இந்த வீதி உடனடியாக காப்பெற் வீதியாக மாற்றப்பட வேண்டும் என்பதே இதனைப் பயன் படுத்துக்கின்றவர்களின் வேண்டுகோளாகும். உரியவர் கள் கவனிப்பார்களா?

*க.தர்மபாலன், நவக்கிரி.*

## வீதிப் புனரமைப்புக்கு வேண்டுகோள்

காங்கேசன்துறை வீதியிலிருந்து சுன்னாகம் அந்தோனியார் ஆலயத்துக்குச் செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. கற்கள் வெளிக் கிளம்பிக் காணப்படுவதாலும், பள்ளங்கள் தோன்றியுள்ளதாலும் இந்த வீதியைப் பயன்படுத்துபவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இந்த வீதியில் செல்லும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் என்பன பள்ளங்களில் வீழ்ந்து எழுவதாலும், கற்கள் குத்துவதாலும் அடிக்கடி அவற்றின் சில்லுகளில் காற்றுப்போகும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. தினமும் ஏராளமான மக்கள் பயன்படுத்தும் இந்த வீதியை உரியவர்கள் இதுவரை கவனிக்காமல் இருப்பது கவலைக்குரியது.
மக்களுக்குச் சீரான போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது உரிய அதிகாரிகளின் கடமையாகும்.ஆகவே இனியும் தாமதிக்காது இந்த வீதியைப் புனர மைத்து வழங்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


*ம.கிறிஸ்தோப்பர்,*
*சுன்னாகம் அந்தோனியார் கோயிலடி.*

## எமது கிராம வீதியையும் செப்பனிடுங்கள்

மட்டுவில் மத்தி ஜே/312 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட வேவில் வீதி, நாவலடி வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமையால் குண்டும் குழியுமாக உள்ளது. 17 ஆண்டுகளுக்கு முன்பு மக்கியால் போடப்பட்ட வீதி அடுத்த ஆண்டே மழையோடு அடித்துச் செல்லப்பட்டு வீதி குண்டும் குழியுமாக மாறிவிட்டது. இதனால் வீதியில் வெள்ள நீர் தே... நிற்பதால் பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், பாதசாரிகள், இந்தக் கிராம மக்கள் வழுக்கி விழுந்தெழும்புவது ஆண்டுதோறும் நடக்கும் துர்ப்பாக்கிய நிலைமையாகஉள்ளது.
இதனால் பெரும் அசௌகரியங்களுக்கு அனைவரும் உள்ளாகின்றனர். இக்கிராம மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். மற்றைய அயல் கிராமங்களுடன் ஒப்பிடுகையில் பல வழிகளிலும் பின் தங்கிய நிலை யில் உள்ளது. வேவில் கிராமத் துக்கு இன்னமும் மின்சாரமும் வழங்கப்படவில்லை. மிக விரைவாக இந்த இரண்டு வீதிகளையும் செப்பனிட்டு மின்சாரத்தையும் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின் றேன்.

*த.கனியமுதன்,*
*மட்டுவில் மத்தி*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# இலங்கையை விட்டு விலகாத ஐ.நாவின் எச்சரிக்கை

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத அமர்வு ஜெனிவாவில் ஆரம்பமாகி, நடைபெற்று வருகின்றது. இலங்கையில் இறுதிப் போரில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக ஐ.நா.மேற்கொண்ட விசாரணையின் அறிக்கை இந்த அமர்வில் சமர்ப்பிக்கப்படுவதாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபோதும், அதுபின்னர் செப்ரெம்பர் மாத அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் மஹிந்தவின் ஆட்சி வீழ்த்தப்பட்டு, மைத்திரி ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், புதிய அரசுக்கு கால அவகாசம் ஒன்றை வழங்கும் நல்லெண்ண நடவடிக்கையாகவே இந்த ஒத்திவைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எதிர்வரும் செப்ரெம்பர் மாத அமர்வுக்கு முன்னர், புதிய அரசு இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வதுடன் இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஒரு விசாரணைப் பொறிமுறையை நிறுவுவதற்கு வசதியாகவே இந்த அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.
இந்தக் கால அவகாசத்தை ஐ.நாவிடம் இருந்து பெறுவதற்கு புதிய வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர முக்கிய பங்காற்றியிருந்தார். ஐ.நா.விசாரணை அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ் கட்சிகளும் தமிழ் அரசியல் தலைவர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இலங்கைக்கு இவ்வாறு கால அவகாசம் வழங்குவது குற்றவாளிகள் தண்டனையில் இருந்த தப்பிப்பதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தும் என்று அவர்கள் கண்டித்திருந்தனர். ஆயினும் ஐ.நா.விசாரணை அறிக்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படாதெனவும், எதிர்வரும் செப்ரெம்பரில் அறிக்கை நிச்சயம் வெளியிடப்பட்டே ஆகும் என்றும் உறுதியளித்திருந்தது ஐ.நா.
இந்நிலையில் தற்போது ஆரம்பமாகியுள்ள மனித உரிமைகள் அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் வெளியிட்ட கருத்து இலங்கைக்கு மீண்டும் தலையிடியை ஏற்படுத்தியிருக்கின்றது.
"பாதிக்கப்பட்ட மக்களுடன் ஆலோசித்தே உள்ளக விசாரணைப் பொறிமுறை ஆரம்பிக்கப்படவேண்டும். மாறாக கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட -தோல்வியில் முடிந்துபோன விசாரணைப் பொறிமுறைகளை இலங்கை ஒருபோதும் நடைமுறைப்படுத்த முனையக்கூடாது" இவ்வாறு கடுந்தொனியில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர். விசாரணை அறிக்கை ஒத்திவைக்கப்பட்டதால் சற்று நிம்மதியாக இருந்த மைத்திரி அரசு, ஆணையாளரின் இந்த எச்சரிக்கையால் நடுங்கிப் போயிருக்கிறது.
மனித உரிமைகள் சபையின் வருடாந்த அறிக்கையை ஜெனிவா அமர்வில் சமர்ப்பித்து உரை நிகழ்த்துகையிலேயே ஆணையாளர் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளமை முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை எனது பரிந்துரையுடனேயே செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. ஐ.நா.விசாரணைக் குழுவினர் வழங்கிய பரிந்துரையின் அடிப்படையிலும், இலங்கையின் புதிய அரசு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலுமே இதனை மேற்கொண்டேன் என்றும் ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.
இலங்கைக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி நீதியையும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும் என்றும் ஆணையாளர் இலங்கை அரசுக்கு அறிவுரை கூறியிருக்கிறார். ஆணையாளரின் இந்த எச்சரிக்கை செப்ரெம்பர் மாத அமர்வில் இலங்கை விடயத்தில் ஐ.நா.கடும் போக்கைக் கடைப் பிடிக்கும் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறது.
ஆணையாளரின் இந்த அறிவிப்பை அடுத்து, எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறும் அமர்வில் உள்ளக விசாரணை அறிக்கையை இலங்கை அரசு மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.
ஐ.நா.வழங்கிய கால அவகாசத்தின் மூலம் பொறுப்புக்கூறும் விடயத்தில் இருந்து இலங்கை அரசு ஒருபோதும் தப்பிவிட முடியாது. ஐ.நா.அறிக்கையின் ஒத்திவைப்பு இலங்கைமீது மேலும் கவனம் அதிகரிக்கவே செய்திருக்கிறது. இதனால், இலங்கை அரசு அதிகம் செய்தாகவேண்டிய இக்கட்டுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.
பொறுப்புக்கூறும் விடயத்தில் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எவ்வாறு கடும் பிடியில் இருந்தாரோ அதேபோன்றே தற்போதைய ஆணையாளரும் பொறுப்புக்கூறலில் உறுதியுடன் உள்ளார்.
எனவே, செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர், இறுதிப் போரில் இழைக்கப்பட்ட குற்றங்கள், காணாமற் போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பில் உண்மையைக் கண்டு குற்றவாளிகளை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் மைத்திரி அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உள்ளக விசாரணைப் பொறிமுறை உரிய பலன் தரவல்லதா.......?

பாதிப்புற்ற மக்களுடன் கலந்தாலோசனை செய்தே, இலங்கை அரசின் உள்ளக விசாரணைப் பொறிமுறை ஆரம்பிக்கப்பட வேண்டும் --

கடந்த காலங்களில் தோல்வி கண்ட, பாதிப்புற்ற மக்கள் ஏற்றுக்கொள்ளாத, விசாரணைப் பொறிமுறையை மீண்டும் நடைமுறைப் படுத்த இலங்கையின் அதிகாரத் தரப்புக்கள் முனையக் கூடாது -- என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் கடுந்தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரது மேற்கண்ட அறிவுறுத்தலை, எங்கள் நாட்டு அரசு, தப்பித் தவறியும் பொது போக்கான கருத்து என்று கொள்ளக் கூடாது.

இது விடயத்தில் -- விவகாரத்தில் -- இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது அரசியல் கலையின் சுத்துமாத்துக்களை, அவிழ்த்து விடுவதற்கு கிஞ்சித்தும் நினைக்கவும் கூடாது என்ற எச்சரிக்கையே இது எனக் கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இருபத்தெட்டாவது அமர்வு இப்போது ஜெனிவாவில் நடைபெறுகின்றது. அங்கு தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையிலேயே மேற்கண்ட காட்டமான கருத்தை சயிட் அல் ஹூசைன் வெளிப்படுத்தி உள்ளார்.

எங்கள் நாட்டில் 27 ஆண்டுகளாக நீண்ட ஆயுதப் போராட்டத்தின்போது சுமார் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும், அதனை ஒத்த வன்செயல்களும் கட்டவிழ்க்கப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அரச தலைவரும், பாதுகாப்புத்துறை உயர்அதிகாரிகளுமே என்பது ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அசைக்க முடியாத நிலைப்பாடாகும்.

போரினால் பாதிப்புற்ற மக்கள் ஏற்றுக் கொள்ளாத, உள்ளக விசாரணைப் பொறி முறையை, இலங்கையின் அதிகாரத் தரப்புக் கள் மீண்டும் கையில் எடுக்க எத்தனிக்கக் கூடாது --

வேண்டுமானால், பாதிப்படைந்தோரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று புதிதாக உள்ளக விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் -- என்று சயிட் அல் ஹூசைன், தமது- ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் - நிலைப்பாட்டை அறுத்து உறுத்து வெளிப்படுத்தி உள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின், இந்த ஆண்டுக்குரிய முதலாவது (உத்தியோகபூர்வ) அமர்வு இப்போது நடைபெறுகிறது. இதே வகை சார்ந்த மாநாடு, செப்ரெம்பர் மாதத்திலும் மீண்டும் நடைபெறுவது வழக்கம்.

அதற்கு முன்னதாக, இலங்கையில் அரசால் -- இராணுவம் உட்பட்ட அதன் அலகுகளால் -- மனித உரிமைகள் மீறப்படவில்லை; வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் கொல்லப்படவில்லை என்ற விம்பத்தை வெளிப்படுத்துவதற்குப் புதிய அரசு ஊன்றிக் காலடி வைத்துள்ளது.

அந்த ஒவ்வாத செயற்பாட்டைத் தலையைக் கீழே வைத்தேனும், மேலெழச் செய்வதற்கு வேகவேகமாகச் செயலாற்றுகிறது.

இப்போது ஆட்சிக்கட்டிலை ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்களும் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகளை வழங்குவதற்குத் தடைக்கற்களாக இருந்துள்ளனர். அதனை அவர்கள் 'வசதியாக' மறந்து போயினும், பல்லாயிரக்கணக்கில் உயிர் பறிக்கப்பட்ட தமிழ் மக்களின் உறவுகளாலும் உரித்தானவர்களாலும் அந்தக் கொடுமையை மறந்து விட இயலாது. இதனை அனைத்துலக நாடுகளும் நன்கு அறியும்.

அரசன் அன்று அறுப்பான்; தெய்வம் நின்று அறுக்கும் என்ற முதுமொழியை மாற்றி அமைக்க வேண்டும் என்ற எந்த முயற்சியும், தோற்றுப் போகும். தெற்கின் ஆட்சியாளர்கள் அதனைப் புரிந்து கொள்வதற்கு முனைவது, இனி எப்போதோ..........?

# உலக அரங்கில் இலங்கை தலை நிமிர்ந்து நிற்பது எப்போது?

■ சேரலாதன்

எதிர்காலத்தில் இலங்கையின் அரசியல் வரலாறு எழுதப்பட்டு ஆவணப் படுத்தப்படுமேயானால் ஊழல்களுக்கும், மோசடிகளுக்கும், குற்றச் செயல்களுக்கும், இனவாதச் செயல்களுக்கும் என தனித் தனியான அத்தியாயங்கள் திறக்கப்படுவதுடன், அதற்கென ஏராளமான பக்கங்களை ஒதுக்க வேண்டிய நிலையும் ஏற்படப் போகின்றது. கடந்த மஹிந்த ஆட்சிக் காலத்தில் மட்டுமல்லாது, இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட தவறான விடயங்கள் இங்கு நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆங்கிலேயர் இந்த நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் தமிழர்கள் பெரும் ஆதிக்க சக்தியாக விளங்கினர். நாட்டின் மொத்தப் பரப்பளவில் சுமார் மூன்றில் ஒரு பாகம் தமிழர்களின் அதிகார எல்லைக்குள் அடங்கியிருந்தது. பெரிய நிலப்பரப்பும், வளம் கொழிக்கும் மண்ணும் இங்கு அமைந்திருந்தமை, இனவாதிகளின் கண்களை உறுத்தவே செய்தது.

ஒரு கனவான் போன்று உடையணிந்து கொண்ட இந்த நாட்டின் முதல் பிரதம மந்திரியான டி.எஸ்.சேனநாயக்க, கிழக்கு மாகாணத்தை தமிழர்களின் கைகளிலிருந்து பிரித்து எடுப்பதற்கு கங்கணம் கட்டிச் செயற்பட்டார். அங்கு விவசாயிகள் என்றபோர்வையில் பெருமளவு பெரும்பான்மை இன மக்கள் குடியேற்றப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் அரசினால் வழங்கப்பட்டன. இதன் காரணமாக பெருமளவு குடியேற்றக் கிராமங்கள் உருவானதுடன் தமிழர்கள் காலம் காலமாக உலவி மகிழ்ந்த பெருமளவு நிலப்பரப்பு பறிபோனது. காலம் காலமாக தமிழர்கள் வாழ்ந்துவந்த தம்பலகாமம் கூட இன்று அவர்கள் நிம்மதியாக வாழ் வதற்குரிய வாய்ப்பை வழங்கவில்லை.

டி.எஸ்.சேனநாயக்காவுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பண்டாரநாயக்க தமிழர்களின் மொழி உரிமையையே பறித்தெடுப்பதற்கு திடசங்கற்பம் பூண்டார். இதுவே இந்த நாட்டின் முதலாவது இனக் கலவரம் வெடிப்பதற்கும் காரணமாயிற்று. இந்த நாட்டிலே இன, மொழி வெறியை விதைத்த பெருமை பண்டார நாயக்காவையே சாரும். பின்னர் வந்த அரசியல் தலைவர்கள் கூட தாம் சார்ந்த இனத்தின் மேன்மைக்காகவே பாடுபட்டனர். சிறுபான்மை இனங்களை அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த் தன, பிரேமதாச, சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் சொல்லி மாளாதவை. ஜே.ஆரின் ஆட்சியில் அரங்கேறிய கறுப்பு ஜூலை தமிழர்கள் உள்ளவரை அவர்களின் நெஞ்சத்தைவிட்டு அழிக்க முடியாத ஒன்று.

மஹிந்தவும் ஏனைய பெரும்பான்மையினத்தலைவர்களுக்குத் தாம் சளைத்தவரல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழர் களுக்கு இழைத்த கொடுமைகள் ஏராளம். இறுதிப் போரின்போது அவரது கொடிய முகம் வெளியே தெரிந்தது. இதைவிட அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், மலைப்பை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு ஒரு நாட்டில் நடக்க முடியுமா என மக்கள் நாடியில் கை வைத்துக் கேட்கும் அளவுக்கு அவரது ஆட்சிக் காலத்தில் ஊழலும், மோசடியும், குற்றச்செயல்களும் பெருகிக் காணப்பட்டுள்ளன. இதனால் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது.

மஹிந்தவுக்கு முந்திய தலைவர்களின் ஆட்சிக் காலங்களிலும் ஊழல்கள் ஏற்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் வெளிக்கிளம்பாமல் இல்லை. ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் மகாவலித் திட்டம் இடம் பெற்றபோது இத்தகைய குற்றச்சாட்டுக்கள் கிளம்பின. ஆனால் மஹிந்தவின் ஆட்சியில் ஊழல், மோசடியிலும் உலக சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

முன்பு ஒருமுறை சிங்கப்பூரின் முதலாவது பிரதம மந்திரியாக இருந்த லீ-குவான் யூ இலங்கைக்கு வந்தபோது இலங்கை போன்று சிங்கப்பூரைக் கட்டி எழுப்புவேன் எனக் கூறினார். இலங்கையின் அப்போதைய நிலையில் அவர் இதனைக் கூறினார். ஆனால் இன்று அவரால் அவ்வாறு கூற முடியுமா?














சகல வளங்களும் நிறைந்து காணப்படும் இந்த நாடு இன்றும் கூட வறிய நாடுகளின் பட்டியலில் இருப்பதற்கு இங்குள்ள அரசியல் வாதிகளே பொறுப்புக்கூற வேண்டும். வளங்கள் எதுவுமே இல்லாத சிங்கப்பூர், உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்க முடியுமானால் இலங்கையால் முடியாதா? இதனை எமது அரசியல் வாதிகள் தான் சிந்திக்க வேண்டும்.

**இந்த நாட்டிலே இன, மொழி வெறியை விதைத்த பெருமை பண்டார நாயக்காவையே சாரும். பின்னர் வந்த அரசியல் தலைவர்கள் கூட தாம் சார்ந்த இனத்தின் மேன்மைக்காகவே பாடுபட்டனர். சிறுபான்மை இனங்களை அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்த் தன, பிரேமதாச, சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் சொல்லி மாளாதவை. ஜே.ஆரின் ஆட்சியில் அரங்கேறிய் கறுப்பு ஜூலை தமிழர்கள் உள்ளவரை அவர்களின் நெஞ்சத்தை விட்டு அழிக்க முடியாத ஒன்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பொறிக்குள் சிக்கிக் கொண்டுள்ள மைத்திரி தப்புவாரா?

■ சரா

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசின் 100 நாள் வேலைத்திட்டம் ஆமை வேகத்தில் ஊர்ந்து செல்வதாகவே பலதரப்புக்களாலும் விமர்சிக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது. ஜனநாயக நல்லாட்சிக்கான அந்த வேலைத்திட்டங்களால் மக்கள் நலன் சார்ந்த ஒருசிலவாவது நடைமுறைக்கு வந்திருப்பது பாராட்டத்தக்கது. ஆனாலும் நிறைவேற்று அதிகாரங்கள் ஒழிக்கப்படுதல் மற்றும் தேர்தல்முறைமையில் மாற்றம் என்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதற்கு அனுகூலமான செயற்பாடுகள் எவற்றையும் காண முடியவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் பலதரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நிறைவேற்று அதிகாரங்களை ஒழித்துவிடுதல் மற்றும் தேர்தல் முறைமையில் மாற்றம் என்ற இந்த இரண்டு விடயங்களையும், 100 நாள்களுக்குள் செய்து முடிப்பது சாத்தியமற்றது என்ற சட்ட வல்லுநர்களின் வாதங்களைக் கருத்தில் கொள்ளும்போது, ஆட்சிக்கு வந்தவேகத்தில் மைத்திரி அரசு ஆலோசிக்காது அவசரப்பட்டு சில வாக்குறுதிகளை 100 நாள் திட்டத்தில் உள்ளடக்கி விட்டு இன்று திண்டாடி வருவதாகவே எண்ணத்தோன்றுகிறது.

மறுபுறத்தில் 100 நாள் வேலைத்[illegible]த்தை ஆராய்ந்து பார்த்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கென தேசிய நிறைவேற்றுச் சபையொன்றையும் மைத்திரி அரசு நியமித்துள்ளது. அதை வரவேற்க முடிந்தாலும் அதன் செயற்பாடுகளில் திருப்தி அடையமுடியவில்லை.

இந்தச் சபையின் அமைப்பாளராக மாதுளுவாவே சோபித தேரர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி, பிரதமர், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் ரவூப் ஹக்கீம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பியின் அனுரகுமார திஸாநாயக்க, அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க. ரிஷாத் பதியுதீன் மற்றும் மனோ கணேசன், சரத் பொன்சேகா ஆகியோர் இந்தச் சபையின் [illegible]னைய உறுப்பினர்கள் ஆவார்கள். ஆனால் சமூக நீதிக்கான இயக்கத்தின் தலைவரும் கோட்டே நாகவிஹாரையின் விஹாராதிபதியுமான மாதுளுவாவே சோபித தேரரை கூட்டங்களுக்கு அழைக்காது புறமொதுக்கி வைத்து விடும் செயற்பாடு வரவேற்கத்தக்க தல்ல. தேசிய நிறைவேற்று சபையின் அமைப்பாளராகத் தாம் நியமிக்கப்பட்டிருப்பதை ஊடகங்கள் வாயிலாகவே தாம் தெரிந்து கொண்டதாக அவர் ஆதங்கம் வெளிப்படுத்தியிருப்பது கவலைக்குரியதே.

இது இவ்வாறிருக்க நாட்டில் ஜனநாயக நல்லாட்சியை நிலைப்படுத்தும் பிரதான கட்டமைப்புக்களான – முன்னைய அரசினால் குப்பையில் வீசப்பட்ட நிலையில் காணப்படும் 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து ஆணைக்குழுக்களும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் நிறுவப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள சோபித தேரர், அவற்றின் மூலமாக மைத்திரி அரசின் ஜனநாயக நல்லாட்சிக் கனவை நன வாக்கிக் கொள்ள மிகப் பெருத்த பங்களிப்பொன்று கிடைக்கும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

மறுபுறத்தில் பதவியை இழந்ததன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை தனது கரங்களுக்குள் வைத்திருப்பதற்கே விரும்பினார் என்பதும் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு அவற்றை விட்டுக்கொடுத்தார் என்பதும் இரகசியமானதல்ல.

அது ஒருபுறமிருக்க, மஹிந்தவைச் சூழ்ந்திருந்தவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பட்டுத்தலைப்பாகை கட்டி இவர் எமது ஜனாதிபதி என்று தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடி வருவதையும் இன்று காண முடிகிறது. ஊழல் பேர்வழிகளான இவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையைப் பயன்படுத்திக் கொண்டு மறுபடியும் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து [illegible]வதற்கு குறிவைக்கிறார்களா என்பதும் ஆராயத் தக்கது. இது இவ்வாறிருக்க ஊழல் மோசடிப் பேர்வழிகளுக்கு வேட்புமனுக்கள் வழங்கப்போவதில்லையென்ற மைத்திரி அரசின் கடுமையான நிலைப்பாடு அத்தகைய அரசியல்வாதிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது.

முழுமையாக 100 நாள் வேலைத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மைத்திரி அரசுக்குத் தேவைப்படுகிறது. அதற்கு சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரண்டாலும் ஒன்றாகக் கலந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயத்துக்குள் – இக்கட்டுக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிக்கிக் கொண்டிருக்கிறார் என்பதும் கசப்பானதொரு உண்மையாகும்.

இன்னொரு புறத்தில் மைத்திரி தலைமையில் மீளவும் அரசியலில் தம்மைப் புகுத்திக் கொள்வதற்கு அந்த மோசடி அரசியல்வாதிகளுக்கு வாய்ப்புக் கிடைக்காது போகுமானால் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தனித்ததொரு சக்தியின் கீழ் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து கொள்ளும் திட்டமொன்றையும் அவர்கள் கைவசம் வைத்துக் கொண்டுள்ளனர். இதன் ஒரு தோற்றப்பாடு தான் நுகேகொடை பேரணியாகும் இரண்டாவதாக கண்டிப் பேரணியும் இடம்பெறப் போகின்றது.

இத்தகையதொரு அரசியல் சூதாட்டக் களத்தில் எதிர்பார்க்கப்படும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்தே போட்டியிடும். சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியென்ற இவையும் கூட தனித்தே போட்டியிடும் என்பதிலும் சந்தேகமில்லை. இந்த வட்டத்துக்குள் ஜே.வி.பி. உள்ளிட்ட செல்வாக்கான அரசியல் கட்சிகளும் களத்தில் உள்ளன.

இலங்கையின் அண்மைக் கால அரசியலில், பதவி ஆசை பணத்தாசை என்ற இரண்டுமே முக்கிய இடத்தில் உள்ளன. அதற்காக எத்தகைய தில்லுமுல்லுகள் தகிடுதத்தங்களைப் புரிவதற்கும் அவர்கள் தயங்கியதில்லையென்பது கசப்பான உண்மையே. இவற்றுக்குச் சற்று விதிவிலக்கான பிரமுகராக இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. சூது,வாது வஞ்சகங்கள் மலிந்த தரங்கெட்ட அரசியல் வாதிகளின் மத்தியில் தாக்குப்பிடித்து சாணக்கியமாகச் செயற்பட்டு 100 நாள் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்து வைப்பாரா? திட்டமிட்டபடி பொதுத்தேர்தலொன்றை நடத்தி முடிப்பாரா? இனிமேலாவது தனக்கென்ற தீர்க்கமானதொரு வட்டத்துக்குள் செயற்பட்டு அவரது அரசுக்குக் கெடு வைக்கப்பட்டுள்ள 100 நாள்களில் எஞ்சியிருக்கும் நாள்களைப் பயன்படுத்தி அரசை மீளவும் தக்க வைத்துக் கொள்வாரா? என்ற வினாக்களுக்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

முழுமையாக 100 நாள் வேலைத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமானால் நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மைத்திரி அரசுக்குத் தேவைப்படுகிறது. அதற்கு சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரண்டிலும் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயத்துக்குள்—இக்கட்டுக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிக்கிக் கொண்டிருக்கிறார் என்பதும் கசப்பானதொரு உண்மையாகும்.



## அவரின் சாணக்கியம் கை கொடுக்குமா?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 600 | 600 | 500 |
| நண்டு | 250 | 400 | 450 | 250 | 350 |
| கணவாய் | 500 | 450 | 400 | 500 | – |
| பாரை | 400 | 450 | 400 | 400 | 370 |
| சுறா | 450 | 500 | 550 | 600 | 450 |
| சீலா | 250 | 350 | 400 | 350 | 300 |
| விளை | 500 | 300 | 350 | 330 | 320 |
| முரல் | 250 | 250 | 300 | 300 | 280 |
| கும்பிளா | 300 | 300 | 300 | 400 | 300 |
| கிழாக்கன் | 250 | 500 | 450 | 300 | 300 |
| ஒரா | 100 | 250 | 350 | 350 | 250 |
| திரளி | 100 | 200 | 300 | 200 | – |
| நகரை | 100 | 200 | 250 | 300 | 300 |
| சூடை | 100 | 150 | 180 | 100 | 80 |
| ஒட்டி | 100 | 150 | 200 | 200 | 200 |
| திருக்கை | 100 | 300 | 150 | 250 | 140 |
| பாலை | 380 | 300 | 400 | 350 | – |
| வாழை | 150 | 150 | 180 | 200 | 250 |
| கொய் | 100 | 150 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 200 | 250 | 200 | 250 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### எப்போதும் வெற்றி பெறுவது அன்பு

எப்போதும் வெற்றி பெறுவது அன்பு மட்டுமே. அன்புடன் ஒப்பிடும் போது நூல்களும், அறிவும், யோகமும், தியானமும், ஞான ஒளியும் ஆகிய யாவுமே அதற்கு ஈடாகாது.
வரம்பு கடந்த ஆற்றல் கொண்ட இறைவனை தூய்மையான மனதோடு பற்றிக் கொள்ளுங்கள். அவரைச் சார்ந்து நின்று வாழுங்கள். உங்களை வெல்ல யாராலும் முடியாது.
கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அன்பையும், உதவியையும், சேவையையும் மற்றவர்களுக்கு கொடுத்துப் பழகுங்கள். இதற்காக எதையும் எதிர்பார்க்க வேண்டாம்.
எதைப் பிறருக்கு கொடுக்கிறோமோ அது திரும்பவும் ஆயிரம் மடங்காக எம்மிடமே திரும்பிவிடும். ஆனால், இப்போதே அதைப்பற்றிச் சிந்திக்காதீர்கள். நீங்கள் செய்யவேண்டியது எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் பிறருக்குக் கொடுப்பது மட்டுமே.

## தவக்காலச் சிந்தனை

### நன்றி கூறல் மேன்மையின் தேடல்

எமது அன்றாட தேவைகள் விண்ணப்பங்கள், கண்ணீர்களை இறைவனிடம் எடுத்துக் கூறி மன்றாடுகிறோம். அவரது கருணையால் கேட்டவை கிடைத்ததும் கடவுளுக்கு நன்றி கூறக் கூட மறந்து விடுகிறோம். நன்றியில்லா வாழ்க்கை நரம்பற்ற வீணைக்குச் சமனாகும். கணப்பொழுது கூட எம்மை மறவாது தமது உள்ளங்கைக்குள் வைத்துப் பாதுகாத்து வரும் தேவனுக்கு நன்றி கூறும் மனநிலை ஏன் எம்மில் வளரவில்லை?
அனைவருக்காகவும் மன்றாடுங்கள் இறைவனிடம் வேண்டுங்கள். பரிந்து பேசுங்கள், நன்றி செலுத்துங்கள் (1தீமோ 2:1) உணவு, உடை, உறையுள், அறிவு, ஆற்றல், பாதுகாப்பு, நல்லுறவுகள், பிறர் அன்பு உதவிகளைத் தந்து பலர்வழியாக எம்மை நிறைவு செய்துவரும் இறைவனின் ஒப்பற்ற அன்புக் கரிசனைக்காக எந்த நாளும் நன்றி செலுத்துவது கடமையாகும்.
இன்பத்திலும் மட்டுமல்லாது துன்பவேளையிலும் நன்றி செலுத்துவோம். ஏனென்றால் துன்பங்கள் எம்மை வளப்படுத்த பேராபத்திலிருந்து தவிர்க்க அவர் தரும் சந்தர்ப்பங்களே. நன்றிப்புகழ் பாடும் போது இறைவன் மேலும் பல நன்மைகளைப் பொழிய மனமிரங்குவார். பொன், பொருள், காணிக்கைகளை விட நன்றித்தனத்தையே இறைவன் மனமுவந்து ஏற்றுக்கொள்வார். வல்லவரைப் போற்றி தொல்லைகள் நீங்கி வாழ்வோம். இது நாள் வரை எம்மை உயிரோடு பாதுகாத்து வரும் அவரது அன்பை நினைத்து கோடி நன்றி கூறிப்புகழ்வோம். இறைநன்றி பிறர் அன்புக்கு வித்திடும்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

## நாளை

**மாசி-24**
**ஞாயிற்றுக்கிழமை**
**08.03.2015**

திதி:திருதியை பி.இ.05.44 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.ப.04.36 வரை
சுபநேரம்: 09.24-10.54 வரை
இராகுகாலம்: 04.54-06.24 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 1 | | | 4 |
| 1 | 4 | 8 | | | 3 | 6 | 5 | 7 |
| | | 3 | 4 | | 5 | | | |
| 8 | 7 | | | | | 5 | | |
| 3 | | | 2 | | 8 | | | 9 |
| | | 5 | | | | | 1 | 3 |
| | | | 8 | | 7 | 1 | | |
| 4 | 3 | 1 | 5 | | | 7 | 6 | 8 |
| 2 | | | 1 | | | | 4 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 4 | 1 | 2 | 8 | 7 | 9 | 3 |
| 9 | 3 | 7 | 5 | 4 | 6 | 1 | 8 | 2 |
| 2 | 8 | 1 | 9 | 7 | 3 | 5 | 4 | 6 |
| 3 | 1 | 5 | 2 | 6 | 9 | 8 | 7 | 4 |
| 7 | 9 | 8 | 3 | 5 | 4 | 2 | 6 | 1 |
| 6 | 4 | 2 | 8 | 1 | 7 | 3 | 5 | 9 |
| 4 | 2 | 6 | 7 | 3 | 5 | 9 | 1 | 8 |
| 8 | 7 | 3 | 4 | 9 | 1 | 6 | 2 | 5 |
| 1 | 5 | 9 | 6 | 8 | 2 | 4 | 3 | 7 |

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நினைவாற்றலை அதிகரிக்க என்ன செய்யலாம்?

மனிதனின் நினைவாற்றலுக்கும் மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. உண்மையில் மனதை எந்தளவுக்கு ஒரு முகப்படுத்துகின்றோமா அந்தளவுக்கு எங்களது ஞாபக சக்தியை அதிகரிக்க முடியும்.
அடிப்படை நினைவாற்றல் செயற்பாட்டை மனதின் ஒருநிலைப்பாட்டை மையமாகக் கொண்டு விவரிக்க முடியும். யோகா பயிற்சிகளின் மூலம் நினைவுச் செயற்பாட்டை அதிகரிக்க முடியும். அறிவு பலமாக அமையாது, சரியான அறிவே சக்தியாக கருத முடியும். மனதை ஒருநிலைப்படுத்துவதன் மூலம் நினைவாற்றலை அதிகரிக்க முடியுமா? ஆம், மனதை ஒருமுனைப்படுத்துவதன் மூலம் மூளைக்கு குறியேற்றப்படும் தரவுகளின் அளவினை வெகுவாக அதிகரிக்க முடியும்.
மனதை ஒருநிலைப்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான, சக்தி வாய்ந்த மூளையைப் பெற்றுக்கொள்ள முடியும். அனேகமானவர்கள் தங்களது நினைவாற்றறை விருத்தி செய்வதில் சிரத்தை காட்டுகின்றனர். அடிப்படை நினைவுத் தொழிற்பாடு மற்றும் மனதை ஒருநிலைப்படுத்தல் ஆகியன சிறந்த கலவையை



உருவாக்குகின்றன. மூளையில் தகவல்களை ஆழமாக குறியேற் [illegible] படுத்திக்கொள்ள முடிகிறது.

# மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40–60 | 30–60 | 30–50 | 20–30 | 20–30 | 40–50 | 20–40 |
| கத்தரி | 80–150 | 100–120 | 120 | 100–140 | 100–160 | 120–140 | 100–140 |
| கரட் | 100 | 130–170 | 200 | 80–120 | 120–140 | 120–140 | 100–130 |
| மரவள்ளி | 50 | 50–70 | 40–80 | 35–40 | 60 | – | 30–50 |
| பயிற்றை | 50–70 | 40–70 | 40–80 | 70–100 | 70–120 | 120–140 | 80–120 |
| பாகல் | 80–120 | 60–80 | 80–120 | 80–120 | 110 | 120–100 | 90–110 |
| கருணைக்கிழங்கு | 30–60 | 50–70 | 60–80 | 30–40 | 60 | 80–100 | 55 |
| பெ.வெங்காயம் | 80–100 | 60 | 80 | 70–90 | 80–120 | 75–100 | 70 |
| சி.வெங்காயம் | 60–100 | 60–90 | 80–120 | 50–100 | 60–120 | 80–120 | 50–80 |
| பூசணி | 60 | 60 | 50–70 | 70–100 | 80 | 120–140 | 70 |
| தக்காளி | 80–100 | 80–120 | 40–90 | 30–60 | 60 | 100–120 | 30–50 |
| வாழைக்காய் | 80 | 80–100 | 70 | 50–90 | 80 | 80–100 | 65–75 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 10–20 | 30 | 25–15 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 30 | 20 | 15 | 15–30 |
| மிளகாய் | 70–140 | 90–160 | 80–120 | 60–120 | 120 | 120–140 | 80–120 |
| புடோல் | 40–60 | 60–120 | 60 | 50–80 | 60 | 120–140 | 50–80 |
| கோவா | 60 | 70 | 70 | 30–60 | 80 | 80–100 | 40–60 |
| வெண்டி | 100 | 60 | 80 | 50 | 60 | 80 | 40 |
| போஞ்சி | 120–160 | 60–90 | 80 | 80–120 | 180 | 240 | 150 |
| லீக்ஸ் | 180–220 | 120–170 | 140–180 | 180 | 180 –220 | 160–190 | 120–180 |
| தேங்காய் | 40–60 | 40–60 | 40–60 | 30 –60 | 40 –60 | 40–60 | 40–55 |
| உருளைக்கிழங்கு | 80–100 | 80 | 70 | 60 –80 | 80 –100 | 80 | 70 |
| தேசிக்காய் | 50 | 50 | 60 | 30 –80 | 40 | 40 | 20–40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 | 10 | 20 | 20 |
| கறிமிளகாய் | 120 –160 | 120–180 | 120 –180 | 160–220 | 80–160 | 200–240 | 150 |
| இராசவள்ளி | 120 | 100 | 110 | 80–120 | 120 | 120–160 | 80–160 |
| பனங்கிழங்கு | 04 | 05 | 04 | 05 | 03 | 03 | 03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாதங்களில் பிறந்தவர்களின் பலன்கள்

## ஆடி

சூரியன் கடக ராசியில் சஞ்சரிப்பதை ஆடி மாதம் என்று அழைக்கின்றோம். இந்த ராசி சந்திரனுக்கு ஆட்சி வீடும், குருவுக்கு உச்ச வீடும், செவ்வாய்க்கு நீச வீடுமாகும். பஞ்ச தத்துவங்களில், இந்த மாதம் நீரைக் குறிக்கின்றது. சந்திரனின் அம்சங்களாகிய சாந்தம், அமைதி, பொறுமை காக்கும் தன்மை, கலை ஆர்வம், எல்லாவற்றிலும் பற்றுடைமை, சங்கீதம், நடனம், நாடகத்துறைகளில் பிரியம், மேலோரிடத்தில் மரியாதை, கடவுள் பக்தி, நேர்மை முதலியவை இந்த மாதத்தில் தோன்றியவர்களிடத்தில் சிறந்து விளங்கும்.

**தோற்றம்**

நடுத்தர உயரமுடைய இவரது இடைக்கு மேற்புறம் பருத்தும் கால்கள் சிறுத்தும் காணப்படும். உருண்டு, திரண்ட அங்க அமைப்புடையவர். தலை மேற்புறம் நீண்டு இருக்கும். உரோமங்கள் நீண்டும் அடர்த்தி குறைந்தும் காணப்படும். சிறிய கழுத்தும் கூரிய மூக்கும் புருவங்கள் உயர்ந்தும் கண்கள் நீர்படிந்தும் காணப்படும். சுறு சுறுப்பான தோற்றமுடையவர். நீண்ட நேரம் ஓரிடத்தில் தங்குவது அரிது.

**குணங்கள்**

இந்த ராசி சந்திரனுடையது. சந்திரன் எவ்வளவு துரிதமாக மாறு தலடைகிறதோ, அதே ரீதியில் ஆடி மாதத்தில் பிறந்தவர்கள் தம்முடைய செயலிலும் நடையிலும் மனோபாவத்திலும் கொள்கையிலும் கருத்துகளிலும் பிறர் புலனுக்குத் தோற்றமளித்திடுவர். 'முந்திரிக் கொட்டைகள்' என்று மற்றவர்களால் அழைக்கப் பெறுவர்.

கடகம் அல்லது நண்டு என்று, இந்த ராசி வடிவத்தைக் கொண்டு காரணப் பெயர் வைத்திருப்பதால், நண்டின் சுபாவமும் இவரது சுபாவமும் ஒத்ததெனக் கூறலாம். நண்டு இரை தேட வெளியே பரபரப்புடன் ஓடி உலாவும். இருக்கும் இடம் தெரி



யாமலும் பதுங்கியிருக்கும். ஆனால், மற்றவரது பார்வை தன் மீது படுமிடத்து 'விர்'ரென ஓடி ஒளிந்துகொள்ளும். ஆடியில் பிறந்தவர்களும் தங்கள் காரியங்களில் ஈடுபடும்போது மற்றவர் எதிரே வந்தால் சட்டென்று மறைந்துகொள்வர். பயந்த சுபாவமுடையவர். யார் என்ன நினைத்துக்கொள்வார்களோ என்ற அச்சம் இவரை விட்டு நீங்குவது வாழ்நாளில் அரிது.

பிடிவாத குணமுடையவர். தான் தோல்வியுற்றாலும் தனது வாதத்தை விட்டுக் கொடுக்கமாட்டார். கவனமின்மை, உதாசீனம் போன்ற குணங்களால் எதையும் பொருட்படுத்த மாட்டார். முக்கியமான விடயங்களை உடனே மறந்துவிடுவார். இவர் சரிவர விளங்கிக்கொண்டவை கொஞ்சம் தான் என்றாலும் ஆயுள் வரை மறக்கமாட்டார். எவ்வளவு நுணுக்கமான விடயமாயிருந்தாலும் இவரது கவனத்திலிருந்து மாறாது. நடந்த விட யங்கள் பற்றி அடிக்கடி பிரலாபிப்பார். குறுக்குப் புத்தியுடையவர். எதிலும் ஆழ்ந்த கருத்தும் கற்பனையும் உடையவர். இரக்க குணமுடையவர். குடும்பத்தில் மிகுந்த அக்கறையிருந்தாலும் சுயநலப் பேர்வழி. சீர்திருத்தக்கொள்கைகளுக்கு ஆதரவாக இவரது பேச்சு இருக்கும். ஆனால் சம்பிரதாயப் பழக்கங்களையே கைக்கொள்வார். பெரும்புகழைத் தேடவேண்டும் என்பது, இவரது வாழ்நாள் இலட்சியமாக இருக்கும். ஆனால், பெரும் பணக்காரராகவோ, பதவிகளை அடையும் எண்ணமோ கிஞ்சித்தும் இருக்காது. சிக்கன மாக இருப்பதை விரும்புவார். ஆனால் இவர் கைவைக்கும் காரியங்களில், இரு மடங்கு செலவினங்கள் வந்து இவரது கனவைக் கலைத்து விடும். தாராள மனப்பான்மையிருந்தாலும் கை சற்று அழுத்தம்.

நேரந் தவறினாலும் சுவையான, போஷாக்கான உணவு வகைகளையும் இனிப்பு வகைகளையும் ஒரு கை பார்ப்பார். கடன் பட்டேனும் வசதியை உயர்த்திக் கொள்வார். இவர் பயன்படுத்தும் பொருள்களை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பார். சந்தர்ப்பத்துக்கேற்ப சமாளிக்கும் திறமையும் தெளிவும் இவருக்குக் கை கொடுக்கும். மற்றவர்களின் எண்ணவோட்டத்தை சீக்கிரமாகக் கிரகித்துக் கொள்வார். இவரை நன்கறிந்தவர்கள் இவரிடத்தில் பழகும்போது மிகக் கவனமாகவே நடந்துகொள்வர். சின்னச் சின்ன நோய்களுக்கெல்லாம் பயந்து நடுங்குவார். தேவைக்கு அதிகமாகவே நோய்களைப் பற்றி கரிசனங் கொள்வார். நோய் இல்லாவிட்டாலும் ஏதோ ஒன்று பற்றியிருப்பதாகப் பயந்திடுவார்.

இக்கட்டான சூழலில் அதைவிட்டுத் தப்பிக்க நினைக்க மாட்டார். அதேசமயம், இவருக்கு வாக்குறுதி அளித்தவர்கள் அதை நிறைவேற்ற வேண்டி நச்சரித்திடுவார். அடிமை வாழ்க்கையை ஒரு நாளும் விரும்ப மாட்டார். எந்தத் தொழில் செய்தாலும் சுயமாகச் செய்வதுதான் நன்மை தரும் என்று தீவிரமாக நம்புவார். யாருடனும் கூட்டுச் சேர்ந்திட மறுத்திடுவார். சுயேச்சை விரும்பி.

**நோயும் சிகிச்சையும்**

ஆடியில் பிறந்தவர்களுக்கு அலைச்சல் மிகும். எந்நேரமும் பயணத்திலேயே பொழுதைக் கழிக்க வேண்டியிருக்கும். இடத்திற்கு ஏற்ப எது கிடைத்தாலும் உணவாக உட்கொள்வதால் அஜீரணக் கோளாறுகள், தலைவலி, நெஞ்சுவலி போன்றவை ஏற்படும். எண்ணெய் மற்றும் கொழுப்பு நிறைந்த உணவு வகைகளை கூடியவரை தவிர்த்தல் நன்மை தரும். உரிய வேளைகளில் போஷாக்கு நிறைந்த ஆகாரத்தை உட்கொள்வது சுகம் தரும். அடிக்கடி ஏற்படும் மலச்சிக்கலாலும் கண்பார்வைக் கோளாறு, நீர் கசிதல் போன்றவையாலும் தாங்கமுடியாத தலைவலி ஏற்படும் வாய்ப்புண்டு. கீரை வகைகள், பழவகைகள், பச்சைக் காய்கறிகள் ஆகிய வற்றை உணவில் சேர்த்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் வைத்துத் தலை முழுகுதல் கூடுதல் பயன் தரும்.

**குறையும் நிறையும்**

முன்னேற்றப் பாதையில் இவர் முன்னணியில் இருப்பார். கூச்ச சுபாவமுடையவர் என்றாலும் தேவையானபோது கூட்டங்களில் பங்கேற்பார். புதிதாக எதையும் படைப்பதை விட, ஏற்கனவே படைக்கப்பட்டதை மேன்மேலும் வளர்த்தெடுப்பதில் இவருக்கு நிகர் இவரே தான். நட்டம் ஏற்படும் வாய்ப்பு உண்டெனில் தலை வைத்தும் படுக்க மாட்டார். தன்னிடமுள்ள வளங்களையே பெரிதாக நினைத்திடுவார். எளிதில் இவரை ஏமாற்ற முடியாது. ஆனால், இவராகவே ஏமாறக்கூடிய நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படும். அவ்வாறான சூழலில்கூட, விரைவாக ஏமாற்றத்திலிருந்து மீண்டு வருவார். அமைதியை விரும்புவார். பிறருடைய கஷ்டத்தை கிஞ்சித்தும் எண்ணிப் பார்க்கமாட்டார். பொறுப்புகளை ஏற்பதற்குத் தயங்குவார். பண விவகாரங்களிலும் அப்படியே. இவரிடத்திலிருந்து அனுகூலங்களைப் பெறுவது மிகக் கடினம். வந்தவர்களை சாக்குப்போக்குச் சொல்லி அனுப்பி விடுவார். உறவினர்கள் மீது அதிக பற்றற்றவர். ஆனாலும் மிக நெருங்கிய உறவினர்கள் இவரை நேசித்திடுவர். எளிதில் வராது கோபம். வந்தால் கண் மூடித்தனமாக எதையும் செய்திடுவார். அது குறித்துப் பிறகு வருந்துவார். நிலையற்ற மனம் உள்ளவர். வளர்ச்சிக்குரிய காரியங்களையும் பத்திரப்படுத்தக் கூடிய சேமிப்பு விவகாரங்களையும் இவரிடத்தில் ஒப்படைப்பது சிறந்ததாகும்.


**வாழ்க்கைத் துணை**

கார்த்திகை, பங்குனி மாதங்களில் பிறந்தவர்களை வாழ்க்கைத் துணையாக வரித்துக்கொண்டால், அமைதியான வாழ்க்கை கைகூடும். தை, மாசி மாதங்களில் பிறந்தவர்களை நண்பராகவோ, துணையாகவோ கொண்டால் மனக்கசப்பே மிஞ்சும்.

**தொழில்**

ஓரிடத்தில் தங்கிச் செய்யும் தொழில்கள் இவருக்குச் சரிவராது. சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபடும் பணிகள் இவருக்கு உகந்தவை. நீரேந்துப் பிரதேசங்களில் இவர் பணியாற்ற நேரிடும். லாபம் இல்லை என்றெண்ணும் காரியங்களில் இவர் கலந்து கொள்ள மாட்டார். மக்கள் நெரிசலாகப் புழங்கும் இடங்கள், இவர் தொழில் செய்ய உகந்தவை. உணவுச் சாலைகள், கலையகங்கள், நெசவாலைகள், எண்ணெய் தொடர்பான தொழிற்சாலைகள், குடிபான வகைகளைத் தயாரிக்கும் நிலையங்கள், காகிதம் தொடர்பான தொழில்கள் இவருக்கு நல்ல ஆதாயம் சம்பாதித்துத் தரும். படம் வரைதல், நிழல் உருவங்கள் தயாரித்தல், வர்ணக்கலவை வேலைகள் போன்றனவும் பெயர் வாங்கித் தரும். அச்சுத் தொழில் உறுதுணையாக அமையும். எந்தச் சூழலிலும் வளைந்து கொடுத்து தம்மைக் காப்பாற்றிக்கொள்வதில் கெட்டிக்காரர்.

# பெண்கள் பற்றிய பழமொழிகள்...



- பெண் இன்றிப் பெருமையும் இல்லை : கண் இன்றிக் காட்சியும் இல்லை.
- பெண் கிளை , பெருங்கிளை .
- பெண் மிரண்டால் வீடு கொள்ளாது.
- பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும் .
- பெண்ணுக்கு பொன் இட்டுப் பார் .
- பெண் பாவம் பொல்லாதது .
- பெண் வாழ , பிறந்தகம் மகிழ
- பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றலுள்ள நீர் சக்தி
- காற்றை விடக் கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்
- பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள். ஆனால், பெரும் புயலிலும் அவள் ஒடிந்து விழ மாட்டாள்
- பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு சுபீட்சம் அடையாது
- பெண்ணின் இதயம் அவளுடைய உதடுகளில் இருக்கிறது. ஆனால், அவளுடைய ஆன்மாவோ அவளுடைய கண்களில் இருக்கிறது
- பொய்மை, கோழைத்தனம், கீழ்க்குணம் ஆகிய மூன்றுமே பெண்கள் பெரிதும் வெறுப்பவை
- பெண்களிடம் உள்ள நல்ல பண்பு அவர்களுக்குப் பாராட்டை உண்டு பண்ணுகிறது. ஆனால், அவர்களின் நல்ல நடத்தையே அவர்களைத் தெய்வங்களாக்குகிறது
- பெண்ணின் ஒழுக்கத்தில் நம்பிக்கை இருத்தலே குடும்ப இன்பத்தின் அடிப்படை.
- எந்த இடத்தில் பெண்கள் மரியாதையாக நடத்தப்படுகின்றனரோ அந்த இடத்தில் தேவதைகள் குடியிருக்கின்றனர்
- தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதே பெண்களுக்கு அழகு.
- பெண்ணாய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திருக்க வேண்டும்
- ஒரு பெண்ணின் உள்ளமாகிய கடலில் இரக்கம், தியாகம், கற்பு, காதல் ஆகிய நன்முத்துக்களைக் காணலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காகமும் நாய்க்குட்டியும்


ஒரு வீட்டில் நாய்க்குட்டியொன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க் குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது. இதைக் கண்ட நாய்க் குட்டி காகத்திடம் சென்று. என்ன காக்கையாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்று கேட்டது. அதற்கு காகம், மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள் ஆனால் என்னை வெறுத்து. கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்? என்று கேட்டது காகம். இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள், என்றது நாய்க் குட்டி. எங்களிடம் அப்படி என்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர் கள்! என்று சொன்னது காகம். உண் மைதான்! என்றது நாய்க் குட்டி. பகிர்ந் துண்ணும் பண்பைக் கற்றுத்தந்ததும் நாங்கள் தான்! என்று பெருமையோடு சொன்னது காகம். ஆமாம் அதுவும் உண்மைதான்! என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி. இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்? குயில் கூவும்போது அதன் இனிமையை இரசிக்கிறார்கள். மயிலாடும் போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்? என்று மீண்டும் கேட்டது காகம். ஏன் என்று நான் சொல்லுகிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும். உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள் என்று கூறியது நாய்க்குட்டி. அப்படி என்ன தீய குணங்கள்? என்று கேட்டது காகம். திருடுதல், ஏமாற்றுதல், என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது. ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும். அவரின் ஒரு சிறு தீயசெயல் அவரை, அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அந்தத் தீயசெயலே முன்னிற்கும்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க...



## சாயாது கட்டப்பட்ட கோபுரம்

அபுதாபியில் தேபிடல் கேட் கோபுரம் தானாக சாயவில்லை. சாய்வாகவே கட்டப்பட்டிருக்கிறது. இதுதான் இந்தக் கோபுரத்தின் சிறப்பு. பைசா கோபுரத்தைக் காட்டிலும் 4 மடங்கு சாய்வு. அதாவது 18 டிகிரி கோணத்திற்கு இந்தக் கோபுரம் சாய்ந்திருக்கிறது. 160 மீற்றர் உயரம் கொண்ட இந்தக் கோபுரத்தில் 35 தளங்கள் உள்ளன. முதல் தளங்கள் மட்டுமே செங்குத்தாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அடுத்தடுத்த தளங்கள் படிப்படியாகச் சாய்வாகக் கட்டப்பட்டுள்ளன. பைசா கோபுரம் போல இது மேலும் சாயாமல் இருக்க, நடுப்பகுதியிலிருந்து மிகப்பெரிய தூண் எழுப்பப்பட்டுள்ளது. சாய்ந்துள்ளதற்கு எதிர்த் திசையில் கட்டடத்தை இழுத்தவாறு மிகப் பெரிய கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கோபுரம், மனிதர்களால் உருவாக்கப்பட்ட முதல் சாய்ந்த கோபுரம்.



## கிளிகள்



உலகில் 372 கிளி வகைகள் உள்ளன.
பெரும்பாலான கிளி வகைகள் வெப்ப மண்டலப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன.
வளைந்த அழகான அலகும், பளீர் வண்ணமும், உறுதியான கால்களும் கிளிகளுக்கு அழகு சேர்க்கின்றன. பறவை இனங்களில் புத்திக் கூர்மை கொண்டவை கிளிகள்.
மனிதர்களின் குரல்களைக் கேட்டு அவர்களைப் போலவே ஒலி எழுப்பும் ஆற்றல் பெற்றவை கிளிகள்.
சில வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தால் அதைத் திருப்பிச் சொல்லும்.
பெரும்பாலான கிளிகள், பழக் கொட்டைகளையே அதிகம் உண்கின்றன. சில வகை கிளி இனங்கள் பழங்கள், தேன், மலர்கள், சிறு பூச்சிகளையும் சாப்பிடும்.
'பட்ஜரிகர்' 'காக்கடீல்' இனங்கள் கிளிகளில் மிகப் பிரபலமானவை.
சில வகைக் கிளிகள் 80 வயது வரைகூட வாழும்.
வண்ணக் கொண்டை உடைய அழகிய 'காக்கட்டூ' வகை கிளிகளில் 21 வகை உண்டு.
கிளி ஓராண்டுக்கு ஒரு முட்டை மட்டுமே இடும். கிளிகளின் எடை 10 கிராம் அளவில் இருந்து 4 கிலோ வரைக்கும் இருக்கும். 8 சென்ரிமீற்றர் முதல் ஒரு மீற்றர்; வரையிலான அளவுகளில் கிளிகள் காணப்படுகின்றன. ஆபிரிக்க சாம்பல் ஆண் கிளிகள், மனிதர்களின் பேச்சைப் புரிந்து கொள்வதில் திறமை வாய்ந்தவை.

## வாழ்க்கையை தேர்கொள்வது எப்படி?

(தொடர்ச்சி)
வெற்றி என்பது தானாக வராது மற்றவருக்கு உதவுவதா லும் வரும். வெற்றி என்பது கொடுப்பது, பின் அடைவது இது விளையாட்டல்ல நிஜம். வெற்றிபெற வைப்பவன் பின் தானும் வெற்றி பெறுவான்.
வாழ்க்கையில் வெற்றிபெற விரும்புகிறாயா முதலில் பாராட்டக் கற்றுக்கொள்.
பாராட்டுகிற பழக்கமுள்ளவன் ஒருபோதும் தோல்வியடையமாட்டான். அவனை மற்றவர்கள் தோளில் சுமந்து சென்று வெற்றி மேடையில் அமர வைப்பர்.
எண்ணங்களோடு உங்களை இணைத்துக் கொள்ளாதீர்கள். உணர்வுகளுக்கான நேரம் வரும், நேரம் போகும். எதிர்மறை எண்ணங்களோடு உங்களை இணைத்தால் அதற்கு அடிமையாவது நிச்சயம்.
உங்களைச் சுற்றிப்பாருங்கள். உலகம் முழுவதையும் புரிந்து கொள்ள வேண்டியதைப் புகட்டும் பல்கலைக்க்ழகம் சுற்றியிருப்பதை உணர்வீர்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஆழமான விசயம் ஒன்றைப் புரிய வைக்கிறது.
பறவைகள் கூடு கட்டும்போது ஒரு சொட்டு நீர் கூட உள்ளே புகாத வகையில் கூட்டைக் கட்டும். இந்தப் பொறியியல் அற்புதத்தை எங்கிருந்து அவை பெற்றன. அவை தமது தாய்ப்பறவையின் கருவில் இருந்தே கற்றுவிட்டன. பிறக்கப் போகும் குஞ்சுகள் மீதுள்ள அன்பு, குஞ்சுகளுக்கு கூடுகட்டும் கலையையே கற்றுக் கொடுக்கிறது.
பாரம்பரியத்தை சிறிது ஒதுக்கி வைத்துவிட்டு, உறவுப் பிணைப்புக்களை கவனிப்பதில் கவனம் செலுத்துங்கள்.
காதலி ஏமாற்றிவிட்டாள் என்று கருத வேண்டாம், காதலி மீது நீங்கள் இதுவரை வைத்திருந்த அபிப்பிராயம்தான் உங்களை ஏமாற்றிவிட்டது என்பதே உண்மை.
நீங்கள் இந்த உலகத்தில் பிறந்ததற்கான காரணம் முழுமையாக நடைபெற வேண்டுமானால் குறைந்தபட்சம் மற்றவருக்கு உதவுவதை நிறுத்தாதீர்கள். ஒருவேளை உங்களால் மற்றவருக்கு உதவ முடியாமல் போனால் அவர்களை வேதனைப்படுத்தாமலாவது இருக்கப்பாருங்கள்.
அறிவு புத்தகங்களில் இருந்து படிக்கும் ஒன்றல்ல, ஒருவர் பழகும் முறையில் இருந்து அவரிடமுள்ள அறிவின் ஆழத்தைப் படிக்கலாம்.
ஒருவர் தொழிலில் முன்னேற வேண்டுமானால் 35 சதவீதமான அறிவு போதுமானது. 65 சதவீதம் மற்றவர்களோடு எப்படிப் பழக வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும்.
நீங்கள் செய்த தவறு என்னவென்று .. கூறியபடி மற்றவருடன் பேச ஆரம்பிக்க வேண்டாம். புகழ்ச்சியுடன் இடையிலேயே விமர்சனங்களை வையுங்கள்.
நீ கேட்க முடியாத ஒரு குரலை நான் கேட்கிறேன், அது சொல்கிறது நீ பின்தங்கிவிடக் கூடாது என்று, அதுபோல நீ காண முடியாத ஒன்றை நான் காண்கிறேன் அது என்னை பொருத்த மான இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. காணவும் முடியாது, கேட்கவும் முடியாத உன்னை நான் எப்படி பின்பற்றுவது ? தான் செய்ய வேண்டிய வேலையுடன் பிறக்காத மனிதன் எவனும் உலகில் இல்லை. அதை அறிய முன் னரே பிள்ளைகளை பலவந்தப்படுத்தி இன்றைய உலகின் மோசமான கல்விக்குள் கட்டாயப்படுத்தித் திணிக் காதீர்கள். யாரோ ஒருவர் பணம் சம்பாதித்துவிட்டார் என்பதற்காக அவருடைய தொழிலையே நீங்களும் தேர்வு செய்யாதீர்கள்.



வாய்ப்பை உபயோகிக்கத் தெரியாத மனிதனுக்கு அதைக் கொடுப்பதால் என்ன பயன் இருக்கப்போகிறது. வாய்ப்பு வந்தும் பலர் செக்குமாடுகளாக இருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு வாய்ப்பு வருவதும் தெரியாது, போவதும் தெரியாது. வாய்ப்புக் குறைவு என்று கூறுவது பலவீனமான சஞ்சல மனம். உண்மையில் வாய்ப்புக்கள் நிறைந்துள்ளன என்பதே யதார்த்தம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீரெலா கட்சித் தலைவர் வவுனியாவில் அட்டகாசம்

## குடும்பஸ்தரைத் தாக்கி கொலை மிரட்டலும் விடுத்தார்

யாழ்ப்பாணம், மார்ச். 7

ஸ்ரீரெலோ கட்சியின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் வவுனியாவில் குடும்பத் தலைவர் ஒருவரைத் தாக்கி அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. காயமடைந்தவர் வைத்திய சாலைக்குச் சென்றால் அவரைக் கொன்றுவிடப்போவதாக அந்தக் கும்பல் அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பத்துப் பதினைந்து பேர் கும்பலாக வந்து தன்னைத் தாக்கிப் காயப்படுத்தியதுடன், பொலிஸில் தான் செய்திருந்த முறைப்பாடு ஒன்றைத் திரும்பப் பெறும்படி தன்னை அவர்கள் நிர்ப்பந்தித்தனர் என்று வவுனியா கற்பகபுரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் தெரிவித்தார். பொலிஸாரும் இந்தக் கும்பலுக்கு ஆதரவாகச் செயற்பட்டு தன்னை மிரட்டினர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

வீட்டில் இடம்பெற்ற திருட்டு மற்றும் பாடசாலையில் கற்கும் தனது மகளுக்கு இளைஞர்கள் சிலர் கொடுத்த தொந்தரவு தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தான் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே இந்தத் தாக்குதல் மற்றும் அச்சுறுதல் நிகழ்ந்ததாக கற்பகபுரத்தைச் சேர்ந்த ச.ஜெகநாதன் (வயது 39) தெரிவித்தார்.

"கடந்த முதலாம் திகதி எனது வீட்டில் திருட்டு இடம்பெற்றுள்ளது. சுமார் 25 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பொருள்கள் திருடப்பட்டன. அது தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்தேன். கடந்த 3ஆம் திகதி, எனது மகளைச் சில இளைஞர்கள் சீண்டினார்கள். மாணவியான எனது மகள் கோயிலுக்கு அருகாமையிலுள்ள பாதையூடாக வந்துகொண்டிருந்த போது அங்கு நின்றுகொண்டிருந்த சில இளைஞர்கள் பகிடி சேட்டையில் ஈடுபட்டமை குறித்தும் பொலிஸில் முறையிட்டேன். அதைத் தொடர்ந்து 5ஆம் திகதி பிற்பகல் வான் ஒன்றில் கும்பலாக வந்தவர்கள் என்னைத் தாக்கினார்கள்.

"வவுனியாவிலுள்ள ஸ்ரீ ரெலோ கட்சியின் தலைவர் உதயராசா மற்றும் அதே கட்சியைச் சேர்ந்த பில்லா உள்ளிட்டவர்கள் அந்தக் கும்பலில் இருந்தனர். சுமார் 15 பேர் தொடக்கம் 20 பேர் வரையிலானோர் வந்திருந்தனர். கொட்டனாலும் கைகள் கால்களாலும் என்னைத் தாக்கினார்கள். பொலிஸில் முறைப்பாடு செய்வியா? என்று கேட்டுக் கேட்டுத் தாக்கினார்கள். ஏற்கனவே பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை வாபஸ்பெறும்படி கூறிக் கூறித் தாக்கினார்கள்.

"அதன் பின்னர் என்னையும் எனது மக்களையும் தமது வாகனத்தில் பலவந்தமாக ஏற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்த பொலிஸ் பொறுப்பதிகாரியும் அந்தக் கும்பலுடன் சேர்ந்து செயற்பட்டார். இனிமேல் பொலிஸ் நிலையத்துக்கு வரக்கூடாது என்று மிரட்டினார். அப்படி வந்தால் நிலத்தில் போட்டு அடிப்பேன் என்றும் கூறி எச்சரித்து அனுப்பி விட்டார். வைத்தியசாலைக்குச் சென்றால் கொன்றுவிடுவோம் என்று அச்சுறுத்துகிறார்கள். அதனால் காயங்கள், நோ ஏற்பட்டுள்ளபோதும் வைத்தியசாலைக்குச் செல்லவில்லை. நடந்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாவிலுள்ள அலுவலகத்தில் மட்டும் முறைப்பாடு செய்துள்ளேன்" என்று ஜெகநாதன் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஸ்ரீரெலோ கட்சியின் உதயராசாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தான் நேற்று முன்தினம் அவரது வீட்டுக்கு முன்பாக உள்ள கோயில் திருவிழாவுக்குச் சென்றிருந்தார் என்றும் மகளை யாரோ அச்சுறுத்திய விடயம் தொடர்பில் ஜெகநாதன்தான் அவரது வீட்டுக்குத் தன்னை அழைத்துக் கதைத்தார் என்றும் தெரிவித்தார். தனது மகள் அச்சுறுத்தப்பட்டமை குறித்து பொலிஸில் முறையிட வேண்டும் என்று கூறியதனால் அவரை பொலிஸ் நிலையத்துக்குத தான் அழைத்துச் சென்றார் என்றும் அவர் கூறினார். சம்பவம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மழுப்பலான பதில்களையே வழங்கினார்.

இதேவேளை, தனது மகள் அச்சுறுத்தப்பட்டமை குறித்து ஜெகநாதன் முன்கூட்டியே பொலிஸில் முறைப்பாடு செய்து விட்டார் என்றும் அது தொடர்பில் உதயராசாவிடம் அவர் உதவி எதனையும் கேட்கவில்லை என்றும் ஜெகநாதன் செய்த முறைப்பாடு கொடுத்தவர்களில் ஒருவர் உதயராசா குழுவைச் சேர்ந்தவராக இருந்த காரணத்தாலேயே அவர் தாக்கப்பட்டார் என்றும் தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத சாட்சி ஒருவர் தெரிவித்தார். (உ-4)

# துமிந்த சில்வாவை பாதுகாக்கமாட்டேன்

## நாடாளுமன்றில் கூறினார் ரணில்

கொழும்பு, மார்ச் 7

"துமிந்த சில்வா மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான வழக்குகளும் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் எந்தவொரு சட்டத்திலும் நான் தலையிடமாட்டேன்" எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் ஒழுக்கமிக்க அரசு மட்டும் உருவாகினால் போதாது. ஒழுக்கமிக்க ஊடகக் கலாசாரமும் உருவாகவேண்டும். அதை உருவாக்குவோம் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசேட அறிவிப்பொன்றை விடுத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் 'ஹிரு' தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணல் தொடர்பில் சில சில ஊடகங்கள் வெளிப்படுத்திய கருத்து தொடர்பில் உங்களின் அவதானத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

துமிந்த சில்வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலி ருந்து அவரைப் பாதுகாக்கத் தான் நான் இந்த நேர்காணலில் கலந்துகொண்டதாக 'சிரச' தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கூறப்பட்டது. அத்துடன், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதும் அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் 'சிரச' தொலைக்காட்சி நிறுவனத்தால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுமிக்க கருத்தை நிரூபிக்க அந்த சிரச ஊடக நிறுவனம் தொடர்ச்சியாக முயற்சித்தது எனத் தெளிவாகத் தெரிகிறது. அதனால் இது விடயம் தொடர்பாக இந்தச் சபைக்கு நான் விளக்கமளிக்கவுள்ளேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 'ஹிரு', 'சுவர்ணவாஹினி', 'டி.என்.எல்.' முதலான தொலைக் காட்சிகளில் நேர்காணலுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலின்போது நேர்காணலுக்கான கோரிக்கை விடுக்கப்பட்ட முறைமைக்கு அமைய 'ஹிரு' தொலைக்காட்சிக்கு நேர்காணலை வழங்கினேன்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, பேரம் பேச்சின் (டீல்) பிரதிபலனாகத்தான் இந்த நேர்காணல் இடம்பெற்றது என்றும் குற்றவாளியைப் பாதுகாப்பதாகவும் பரப்பப்படும் கருத்து நீதியானதல்ல. இலத்திரனியல் ஊடகங்களின் மத்தியில் போட்டியொன்று உள்ளமை எமக்குத் தெரியும். இதனால் ஒரு தொலைக் காட்சியைவிட முன்னணியில் இருக்க மற்றொரு தொலைக்காட்சி முயற்சிக்கிறது. ஆனால், அவ்வாறானதொரு முயற்சிக்கு நாட்டின் பிரதமரைத் தொடர்புபடுத்தி பிரதமர் மீது நீதியற்ற அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

குற்றவாளிகளைப் பாதுகாக்க நான் ஒருபோதும் செயற்படமாட்டேன். குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு – நான் எந்த நிறுவனங்களுக்கும் அழுத்தம் கொடுக்கவில்லை. சட்ட ஆதிக்கம் மற்றும் நீதித்துறை சுயாதீனத்துக்காக நான் எப்போதும் முன்னிற்பேன். நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தித் தான் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க மக்களுடன் இணைந்து உயிரைப் பணயம் வைத்துப் போராடினேன். அந்த நோக்கத்திலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்கவில்லை. இவ்வாறான நிலையில் இதுபோன்று குற்றச்சாட்டை முன்வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதமர் என்ற வகையில் எனது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்ற தடை ஏற்படுத்த முயற்சிப்பது எனது உரிமை மற்றும் சிறப்புரிமையை மீறுவதாகும். அது நாடாளுமன்ற சிறப்புரிமைச் சட்டத்தின் முதலாவது பிரிவின் உப பிரிவில் இலக்கம் ஒன்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்தச் சபையில் உள்ள எம்.பிக்களின் உரிமை மற்றும் சிறப்புரிமையைப் பாதுகாக்க நான் கட்டுப்பட்டுள்ளேன். அதனால் இது தொடர்பில் உடனடி விசாரணையை முன்னெடுக்குமாறு நான் உங்களிடம் (சபாநாயகரிடம்) கேட்டுக்கொள்கிறேன். இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறதா? இல்லையா என்று அந்த விசாரணையினூடாக வெளிப்படுத்தமுடியும். அத்துடன், அவ்வாறானதொரு விசாரணையில் 'சிரச' தொலைக்காட்சி மற்றும் அதில் கேள்வி எழுப்பியவர்கள், அவர்கள் முன்வைத்த கருத்து உண்மையெனில் அதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

நல்லாட்சியைக் கட்டியெழுப்ப நாம் செல்லும் இந்த முன்னோக்கிய பயணத்துக்குப் பல்வேறு சக்திகள் தடை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என எமக்குத் தெரியும். அந்தத் தடைகளையும் தாண்டி இந்நாட்டில் நாம் நல்லாட்சியை ஏற்படுத்துவோம். ஊழல், மோசடிகளைக் கண்டுபிடிப்போம். ஒழுக்கமிக்க அரசை மட்டுமல்ல. ஒழுக்கமிக்க ஊடக கலாசாரத்தையும் உருவாக்குவோம்" – என்றார். (த-சி)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் தர்மகர்த்தா)



பிறப்பு 28.12.1949 இறப்பு 06.03.2015

மாதகல் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் நேற்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் -செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற மாருதப்புரவல்லியின் (அன்னலட்சுமி) அன்புக் கணவரும், தெய்வநாயகி (சிங்கப்பூர்), வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாவதனி, புருஷ்சோத்தமன், அட்சரமூர்த்தி (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.ச வங்கி ஊழியர்), தர்சினி ஆகியோரின் அன்புத் தகப்பனும் கிருபாகரன், கிருபாவதி, குகபாலினி, ஐங்கரன் (யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருத்திகா, சண்முகப்பிரியன், அகிலோயன், மேனகன், தனோயன், வாசுகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.03.2015) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் மாதகலில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் வடக்கு,
மாதகல்.

(53545e5.3.7)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## திருமதி இராசமணி சுப்பிரமணியம்



பெரியாட்டி, கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சுப்பிரமணியம் நேற்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.03.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று மு.ப. 11.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சு. கமலதாசன் (மகன்)
077 6218308

கோப்பாய்.

## சின்னத்தம்பி செல்லத்துரை



நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் உடையார் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை நேற்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா- வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், பிறேமகாந்தி(ஜேர்மனி), செல்வராணி (சுவிஸ்), குலேந்திரன் (சுவிஸ்), உதயராணி (சுவிஸ்), ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம் (ஜேர்மனி), பத்மநாதன் (சுவிஸ்), ஜெயரூபன் (அசோக் சுவிஸ்), சுரேஸ்சினி ஆகியோரின் அன்பு மாமனும், லக்சிகா, மிலுசிகா (ஜேர்மனி), சௌமியா, பிரவீனா, அனோஜன் (சுவிஸ்), ஜதீர்தனா (மருத்துவ பீட மாணவி, ரஷ்யா), ஜெனுசன், பவிஜானி (சுவிஸ்), அக்ஷயா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2015) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0049245850043 -(பிறேமாகாந்தி, ஜேர்மனி), 0041 718451269 -(உதயராணி, சுவிஸ்), 0041 412401509- (செல்வராணி, சுவிஸ்), 0041762495390 -(குலேந்திரன், சுவிஸ்), 077 6569953- (ரவி, இலங்கை)

உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. தகவல் :செ. ரவிந்திரன் (ரவி)

## நாகராசா விநாயகமூர்த்தி



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா விநாயகமூர்த்தி நேற்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், முத்து -அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூமாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்மணி மற்றும் தங்கம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசமூர்த்தி (கனகராயன்குளம் ), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), ஸ்ரீதரன், உதயகுமார் (பிரான்ஸ்), இந்திரசித், காலஞ்சென்ற மகாலட்சுமி , சிவகுமார் (சிவன் சைவ உணவகம், வட் டுக் கோட்டை), நந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராதேவி, பத்மாதேவி, வனிதா, மகாலட்சுமி, அனிதா, சகுந்தலாதேவி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் வடக்கு, சுழிபுரம்
077 7958969, 0777951713,
0775105226

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தன் புத்திசாலி

*முஸ்லிம் காங்கிரஸ் பாராட்டு*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புத்திசாலித்தனமான முடிவு இன ஐக்கியத்தை வலுப்படுத்துகின்றது என முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் மத்திய செயற்குழு தெரிவித்துள்ளது.

இந்தக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதில் இருந்த இழுபறி நிலைமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சமயோசிதமாக அரசியல் அனுபவத்தின் புத்திசாலித்தனத்துடன் எடுத்த முடிவு கிழக்கு மாகாணத்தில் தமிழ்–முஸ்லிம் இன ஐக்கியத்தை வலுப்படுத்த உதவியுள்ளது என அந்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை ஆட்சியமைப்பு குறித்து மாகாணத்தில் வாழும் தமிழ்–முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் இனமுறுகல் நிலை ஏற்பட்டு விடுமோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் சரியான தருணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரினால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அக்குழு பாராட்டியுள்ளது.

மேலும் த.தே.கூ தலைவரினால் எடுக்கப்பட்ட முடிவு துணிச்சலும், அரசியல் புத்திசாதுர்யமும் மிக்கது என அந்தக் குழு தெரிவித்துள்ளது. (த)


### வேலை வாய்ப்பு

ஆர்ப்பிக்கோ கம்பனியின் நிரந்தர தற்காலிக வேலை வாய்ப்புகள் ETF, EPF உடன்

தொடர்புகளுக்கு: -

077 4550559, 024 5672722

### வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு அனுபவம் உள்ள கனரக வாகன சாரதி தேவை.

யாழ்ப்பாணம் கொழும்பு பேருந்து ஆசனப் பதிவகத்துக்கு கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆசனப்பதிவாளர் தேவை.

குறிப்பு தங்குமிடம் இலவசம். ஆண்கள் மட்டும்.

தொடர்புகளுக்கு: -077 5736003


## தனக்கு நேர்ந்த கஷ்டங்களை சபையில் விவரித்தார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 7

சுகாதார அமைச்சராக இருக்கையில் அவர் பட்ட கஷ்டங்களை நேற்று முன்தினம் சபையில் விவரித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டவரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காது அதை மூடி மறைத்ததற்காக 400 மருத்துவ நிறுவனங்களிடமிருந்து தலா 25 லட்சம் ரூபா வீதம் முன்னாள் ஆட்சியாளர்களால் பெறப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு பெறப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது எனத் தெரியாது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் இடம்பெறும் மோசடிகளை அலரிமாளிகையில் வைத்து சுட்டிக்காட்டுகையில் அதிகாரிகளின் முன்னிலையில் தான் அவமதிக்கப்பட்டதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே நாட்டில் ஊழல்கள் அதிகரித்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, அமைச்சரொருவருக்கு இருக்கக்கூடிய சுயாதீனத்தன்மை பறிக்கப்பட்டதாலும் தவறுகள் தொடர்ந்ததாலுமே முன்னாள் அரசிலிருந்து வெளியேறி இன்று அவர் ஜனாதிபதியாக இருக்கிறார் என்றும், தவறுகள் தட்டிக்கேட்கப்பட்டிருக்கும் பட்சத்தில் தான் இன்னும் அமைச்சராகவே இருந்திருப்பார் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நாடாளுமன்றில் நேற்று முதற்றடவையாக உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

45 வருடங்களாக பேச்சு மட்டத்திலேயே இருந்துவந்த மருந்துக் கொள்கையுடன் தொடர்புடைய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதையிட்டு சந்தோஷமடைகிறேன். நாட்டின் சுகாதாரத்துறைக்கு முக்கியத்துவ மிக்க விடயமாக இது காணப்படுகின்றது. நூறுநாள் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதை நிறைவேற்றியுள்ளோம். இதற்காக ஆணை வழங்கிய மக்களுக்கு நன்றி.

இந்த சட்டவரைவுக்கு என்ன நடந்தது என 2010 இல் தேடிப் பார்த்தேன். அதன் பிறகு வரைபு நகல் தயாரிக்கும் பணிகளை முன்னெடுத்தேன். 2011 டிசெம்பரில் சட்டவரைவு நகலைத் தயாரிக்கும் பணிகள் முடிவடைந்தன.

எனினும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட சட்ட வரைஞர் திணைக்கள அதிகாரிக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. நான் அவருடன் தொடர்பு கொண்டு சட்டவரைவு எங்கே என வினவினேன். களனியில் இருக்கிறது அனுப்புகிறேன் எனப்பதில் கிடைத்தது. ஆனால், களனியில் இல்லை. சட்டவரைவு இல்லை. கடைசியில் அவரும் இல்லை.

குறிப்பாக, இந்தச் சட்டவரைவை காணாமற்போகச் செய்வதற்கு சுமார் 400 மருத்துவ நிறுவனங்களிடம் இருந்து தலா 25 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது என எனக்குத் தகவல் கிடைத்தது. அதுபற்றி விசாரணை நடத்தப்படவில்லை. அதிகாரம் அப்போது எவரின் கைக்குள் இருந்திருக்கும் என்பது உங்களுக்கும் தெரியும். பணத்துக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது.

அதேவேளை, சுகாதார அமைச்சு தொடர்பில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டமொன்றின் போது ஊழல்கள் பற்றி நான் கருத்து வெளியிடுகையில், அதிகாரிகளை சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்குமாறு எனக்கு உத்தரவு வந்தது. இதையடுத்து அமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்பதை அதிகாரிகள் புரிந்துகொண்டனர். ஊழல்களும் தலைதூக்க ஆரம்பித்தன. அமைச்சர்களுக்கு சுயாதீனமாகவும், மனச்சாட்சியின்படியும் செயற்படுவதற்கு அப்போது இடமிருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நான் ஜனபதியானேன். நான் ஜனாதிபதியானதால்தான் இந்தச் சட்டவரைவை நாட்டு மக்களுக்காகக் கொண்டுவந்தேன். இதை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

சட்டவரைவு நிறைவேறி 24 மணித்தியாலத்துக்குள் பயன்பெற்றுவிட முடியாது. அதிகாரசபைக்குத் தெரிவாகவுள்ள அதிகாரிகளின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது. அத்துடன், பொதுமக்களுக்கு இலவச சுகாதார சேவையைத் திறம்பட வழங்குவதே எனது எதிர்பார்ப்பாகும் – என்றார்.


### மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை கமலாம்பிகை

இராஜ வீதி, தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை கமலாம்பிகை நேற்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இராஜ வீதி, தோப்பு, அச்சுவேலி* — தகவல்: குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை பாலசிங்கம்

யாழ். நிராவியடி பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாலசிங்கம் கடந்த (04.03.2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை ராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அன்னபூரணத்தின் (ராணி) ஆருயிர்க் கணவரும், பிரிந்தினி (சென்னை), குமுதினி (லண்டன்), ஜகந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதாபன் (சென்னை), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அக்ஷயா, அதித்தியா, சாயிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசையா, செல்லையா, சரஸ்வதி, ராஜரெட்ணம் மற்றும் அருளானந்தம் (லண்டன்), காலஞ்சென்ற கனகரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக தெகிவளை இந்து மயானத்துக்கு எடுத் துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

10A, அந்துல மாவத்தை, ரெம்பிளர் ரோட், கல்கிசை.

தகவல்: மனைவி, பிள்ளைகள் 0112 721307, 077 4533757

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111


## வெளிமாவட்ட மீனவர்கள் திருமலையில் அத்துமீறல்

### தீர்வு காண்பதற்கு 10 ஆம் திகதி சந்திப்பு

திருகோணமலை, மார்ச் 7

திருகோணமலைக் கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்களின் வருகைக்கு நிரந்தரமான தீர்வைக் காணும் முக்கிய பிரமுகர்களுடனான சந்திப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

திருகோணமலைக் கடற்பரப்பில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த கலாவத்தை பகுதி மீனவர்கள் பருவகால மீன்பிடிக்காக இயந்திரப் படகுகளில் வருகின்றனர். இதனால் உள்ளூர் மீனவர்களின் தொழில் பெரிதும் பாதிக்கப்படைந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி மீனவர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. எனினும் ஆர்ப்பாட்டத்தின் பின்னர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் நேற்று முன்தினம் 12 படகுகளுடன், கலாவத்தை மீனவர்கள் நிலாவெளி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிமாவட்ட மீனவர்களின் வருகையால் திருகோணமலை மாவட்டத்தின் 27 கடற்றொழிலாளர் சங்கங்களைச்சேர்ந்த பிரதிநிதிகள் 300 பேருக்குமேல் திரண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன், திருகோணமலை நகரசபை உறுப்பினர் கா.கோகுல்ராஜ் ஆகியோர் மாவட்ட அரச அதிபர், மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர், பிரதேச பொலிஸ் அதிகாரி ஆகியோருடன் தொடர்புகொண்டு கலாவத்தை மீனவர்களின் வருகையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாவட்ட அரச அதிபர் மற்றும் மீன்பிடி திணைக்கள உதவிப் பணிப்பாளர், குச்சவெளிப் பிரதேச செயலாளர் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருடனான சந்திப்புமூலம் இதற்கான நிரந்தர தீர்வு எட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–14)

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நட்டம் 24 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 7

இலங்கையின் தேசிய விமான சேவை நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நட்டமானது 2014 ஆம் ஆண்டில் 24 வீதமாக அதிகரித்துள்ளது.

விமான நிறுவனம் 2014 ஆம் ஆண்டில் 32.4 பில்லியன் இழப்பை சந்தித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2013 மற்றும் 2014 ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிறுவனம் 2013 ஆம் ஆண்டு 26.1 பில்லியன் நட்டத்தை எதிர்நோக்கியது. நிறுவனத்தின் நடவடிக்கை செலவானது 146.7 பில்லியனில் இருந்து 150.4 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

விமானப் பராமரிப்பு செலவுகள், விமானங்கள் திரும்பி வந்த மற்றும் விமானங்கள் மாற்றப்பட்டமை உள்ளிட்ட காரணங்களினால், 2014 ஆம் ஆண்டு 6.2 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அதற்கு முந்தைய ஆண்டில் இந்த செலவுகள் 3.14 பில்லியனாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## தேர்தல் நடத்தப்படாவிட்டால் ஐ.தே.கவும் வீதியில் இறங்கும்

### பொதுச் செயலாளர் கபீர் ஹஷிம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச், 7

அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் மக்களுக்கு வாக்குறுதி அளித்ததைப் போன்று தேர்தல் நடத்தப்படாவிடின் ஐ.தே.கட்சி என்ற அடிப்படையில் நாம் வீதியில் இறங்கிப் போராடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹஷிம் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

புதிய அரசின் 100 நாள் வேலை திட்டத்தினூடாக நல்லாட்சி பயணத்திற்கு நல்லதொரு சமிக்ஞை காட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் எளிமையான முறையில் தனது ஆட்சியை முன்னெடுத்து வருகின்றனர். வீண் விரயங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய மக்களுக்கு ஏற்ற ஆட்சியை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். பல சலுகைகளையும் பெற்றுக்கொடுப்போம். ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை உள்ளடக்கினோம். இதற்கமைய இதுவரை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியது போன்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்ற அந்த வாக்குறுதியையும் நிலை நிறுத்துவோம்.

இது தொடர்பில் அரச தரப்பில் முரண்பாடான கருத்துகள் எழுந்து வருகின்றன. எனினும் புதிய முறைமையின் கீழ் தேர்தல் நடத்துவதற்கு உரிய கால நேரம் குறைவாகவே உள்ளன. அவ்வாறு புதிய முறைமை தேர்தல் நடத்த வேண்டுமாயின் தேர்தல் ஆணையாளருக்கு யோசனை வழங்கவேண்டும். அதற்கு அவகாசம் போதாமல் உள்ளது. எனினும் இது தொடர்பில் அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் வீதியில் இறங்கி போராடப் போவதாக எச்சரிக்கின்றன. இது குறித்து எவ்வித ஆட்சேபமும் எமக்கு இல்லை. இது ஜனநாயக நாடாகும். இங்கே தமது உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்த முடியும். தற்போது ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன – என்றார். (த–10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளார் திஸ்ஸ

கொழும்பு, மார்ச் 7

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கட்சி உறுப்புரிமையைப் பாதுகாத்துக் கொள்ள உயர் நீதிமன்றின் உதவியை நாடியுள்ளார். தமது கட்சி உறுப்புரிமையை இரத்துச்செய்ய இடைக்காலதடையுத்தரவு பிறப்பிக்குமாறு திஸ்ஸ அத்தநாயக்க உயர்நீதிமன்றிடம் கோரியுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின் இறுதி நேரத்தில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து, ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறியிருந்தார்.

தேர்தலின் பின்னர் திஸ்ஸ அத்தநாயக்கவின் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்யக் கட்சியின் செயற்குழு தீர்மானித்தது.

–இவ்வாறு கட்சி உறுப்புரிமையிலிருந்து தம்மை நீக்குவதை தடுக்குமாறு கோரியே திஸ்ஸ அத்தநாயக்க உயர்நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். (த)

## கடற்படை தலைமையகத்துக்கு யோஷித ராஜபக்ஷ இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 7

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இணைக்கப்பட்ட அவரது மகனான லெப்டினன்ட் யோஷித ராஜபக்ஷ, நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் கடற்படைத் தலைமையகத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியும் தனது தந்தையுமான மஹிந்தவின் பாதுகாப்பு பிரிவுக்குத் தன்னை மாற்றுமாறு கடந்த மாதம் 12ஆம் திகதி லெப்டினன்ட் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அதற்கான அனுமதி கடற்படையினால் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, அவரை மீண்டும் கடற்படைத் தலைமையகத்துக்கு மாற்றம் செய்துள்ளதாகக் கடற்படை பேச்சாளர் இந்திக சில்வா தெரிவித்துள்ளார்.

அவரது சேவையின் தேவை அடிப்படையிலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் மேலும் கூறினார். (த)

## ஆபாச படம் அனுப்பியவர் கைதானார்

கொழும்பு, மார்ச் 7

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பெண்களின் கைத்தொலைபேசிகளுக்கு குறுந்தகவல் மூலமாக ஆபாச படங்களை அனுப்பிய இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் கட்டுப்பொத்த பகுதியில் உள்ள தபால் காரியாலயத்தில் சேவையாற்றுபவர் எனத் தெரிவித்துள்ளது பொலிஸ் ஊடகப்பிரிவு.

இவரைக் கைது செய்யும்போது இவரிடம் இருந்து மேலும் மூன்று கைத்தொலைபேசிகளும்,நான்கு சிம் அட்டைகளும் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும், இவர் மேல் மாகாண வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (த)

# பொதுபல சேனாவின் கொட்டம் அடக்குங்கள்

### மைத்திரி அரசிடம் முஸ்லிம் அமைப்பு கோரிக்கை

அம்பாறை, மார்ச் 7

நாட்டிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் கக்கும் பொதுபல சேனாவின் கொட்டம் அடக்கப்பட புதிய அரசு வழிவகை செய்யவேண்டும்.

–இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர், முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் கக்கும் வகையில் அண்மைக்காலமாக ஊடக மாநாடுகளை நடத்தி வெளியிட்டு வரும் கருத்துக்களைக் கண்டித்தே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்த அரசு காலத்தில் சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக குறிப்பாக முஸ்லிம்களின் மத, கலாசார, பாரம்பரிய விழுமியங்களுக்கெதிரான இனவாதம் கக்கி அடாவடிகள் புரிந்து வந்த பொதுபல சேனா மீண்டும் தலை தூக்கத் தொடங்கியுள்ளது.ஜனாதிபதித் தேர்தலையடுத்து சிறிது காலம் மௌனம் காத்த பொதுபல சேனா மீண்டும் தனது இனவாதக் குரலை எழுப்பத் தொடங்கியுள்ளது.

மஹிந்த நிறுவனத்தால் உரமூட்டி வளர்க்கப்பட்ட பொதுபல சேனாவின் இனவெறியாட்டங்கள் நல்லாட்சி மலர்ந்துள்ள இந்தக் கால கட்டத்திலும் முளை விடாது கிள்ளியெறியப்படவேண்டும்.

பொதுபல சேனாவின் முஸ்லிம்களுக்கெதிரான பேரினவாதச் செயற்பாடுகள் இன்னும் தொடருமானால் இந்த அரசின் மீதும் முஸ்லிம்கள் நம்பிக்கை இழக்க வேண்டிய நிலைமை உருவாகும்.

ஞானசாரதேரர் இரவில் தூங்கியெழுந்ததும் காலையில் முஸ்லிம்களுக்கு எதிராக எதையாவது பிதற்ற வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.மதப் பயங்கரவாதம் நாட்டில் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். சிறுபான்மை சமூகங்கள் இன்றைய நல்லாட்சியில் அச்சம் பீதியின்றி வாழ வழி வகுக்கப்பட வேண்டும் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-30)

## பழிவாங்கல் வேண்டாம்

### கேட்கிறார் நாமல்

அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தமது குடும்பத்தினர் மீதும், அரசியல் கட்சியின் மீதும் இவ்வாறு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு ஆதரவளித்த அப்பாவி மக்கள் தண்டிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் அரசியல்ரீதியாக பழிவாங்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். இதேவேளை– அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என அரசு கூறியுள்ளது. (த)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**ரூபவதி சபாரட்ணம்**

அன்னை மடியில்
02 * 11 * 1937

ஆண்டவன் அடியில்
07 * 03 * 2014

அன்புக்கு இலக்கணம் என் தாய் நீயே!
என் கண் முன் நடமாடும் என் தெய்வம் நீயே!
என் வாழ்வில் ஒளி வீசும் சூரியனும் நீயே!
மீண்டும் பிறந்தால் உன் மகனாக
நான் பிறக்க வரம் வேண்டும்.
என் அன்புத் தாயே!
நன்றி என்னும் மலர்களை - உன்
பொற்பாதங்களில் காணிக்கையாக்கி
இரு கரம் கூப்பி வணங்குகின்றேன்..
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

20, ராஜவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் வாடும்.
மகன்மார், மகள்,
பேரப்பிள்ளைகள்.
0044 7789232058

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**திருமதி வனித்தா கெங்காதரன்**

மண்ணில்
12 * 06 * 1974

விண்ணில்
05 * 02 * 2015

எங்களது இதயத்தின் அலைகள் துன்பத்தால் அடிக்கிறது
கருவறையில் காத்த உம்மை கல்லறையில் சேர்க்க நேர்கிறதே
நீர் எமக்காய் சிந்திய வியர்வையை மிஞ்ச கண்ணீர் தோற்றாது.
தாயே நீ மறைந்து தெய்வமானாய் - இனி
அம்மா என்றழைக்க யார் இருக்கின்றார்?
உன் செல்வங்கள் இரண்டும் இன்னும் அழுவதைப் பாரா யோ...
அகத்தினில் உன்னைத் தேக்கி அம்மா-
கண்ணீர் பொழிவதைப் பாராயோ?
அணைந்து போகாதம்மா போகாது.....
பூக்காதோ உந்தன் வாழ்வு என்று
புலம்பி நிற்கின்றோம்.

சிவன் கோவிலடி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சுகந்தினி மதியாவந்தன்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி உமையம்மா செல்லையா**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு துயர் பகிர்வதோடு ஆன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
13 * 04 * 1929



மறைவு
07 * 02 * 2015

அமரர்

**அன்னக்கண்டு ஐயாத்துரை**

கடந்த 07.02.2015 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் அன்னக்கண்டு ஐயாத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (08/03/2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அதனைத்தொடர்ந்து நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் வெளியிட்டோர்க்கும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

வேலுப்பிள்ளை கடையடி,
மாதகல்.

குடும்பத்தினர்.

### 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**லூக்காஸ்பிள்ளை அமலதாசன்**
**(வைமன்)**





பிறப்பு
11 . 09 . 1957

இறப்பு
07 . 03 . 2005

அன்பிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய்
பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை
அன்பாய்ப் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை
நாடியே சென்றீர்கள்
பத்து ஆண்டுகள்
பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம்
போற்றியே பணிந்திடுவோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்

இல.03, புது வீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை அரசு ஏற்றால்தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்

## நோர்வே தூதுவரிடம் வடக்கு முதலமைச்சர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

"இலங்கையில் நடந்ததைக் கூறி, நடந்த உண்மைகளை அரசு ஏற்றுக் கொண்டால்தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியும்" என்று நோர்வே தூதுவர் எச்.இ.கிறீத் லோகீனிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் நேற்று தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழு மேற்கொண்ட விசாரணை அறிக்கை ஜெனிவாவில் மார்ச் மாத அமர்வில் சமர்ப்பிக்கப்படாது செப்ரெம்பர் வரை பிற்போடப்பட்டமையானது தமிழ்மக்களுக்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று வடக்கு மாகாண முதலமைச்சரிடம் நோர்வே தூதுவர் கூறினார்.

தமிழ் மக்களுக்கு சார்பான நடவடிக்கைகளையே கடந்த காலங்களில் நோர்வே எடுத்து வந்திருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த நோர்வே தூதுவர் எச்.இ.கிறீத் லோகீன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தற்போதைய அரசியல் சூழல், ஏற்பட்ட மாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் தமிழ் மக்களுக்கு சாதகமாகவுள்ளனவா போன்ற விடயங்களை நோர்வே தூதுவர் எம்மிடம் கேட்டறிந்தார்.

அரசியல் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் எம்முடன் இணைந்து செயற்படுகிறார். அதேபோல பிரதம செயலாளரும் ஒத்துழைக்கிறார்.

ஜெனிவாவில் மார்ச் மாத அமர்வில் இலங்கை குறித்த ஐ.நா. விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படாது செப்ரெம்பர் மாதம் வரை பிற் போடப்பட்டமையானது தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்று நோர்வே தூதுவர் எம்மிடம் தெரிவித்தார்.

ஐ.நா. விசாரணை அறிக்கை பிற்போடப்படுவதால் எங்களுடைய உரிமைகள், உரித்துகள், பிரச்சினைகள் மறந்துவிடப்படுமோ என்ற அச்சம் காரணமாகவே நாம் தீர்மானத்தை தாமதப்படுத்தக்கூடாது எனக் கோரினோம் என்று அவருக்குத் தெளிவுபடுத்தினேன்.

அத்துடன், உள்நாட்டுப் பொறிமுறை என்ற பெயரில் இலங்கை அரசு காலத்தைக் கடத்த முயல்கிறது. அது ஓர் ஆரோக்கிய மான விடயமல்ல என்றும்தூதருக்குநான்கூறினேன்." – என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

உள்ளக விசாரணை என்பது பக்கச் சார்பானதாக இருக்கும் என்று தமிழ்மக்களது கருத்தாகவுள்ளது. எனவேதான், நாம் அதை நம்பவில்லை என்றும் நான் கூறினேன்.

சர்வதேச நாடுகள் இலங்கை குறித்து போதிய விளக்கங்களுடனேயே உள்ளன. எனவே, தமிழ்மக்கள் விடயத்தில் ஐயப்படவேண்டிய அவசியமில்லை. நோர்வே தமிழ்மக்களுக்கு சார்பான நடவடிக்கைகளையே கடந்த காலங்களில் எடுத்துவந்திருக்கிறது என்றும்சுட்டிக்காட்டினார்.

இன அழிப்புப் பிரேரணை இந்த நேரத்தில் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் மக்களுக்கு சார்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அதை தடுப்பதாக இது அமைந்துவிடும் என்றும் அவர் எம்மிடம் கூறினார். தமிழ் மக்களின் எண்ணத்தை பிரதிபலிப்பதாகவே நாம் பிரேரணையைக் கொண்டுவந்தோம். இங்கு நடைபெற்ற விடயங்களையே ஆவணம் சொல்கிறது. அதைப் பற்றி எவரும் பிழை சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அறிக்கையில் பிழையிருந்தால் எங்களுக்குக் கூறலாம். ஆனால், அப்படிக் கூறமுடியாது. காரணம், சர்வதேச தரத்தில் நாம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம் என்று அவருக்கு எடுத்து விளக்கியிருக்கிறேன்– என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (ற–106)

## குடியிருப்பு குளக்கட்டில் போதைப்பொருள் விற்பனை

வவுனியா, மார்ச் 7

வவுனியா குடியிருப்பு குளக்கட்டுப் பகுதியில் போதைப் பொருள்களுடன் தொடர்புடைய பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு போதைப் பொருள்களை நடமாடும் வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு மாணவர்களும், இளைஞர்களும் போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதால் அவர்களின் எதிர்காலம் பாழாகின்றது என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

போதைப் பொருள்களை விற்பனை செய்வோரைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடியிருப்புக் குளக்கட்டுப் பகுதியை அண்மித்து வசிக்கும் மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாணவர்களும், இளைஞர்களும் இதுகுறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற–402)

---

### வலி.வடக்கில்

அத்துடன் அவை மூன்று வாரங்களுக் குள் பொதுமக்களிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவை தொடர்பிலான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, மீள்குடியேற்ற செயற் குழுவும் அமைக்கப்பட்டிருந்தது.

மீள்குடியேற்ற செயற்குழுவின் முதலாவது கூட்டம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவர் ஹரின் பீரிஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்குப் பிரதேச செயலாளர்கள், ஹலோ ட்ரஸ் நிறுவன அதிகாரிகள், இராணுவத்தினர் கலந்து கொண்டிருந்தனர்.

மீள்குடியமர்வு மக்களை அனுமதிப்பதற்கு முன்னதாக, அந்தப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ஹலோட்ரஸ்ட் நிறுவனம் விடுவிக்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில், தொழில்நுட்ப ஆய்வை மேற்கொண்டு அதற்கமைவாக சான்றிதழ் சமர்பிக்கும்.

அவ்வாறு சமர்பிக்கப்படும் சான்றிதழின் அடிப்படையில், ஒழுங்கு முறையாக ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளாக மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படும். முதல் கட்டமாக வளலாயும் அடுத்து வசாவிளானும் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்படவுள்ளன.

மீள்குடியேற்ற செயற்குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ளது. (ற–5)

### ஜெயக்குமாரியை

மன்னார் மாதர் அமைப்புடன் இணைந்து பெண்கள் அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தன.

ஜெயக்குமாரியின் வழக்கு நேற்றுப் புதுக்கடை நீதிமன்றில் நீதிவான் ஸ்ரீராம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது ஜெயக்குமாரி நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை.

"வியாழக்கிழமை விடுமுறை என்பதால் நீதிமன்றில் இருந்து வந்த தகவல் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு சரியாகக் கிடைக்கவில்லை. அதனால் ஜெயக்குமாரியை நீதிமன்றில் முற்படுத்த முடியவில்லை"– என்று விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் எதிர் வரும் 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ள வழக்கு விசாரணையின்போது அவரை நீதிமன்றில் முற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற–10)

### தேசிய

அளிக்கப்பட்டது.

சுயாதீனமானச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார சட்டவரைவுக்கு எதிராக வாக்களித்தார். (ற)

### குற்றச்சாட்டின்றி

கொண்டு வரப்பட்ட பின்னரும் பலர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் அடங்குகின்றனர். இவர்களை விடுதலை செய்யுமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்றது. அத்துடன் சர்வதேச சமூகமும் இந்த விடயத்தில் இலங்கை அரசை கேள்விக்கு உட்படுத்தி வருகின்றது.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு திரும்பியிருந்த, ஐ.நா. பொதுச் செயலாளரின் அரசியல் விவகார பிரதிச் செயலாளர் பெல்ட்மனும் இந்த விடயத்தை அழுத்தமாகக் கூறியிருந்தார். 'தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதன் மூலம், உள்ளக விசாரணை மீதான நம்பிக்கையை அதிகரிக்க முடியும்'– என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவற்றைக் கருத்தில்கொண்டு இது வரை எதுவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாதவர்கள் தொடர்பில் மீளாய்வு செய்து, அவர்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்று அரசின் உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ற–5)

### புலனாய்வு

இலங்கைக்கு வந்த 10 தமிழர்கள் கடந்த சில வாரங்களில், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தும் ஒரு வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரி பாலேந்திரன் தொடர்பாகவும் உடனடியாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, சர்வதேச ரீதியில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜெயக்குமாரிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இல்லையென்றால், அவரைத் தமது வடக்கு பயணத்துக்கு முன்னதாக விடுவிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு தரப்பினருக்கு பணித்திருந்தார். ஆனால் அதற்கு புலனாய்வுப் பிரிவினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனை கடந்த 3 ஆம் திகதி ஜெனிவாவில் சந்தித்திருந்தார். அன்றையதினம் ஜனாதிபதி மைத்திரிபால வடக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அன்றைய தினமே பிரான்ஸுக்குச் செல்ல முற்பட்ட பகீரதி என்ற 41 வயது பெண்ணும், அவரது 8 வயது மகளும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பெண் கடந்த ஒரு மாத காலமாக இலங்கையில் தங்கியிருந்த போதும் அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் நடக்கவில்லை. ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடனான சந்திப்பு இடம்பெற்ற தினத்தில் குறித்த கைது இடம்பெற்றிருந்தது.

அதேவேளை, ஐ.நா. மனிதவுரிமை சபையில் உரையாற்றிய மங்கள சமரவீர முந்தைய அரசின் சில அதிகாரிகள் தற்போதைய அரசின் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தி வருகின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார். (ற–5)

### தீயில் எரிந்து

அங்கு தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும் அவர் நேற்று மாலை 5 மணியளவில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் கணவர் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவில் பணியாற்றுபவர் என்று கூறப்படுகின்றது.(ற–109,ரி)

### பிரிட்டன்

கூறுகின்றன.

இந்தப் பயணத்தின் போது, பொது நலவாய நாள் நிகழ்வுகளில், ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். இந்த நிகழ்வில் பொதுநலவாய அமைப்பின் பொதுச்செயலர் கமலேஷ் சர்மாவும் பங்கேற்பார். ஜனாதிபதி லண்டனில் தங்கியிருக்கும் போது, பிரிட்டனின் மகாராணி இரண்டாவது எலிசபெத்தையும் சந்தித்துப் பேசுவார். எதிர்வரும் 11 ஆம் திகதி பயணத்தை முடித்துக் கொண்டு அவர் நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரியின் பிரிட்டன் வருகைக்கு எதிர்புத் தெரிவித்து, அங்குள்ள தமிழ் அமைப்புக்களால் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற–5)

### அமைதிப்படைக்கு

அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் தலைமன்னாருக்கும் மோடி செல்வார் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில், மோடி மஹா போதி புனிதத்தலத்துக்கு செல்வார். யாழ்ப்பாணத்தில் இந்திய நிதியுதவியுடன் அமைக்கப்படவிருக்கும் யாழ்ப்பாண கலாசார மையத்துக்கு அவர் அடிக்கல் நடுவார். இந்திய உதவியுடன் கட்டப்பட்டிருக்கும் வீடுகளை அதற்குரிய பயனாளிகளுக்கு அவர் கையளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னாருக்கும் மதவாச்சிக்கும் இடையிலான ரயில்சேவை மீண்டும் தொடங்குவதை குறிப்புணர்த்தும் விதமாக அங்கிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் முதல் ரயிலுக்கு கொடியசைத்து மோடி தொடக்கி வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜாங்கப் பேச்சையும் நடத்தவுள்ளார். நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் பேசுவார். அதன் பின்னர் கடந்த 1988 ஆம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பட்டு கொல்லப்பட்ட இந்திய இராணுவத்தினருக்கு, கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள நினைவு இடத்தில் மலர் வளையம் வைத்து மோடி அஞ்சலி செலுத்துவார். இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு மார்ச் 15 ஆம் திகதி மோடி இந்தியா திரும்புவார் என்று வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### மருதங்கேணியிலும்

மருதங்கேணி பிரதேசத்தில் பொது மக்களுக்குச் சொந்தமான 11 ஹெக்ரேயர் காணியை, இராணுவத்தினர் விஜயபாகு றெஜிமென்ட் படைத்தளம் அமைப்பதற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை மக்களின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. காணி உரிமையாளர்கள், தமது காணிகளில் எல்லையை நிலஅளவையாளர் திணைக்களத்துக்குக் காட்டவில்லை.

ஆயினும் நடைமுறைக்கு மாறாக, காணிகள் எல்லைப்படுத்தப்பட்டு குறித்த காணிகள் சுவீகரிக்கப் படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்திலேயே இது நடைபெற்றது. கடந்த ஆண்டு, ஜூலை மாதம் 3 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் 11 ஹெக்ரேயர் காணி சுவீகரிக்கப்படுவதாக, அப்போதைய காணி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் கையெழுத்திட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த காணியை, உரிய முறையில் இராணுவத்தினரிடம் கையளிப்பதற்குரிய ஏற்பாடுகள் யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலரான விக்கிரம கொடவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காணி உரிமையாளர்களை அழைத்து இராணுவத்திற்கு காணி கையளிப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, மருதங்கேணி பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில்; காணி கையளிப்பு இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–5–109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணலுக்கு தட்டுப்பாடு



கொழும்புத்துறை,மார்ச் 7
யாழ்.குடாநாட்டில் கட்டடத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் மணலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
மணல் அகழ்வு நடவடிக்கைகள் பல இடங்களில் நிறுத்தப்பட்டமையும் சட்டவிரோத மணல் அகழ்வு தடை செய்யப்பட்டுள்ளமையும் மணலுக்கான தட்டுப்பாட்டையும் விலை உயர்வையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
புதிய கட்டடங்கள், வீடுகள் பெருமளவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதும் பரவலாக இந்திய உதவி வீட்டுத்திட்டங்கள் நடைபெற்று வருவதும் மணலுக்கான தேவையை அதிகரித்துள்ளது.
தற்போது ஒரு டிராக்டர் சுமை மணல் 5000 ரூபா வுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது.
இந்தநிலையில் மணலைப் பெறுவதற்குரிய சட்டபூர்வமான செயற்பாடுகள் கனியவளத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களால் மேற் கொள்ளப்படாமையால் கட்டடத் துறைக்குரிய மணலைப் பெறுவதில் சிரமங்கள் காணப்படுவதாகத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.
மணல்வளம் கூடுதலாகவுள்ள மண்கும்பான், அரியாலை, கச்சாய், வடமராட்சிபோன்ற பகுதிகளில் உள்ள மணலை முறையான அனுமதியுடன் பொதுமக்கள் பெற்று கட்டடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாகாண சபை ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.
இதேவேளை யாழ்.குடாநாட்டில் அரச காணிகளிலும் சில இடங்களிலும் தனியாருக்குச் சொந்தமான மணல் திட்டுக்களிலும் மணல் வளம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (வ-135)

## நீர் தேங்கியவாறு கழிவுநீர் கால்வாய்

கொழும்புத்துறை, மார்ச் 7
யாழ்.நகர பிரதான கழிவுநீர் கால்வாயில் யாழ்.பொது நூலகப்பகுதியில் கால்வாயின் நீரோட்டம் தடைப்பட்டநிலையில் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகிறது.



கடற்கரையில் உள்ள கால்வாயின் கழிமுகப் பகுதியில் உள்ள மண் திட்டுக்கள் அகற்றப்படாமையால் நீரோட்டம் தடைப்பட்டுக் காணப்படுகிறது.
பொதுமக்கள் பெருமளவில் கூடும் இடமான யாழ். பொலிஸ் நிலையம், பொதுசன நூலகம் போன்ற இடங்களில் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு உற்பத்தியும் பெருக்கமடைந்து காணப் படுகிறது. (வ-135)

## வெள்ளம் பாதித்த மக்களுக்கு உதவி

வெருகல் பிரதேச செயலக பிரிவில் உள்ள வட்டவான் கிராமத்தில் ஏற்பட்ட வெள்ள இடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் புதன்கிழமை வழங்கப்பட்டது.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 165 குடும்பங்களுக்கு மறுவாழ்வுக்கழகம் கனடா அனுசரணையில் இந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. வட்டவான் பல்தேவை கட்டடத்தில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் இந்நிவாரண பொருள்களை வழங்கினர்.
இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், கிழக்கு மாகாண உறுப்பினர் கு.நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ)

## வயல்காணிகளில் ஆய்வு

கொழும்பு, மார்ச் 7
வயல் காணிகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றை நடத்துவதற்கு கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
வயல் காணிகளின் தற்போதைய நிலை தொடர்பாகவும், அவை கையாளப்படும் விதம் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க குறிப்பிடுகின்றார்.
விவசாய உற்பத்திகள் மற்றும் கமநல சேவை உதவியாளர்கள் ஊடாக உரிய தரவுகளைத் திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (வ-4)

## திக்கோடையில் ரவைகள் மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 7
மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை காட்டுப்பகுதியிலிருந்து ரீ-81 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தும் ரவைகள் 53, அடையாளம் காணப்படாத ரவைகள் 3 என்பவற்றை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தாம் கைப்பற்றியதாக மட்டக்களப்பு விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.
தமக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் குறித்த காட்டுப் பகுதியில் தேடுதல் மேற்கொண்டபொழுது, அவற்றைத் தாம் கைப்பற்றியதாக விமானப்படையினர் மேலும் தெரிவித்தனர்.(வ)



## சேவை நயப்பு விருந்துபசாரம்

கரணவாய்,மார்ச் 7
வடமராட்சி வலய அதிபர் சங்கம் நடத்தும் சேவை நயப்பு விருந்துபசாரம் இன்று சனிக்கிழமை மு.ப.10மணிக்கு வதிரி திரு இருதயக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
வடமராட்சி வலய அதிபர் சங்கத்தலைவர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். (வ-108)



*மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மகிழ்வான சூழலை ஏற்படுத்தும் குழந்தைகளுக்கான மாதிரிச்சந்தையில் ஈடுபட்ட மாணவர்கள். (வ-105)*

## வல்லப்பட்டை வைத்திருந்த 2 பேர் கைது

பம்பலப்பிட்டி, மார்ச் 7
வல்லபட்டை மூலிகைத் தாவரங்களை வைத்திருந்த 2 பேர் பம்பலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு அருகில்



வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸ் விசேட அதிரடிப் படை தலைமையக உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 5 கிலோகிராம் வல்லப் பட்டை தாவரங்களை விசேட அதிரடிப்படையினர் கைப் பற்றியுள்ளனர்.
அத்துடன் சந்தேகநபர்கள் பயணித்த வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், இரண்டு சந்தேக நபர்களையும் புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ)

## திகதி காலாவதியான திரிபோஷா பொதிகள்

### நோர்வூட் பகுதி மக்கள் முறைப்பாடு

ஹற்றன், மார்ச் 7
நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொயிஸ்டன் மற்றும் அயரபி ஆகிய தோட்டங்களில் காலாவதியான திரிபோஷா பைக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் பொகவந்தலாவை சுகாதார பரிசோதகருக்கு புதன்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.
இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து தோட்ட மருத்துவரால் காலாவதியான திரிபோசா பைக்கெற்றுக்கள் விநியோகிக்கப்பட்டதாக மேற்படி மக்கள் முறையிட்டுள்ளனர்.
முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த தோட்டங்களுக்குச் சென்ற சுகாதாரப் பரிசோதகர், சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் காலாவதியான திரிபோசா பைக்கெற்றுகளையும் மீட்டுள்ளார்.
இதுதொடர்பில் சம்மந்தப்பட்ட மருத்துவ அதிகாரியை ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார். (வ)

## பொலிஸ்காரர் இருவர் பணி இடை நிறுத்தம்

### பொலிஸ் நிலையத்தில் ஒருவர் உயிரை மாய்த்த சம்பவத்தால்

தும்மலசூரிய பொலிஸ் பிரிவின் இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் சார்ஜன் ஆகிய இருவரே இவ்வாறு பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
தும்மலசூரிய பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பிலேயே அவர்கள் இருவரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் சுயதொழில் மற்றும் கைப்பணிப் பொருள் உற்பத்திக் கண் காட்சி நடத்தப்பட்டது. மூன்று தினங்கள் நடைபெற்ற இந்தக் கண் காட்சியைப் பலரும் பார்வையிட்டுள்ளனர். (வ-14)

## புனரமைக்கப்பட உள்ளது முத்துஐயன்குளம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும் நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான முத்து ஐயன்கட்டுக் குளம் உலக வங்கியின் நிதியுதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது.

ரூபா 586 மில்லியன் நிதியில் இது புனரமைக்கப்படவுள்ளது என்றும் தெரி விக்கப்படுகின்றது.

இருவான்கதவுகள் புதிதாக நிர்மாணிக் கப்படவுள்ளது என்றும்- இரு வான்கதவு கள் புனரமைக்கப்படவுள்ளது என்றும்- தெரிவிக்கப்படுகின்றது.

வாய்க்காலைப் புனரமைப்பதற்கு மேலதிக நிதி தேவைப்படும் என்றும்- நிதி கிடைத்ததன் பின்னர் அவை புனரமைப் புச் செய்யப்படும் என்றும்- தெரிவிக்கப் பட்டது. (ற)

## சில்லறை குற்றிகளுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 7

சில்லறைக் குற்றிகளைத் தமக்குத் தருமாறு மத்திய வங்கியிடம் கோரப்படவுள் ளது என்று யாழ்.வணிகர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தலை வர் ஜெயசேகரம்,

''வங்கி உத்தரவாதம் அளித்தது போன்று சில்ல றைக் குற்றிகளைத் தர வில்லை. அது தொடர்பில் மத்திய வங்கியுடன் கலந் துரையாடவுள்ளோம்.

மிகுதிப் பணத்துக்குப் பதி லாக சில்லறை இல்லை என்று கூறி தீப்பெட்டி, இனிப்பு போன்றவற்றை வர்த்தகர்கள் தருவதாக எமக்கு முறைப் பாடுகள் வந்துள்ளன.

அதையடுத்தே இந்த முயற்சியை எடுத்துள்ளோம். மத்திய வங்கி எமக்கு உத்தர வாதம் தந்ததைப் போன்று சில்லறைக் குற்றிகளைத் தருமானால் இதற்கு தீர்வு காணமுடியும் ''- என்றும்- தெரிவித்தார். (ற-4)

## வன்னியை பொலிவாக்க பேராவல்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு நொந்து, நொய்ந்து நோவுற்றுள்ள வன்னிப் பிரதேசங்கள் புதுப்பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற பேரவாவுடன் வடமாகாண ஆளுநரும் நாங்களும் இருக்கின்றோம். எமக்கு ஆளுநர் ஒத்தாசையாக விளங்குகின்றார். அவ ருக்கு எம்மாலான சகல அனுசரணைகளை யும் வழங்கி வருகின்றோம். மாகாண நிர்வா கத்தில் தேவையில்லாத குறுக்கீடுகளைத் தவிர்த்துவரும் அவருக்கு நன்றி கூறுகிறோம். இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிராந்திய மருத்துவமனையில் மகளிர் குழந்தைகள் மருத்துவத் தொகுதி திறப்பு விழாவும் 24 கட் டில்கள் கொண்ட ஆண்கள் மருத்துவப் பகுதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்றது. அதில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''நாடாளுமன்றத் தேர்தல்கள் இன்று எட் டிப் பார்த்துக் கொள்ள விழையும் இந்த நேரத் தில் எங்களுள் போட்டிகள் வளரட்டும். ஆனால் பொறாமை எழாது இருக்கட்டும். ''-என்றும் அவர் குறிப்பிட்டார்.

''நாடாளுமன்றத் தேர்தல்கள் வரும்போது பொறாமை அற்ற போட்டிகளில் பங்குபற்ற நாங் கள்திட சங்கற்பம் பூணுவோம். மக்கள் சேவையை முன் வைத்து முன்னேறுவோம். எங்கள் ஒற்று மையும் ஒருங்கிணைந்த சேவையும் இங்கிருக் கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்லதொரு வாழ்க்கையை ஏற்படுத்தும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.'' என்றும் அவர் தெரிவித்தார்.

"ஆளுநரும் நாங்களும் ஒற்றுமையுடன் செயற் படுவதால் வடக்கு மாகாணத்துக்குப் பல நன் மைகள் வந்தடையும். ஐக்கிய அரசின் நிறுவன உதவித் திட்டத்தின் கீழ் மகளிர், குழந்தைகள் மருத்துவத் தொகுதி கட்டப்பட்டுத் திறக்கப் பட்டு 24 கட்டில்கள் கொண்ட ஆண்கள் மருத் துவத் தொகுதி கட்டுவதற்கான அடிக்கல்லும் நடப்பட்டுள்ளது. எமது மாகாண குறித்தொதுக் கப்பட்ட அபிவிருத்திக் கொடையின் கீழ் மருத்துவர்களுக்கும் பேறுகால மருத்துவ மாதர்களுக்குமான வதிவிடங்களும் செப்பனிடப் பட்டுள்ளன.'' என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச் சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ற-4)

## திருவள்ளுவர் தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 7

அகில இலங்கை திருவள் ளுவர் மகா சபையின் திரு வள்ளுவர் தினவிழா எதிர் வரும் 8 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை ஸ்ரீவல்லிபுர நாதர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

காலை 9 மணிக்கு நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பரியோவான் கல்லூரி முன் னாள் அதிபர் செ.ப.ஜீவாணந்த மும், சிறப்பு விருந்தினர்க ளாக கொழும்பு ரெலிக்கொம் முன்னாள் பிரதம கணக் காளர் ஆ.தாமோதரம் பிள்ளை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் எஸ்.லலீசன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ந.சுரேஸ்குமார், வே.வ.நல்ல சிங்கம், நா.சூரி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் 2015ஆம் ஆண்டுக்கான கல்விச் சகாய நிதி ஆரம்பிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ற-7)

## வீடு புகுந்து திருடிய திருடன் சிக்கினான்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வீட்டுக்குள் புகுந்து மிரட்டி தங்க நகைகளைப் திருடிக் கொண்டு ஓடிய திருடனை பொலிஸார் கைது செய்துள் ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா, கூமாங்குளத்தில் நடந்துள்ளது.

வீட்டுக்குள் நுழைந்த திரு டன் கூரிய ஆயுதத்தைக் காட்டி, வீட்டிலுள்ளோரை மிரட்டி நகைகளைப் பறித்துள்ளான். அதுகுறித்து முறையிடப்பட் டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதன்போது அதே இடத் தைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார். குறித்த நபர் ஏற்கனவே பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொலி ஸார் தெரிவித்தனர். (ற-ரி)

## திருவள்ளுவர் தின விழா இன்று

வவுனியா, மார்ச் 7

வவுனியா குருமன்காடு காளியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபையும், வவு னியா சேக்கிழார் மன்றமும் இணைந்து நடத்தும் திருவள் ளுவர் விழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 2மணிக்கு குருமன்காடு காளியம்மன் ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

ஆலயத்தலைவர் இ.கிருபா மூர்த்தி தலைமையில் நடை பெறவுள்ள இந்த விழாவில் வவுனியா பிரதேச செயலா ளர் கா. உதயராசா பிரதம விருந்தினராக கலந்து கொள் வார்.

அறநெறிப் பாட்சாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகள் கலாநிதி தமிழ் மணி அகளங்கன் தலைமை யில் ''வள்ளுவம்'' கருத்தா டல் என்பன சிறப்பு நிகழ்வுக ளாக இடம்பெறும். கலாபூச ணம் செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் ''வான்தொடும் வள்ளுவம்'' என்ற தலைப்பி லும் வவுனியா மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் எஸ். சிறினிவாசன் ''வள்ளு வரும் மனித நேயமும்'' என்ற தலைப்பிலும் வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோ சகர் திருமதி நிறைமதி தர்ம லிங்கம் "குறள் தருங்கனவு" என்ற தலைப்பிலும் கருத் துரை வழங்குவர். (ற-421)

## மோடி வருகை பிரச்சினையை தீர்க்க வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகை பாதிக்கப்பட்ட மக்களின் பிரச் சினையைத் தீர்க்கக் கூடிய வகையில் அமைய வேண்டும் என்று தேசிய மீனவ ஒத்து ழைப்புப் பேரவையின் வடக்கு - கிழக்கு இணைப்பாளர் அன் ரனி ஜேசுதாஸ் தெரிவித்தார்.

மோடியின் வருகை இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பய ணத்துக்கான பிரதி உபகாரப் பயணமாக அமையக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**காணாமற்போனோர் தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடி கவனம் செலுத்த வேண்டும்.**

போர்ப் பாதிப்பு, போர்க் குற்ற விவகாரம், காணாமற் போனோர் விவகாரம், அரசி யல் கைதிகள் பிரச்சினை போன்ற வற்றின் தீர்வுக்கு இலங்கை யின் புதிய அரசுக்கு இந்தியப் பிரத மர் இந்தப் பயணத்தின் போது அழுத்தம் கொடுக்க வேண்டும்- என்றும் தெரிவித்தார். (ற-14)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உறவுகளை தாருங்கள்

### கிளிநொச்சியில் நேற்று உணவு தவிர்ப்பு போராட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 7

காணாமற்போகச் செய்யப்பட்ட தமது உறவுகளை மீளத் தருமாறு கோரி நேற்று கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இந்தப் போராட்டம் நடைபெற்றது. கொளுத்தும் வெயிலில் போடப்பட்ட கொட்டகையில் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் திரண்டிருந்து போராட்டத்தை நடத்தினர்.

''இந்தப் போராட்டத்துக்கு அரசு விரைவில் பதில் தர வேண்டும். இல்லாவிடில் இனி சாகும்வரையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நாம் ஈடுபடுவோம்''- என்று அவர்கள் கூறினார்கள்.

பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி வணபிதா துரைரட்ணம் பழச்சாறு கொடுத்து போராட்டத்தை முடித்து வைத்தார்.

இந்தப் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள், மன்னார் பிரஜைகள் குழு சார்பில் ஏ.சகாயம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.(ற-21)

# காணாமற்போனோரை கண்டறிந்து தாருங்கள்

### நல்லூரில் நேற்று உபவாசப் போராட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 7

காணாமற்போனவர்களை கண்டறிந்து தருமாறும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும், இலங்கையின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் எனவும் கோரி, நல்லூர் கோயில் முன்றிலில் நேற்றுக் காலை உபவாசப் போராட்டம் ஆரம்பமாகியது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, காணாமற்போனோரின் உறவினர்களால், நல்லூர் கோயில் முன்றிலில் தொடர் அடையாள உபவாசப் போராட்டம் நேற்று ஆரம்பமாகியது. நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய இந்தப் போராட்டத்தில், பலர் கலந்துகொண்டனர்.

'இளம்விதவைகளின் அவல கண்ணீருக்கு என்ன பதில்', 'சர்வதேச விசாரணையே வேண்டும்', '1996 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்கள் எங்கே?' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், தமது பிள்ளைகளை எப்படியாவது விடுவிக்குமாறும், தாம் சாவதற்கிடையில் அவர்களை ஒரு தடவையேனும் நேரில் பார்க்க வேண்டும் எனவும் அழுது புலம்பியதுடன், நல்லூரானே தமக்கு ஒரு வழியைக் காட்டு என்று கண்ணீர் மல்கக் கோரினர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் பங்கெடுத்திருந்தார். பெருமளவிலான புலனாய்வுத் துறையினர் அந்த இடத்தில் குவிக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# சி.ஐ.டியுடன் மகனை கண்டார் கணவர்

### மீட்டுத்தாருங்கள் எனத் தாய் கதறல்

கிளிநொச்சி, மார்ச் 7



''இறுதிப் போர் வரையிலும் பாடசாலைகளில் படிப்பித்து கடைசியாக முள்ளிவாய்க்காலில் காணாமற் போன எனது மகனை இராமநாதன் முகாமில் சி. ஐ.டியினர் பிடித்து வைத்திருந்தார்கள் என்று அவனது நண்பன் கண்டதாக என்னிடம் கூறினான். அதுபோன்று முகாமிலிருந்து நாங்கள் எல்லாம் வெளியில் வந்து சில நாள்களில் எனது கணவரும் வவுனியாவில் வைத்து சி.ஐ.டியினருடன் கண்டுள்ளார். போய் கேட்டால் தன்னையும் பிடித்து விடுவார்கள் என்று என்னிடம் வந்து அழுது புலம்பினார் - இவ்வாறு கதறி அழுதார் மகனைத் தொலைத்த தாயொருவர்.

நேற்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் முன்றிலில் நடைபெற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட தாயொருவருரே இவ்வாறு கூறி அழுதார்.

''எந்த இயக்கத்திலும் இல்லாது, அக்கராயன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய எனது மகன் கோபிநாத் காட்டிக்கொடுக்கப்பட்டே பிடிக்கப்பட்டான். காட்டிக்கொடுத்தவர்கள் இப்போதும் என் கண்முன்னே உல்லாசமாக திரிகின்றனர். ஆனால் எதையுமே அறியாத என்னுடைய அப்பாவி மகன் காணாமற்போயுள்ளான். ஆசிரியர் வேலை என்றால் சில சமயங்களில் எங்களையே மறந்து விடுவான். ஆனால் இன்று அந்த ஆசிரிய வேலையால் காணாமற்போயுள்ளான். எனது கணவருக்கும் கண்ணில்லை. எங்களுக்கு எந்த உதவியும் இல்லை. எனது மகன் இருந்திருந்தால் நாங்கள் இப்படி அனாதைகளாக ஆக்கப்பட்டிருக்க மாட்டோம். என்ர பிள்ளை ஒருநாள் கூட துப்பாக்கி தூக்கியிருக்கமாட்டான். படிப்பித்தது தேசத் துரோகமா? எப்போது வருவான் என் மகன். எப்போது அவனைக் காண்பேன் நான்''- என்று கதறி அழுதார் அந்தத் தாய்.(ற-21)

# 2011இல் தொலைந்தவனை சென்ற மாசி மாதம் கண்டனர்

### சி.ஐ.டியினரே வைத்திருக்கின்றனர் என தாய் கண்ணீர்

யாழ்ப்பாணம், மார்ச் 7

2011ஆம் ஆண்டு மாசி மாதம் காணாமற்போன எனது மகன் மயூரன் கடந்த வருடம் மாசி மாதம் சி.ஐ.டி. அடிச்சதில் விதை வீங்கி போய் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரை உறவினர்கள் நேரில் கண்டு கதைத்ததாகக் கூறினார்கள். நான் சென்று பார்க்கும் போது அவரைக் கொண்டு போய்விட்டார்கள்- இவ்வாறு கதறி கண்ணீர் விட்டார் தாயொருவர்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் முன்றிலில் நடைபெற்ற காணாமற் போனவர்களின் உறவுகளுடைய அடையாள உண்ணாவிரதத்தில் கலந்த கொண்ட தாய் ஒருவரே இவ்வாறு உருக்கமாகக் கூறினார்.

''2010ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தடுப்பில் இருந்து வந்த எனது மகன் சிறிதுகாலம் தான் எங்களுடன் இருந்தார். 2011ஆம் ஆண்டு அவர் முகாமுக்கு வேலைக்குச்செல்வதற்காக சென்றபோதுதான் காணாமற்போனார். நாங்கள் தேடாதஇடங்கள்இல்லை எல்லா இடமும் அலைந்து அலைந்து அலுத்துப் போய் விட்டோம். ஆனால் போன மாசி மாதம் 27ஆம் திகதி மாஞ்சோலை மருத்துவமனையில் எனது மகனை எனது உறவினர்கள் பலர் கண்டுள்ளனர். மகனுடன் கதைத்துள்ளனர். தடுப்பில் இருந்து வந்திட்டாயா என்ன இஞ்ச நிற்கிறாய் எண்டு கேட்டுள்ளனர். அவர் நான் தடுப்பில் இருந்து வந்து மீண்டும் என்னை சி.ஐ.டி பிடிச்சு வைத்திருந்தார்கள். அவங்கள் அடிச்சதில் தான் எனக்கு விதை வீங்கி போச்சு. அதற்குத் தான் சலம் எடுத்துக்காட்டச்சொல்லி இங்கே கொண்டு வந்தாங்கள் என்று கூறியுள்ளான். அப்போது அருகிலே நின்ற சிலர் அவன் பக்கத்தில் வந்தமையால் வேறு ஒன்றும் கூறவில்லை என்று நேரில் கண்டு கதைத்த என் உறவினர்கள் கூறினார்கள். பின்னர் நான் சென்று விசாரித்தேன் ஆனால் அவன் அங்கே இல்லை கொண்டு சென்று விட்டார்கள்.'' -என்றுஅழுதார்அந்தத்தாய்.

''அதன் பின்னர் முல்லைதீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய சென்ற போது அதை அவர்கள் ஏற்கவில்லை. யாருடன் இருக்கிறார் என்று தெரியாமல் நாங்கள் எங்கு சென்று தேடுவது நீங்கள் சரியாக கண்டு பிடிச்சுவிட்டு வந்து சொல்லுங்கள் என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள்.''- என்று கூறி அவர் அழுதார்.(ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் | சனிக்கிழமை | மார்ச் 07 | 2015

## சென்.ஜோன்ஸ் ஆதிக்கம் தொடர்கிறது

வடக்கின் போர் என்று வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ் மற்றும் யாழ் மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான மூன்று நாள்களைக்கொண்ட டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினம் இரு அணிகளினதும் பந்துவீச்சாளர்களின் துல்லிய வேகமும் மாஜாயாலச் சுழலும் ஆதிக்கம் செலுத்த ஒரே நாளில் இரு அணிகளிலும் சேர்த்து 16 இலக்குகள் பறி போயின.

ஆட்டத்தின் இரண்டாவது நாளில் கள மிறங்கியது மத்திய கல்லூரி.

அணியின் ஓட்டம் 16 ஆக இருந்த பொழுது மத்திய கல்லூரியின் முதல் இலக்கு வீழ்த் தப்பட்டது. அடுத்த சில பந்துப்பரிமாற் றத்திலேயே டினோஜனையும் லோக தீஸ்வர் வழியனுப்பி வைக்க சென். ஜோன்ஸ் பக்கம் காற்று பலமாக வீசத் தொடங்கியது. ஒருவாறு 50 ஓட்டங் களை எட்டிப் பிடித்தது. அடுத்த சில நிமிடங்க ளிலேயே லோகேசின் பந்தில் சிக்கினார் மத்தி யின் மற்றொரு நம் பிக்கை வீரர் திரிசன். ஒரு முனையில் அலன் ராஜ் நிலைத்து -நின் றாலும் மறுமுனை பல மாக இருக்க வில்லை. மீண்டும் லோக தீஸ் வர் புந்து பலப்படுத்தி யது சென். ஜோன்ஸை. கார்த் தீபன் விடைபெற் றார் 26 ஓட்டங்களு டன். மத்தியைக் காக்க நம்பிக்கை தந்த அலன் ராஜும் விடைபெற இறுதிக் கட்ட அதிர டியை கையிலெடுத்தார் கௌதமன். ஓட்டங்கள் சராசரியான வேகத் தில் கிடுகிடுவென எகிற ஆரம்பித்தன. முடி வில் மத்திய கல்லூரி 164 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களால் பின்தங்கியது. 136 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண் டாவது இன்னிங்சிற்காக களமி றங்கியது சென்.ஜோன்ஸ்கல்லூரி. இரண்டு இலக் குகள் இழப்புக்கு 50 ஓட்டங்கள். சென். ஜோன்ஸ் ரசிகர்கள் உற்சாகம். கூடவே மத்திய கல்லூரி ரசிகர்களும் ஆரவாரம் செய்யவே செய்தனர். 50ஆவது ஓட் டத்திலேயே சென்.ஜோன்ஸின் அடுத்த இலக்கும் பறிபோனது. பின்வரிசை வீரர் கள் சுப்பராக இல்லாவிட்டாலும் சுமா ரான ஆட்டம். நேற்றைய ஆட்டநேர முடி வில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 6 இலக் குகள் இழப்புக்கு 103 ஓட்டங்களைப் பெற் றுள்ளது. (த-ரி,23)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

IELTS A1 B1 B2
MBA(London) Qualified Trainer Call: 0213208342
Visit: http://edu.kugroup.info/ielts
0777302882 IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய, அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் 16 வருட அனுபவமுள்ள ஒரே கல்வி நிறுவனம்.
K.U Education,No 626 1/1,K.K.S Rd,Jaffna

வீடு வாடகைக்குத் தேவை
யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 5Km இற்கு உட்பட்ட பகுதியில் 04 அல்லது 05 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு :- 071 636 1361

நந்தினி என்ரபிறைஸ்
* சில்வர் பைப்
* GI பைப்
* GI பொக்ஸ் பார்
* சகல விதமான இரும்புப்பட்டங்கள் L கேடர்கள்
மிகத் தரம் வாய்ந்த சகல விதமான கட்டடப் பொருள்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
இல.241, 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின் வீதி)

போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்கள் விற்பனையாகிறது
★ பட்டதாரி ஆசிரியர் - வழிகாட்டி
★ முகாமைத்துவ உதவியாளர்
★ விவசாயப் போதனாசிரியர்
★ வருமானப் பரிசோதகர்
★ பொது அறிவு - 2015
★ நுண்ணறிவு
★ பொது அறிவும் நுண்ணறிவும்
★ அரச உத்தியோகஸ்தர்களுக்கான சகல திணைக்கள பரீட்சைகளுக்குமுரிய வழிகாட்டி
★ கணக்காளர் சேவை வழிகாட்டி
பூபால சிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.

Study Medicine
MBBS/MD
Approved by Sri Lankan Medical Council
GMC-UK, ECFMG-USA, IMED, WHO & UNESCO
* RIGA STRADINS UNIVERSITY - LATVIA
* VILNIUS MEDICAL UNIVERSITY - LITHUANIA
* RUSSIAN STATE UNIVERSITY - RUSSIA.
* TBILISI STATE MEDICAL UNIVERSITY - GEORGIA
* DAKA MEDICAL COLLEGE - BANGLADESH
* INTERNATIONAL MEDICAL UNIVERSITY (IMU) - MALAYSIA
* SICHUAN UNIVERSITY- CHINA
* TIANJIN MEDICAL UNIVERSITY - CHINA
* TONGJI UNIVERSITY - CHINA
* SUN YAT SEN - CHINA
# Scholarships Available
# Very Low Course Fee
# IELTS Not Compulsory

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
021 4926222 , 077 3013060
107 B 1/1 Galle Road, Wellawatte

வாகனம் விற்பனைக்கு
PY-xxxx இலக்கமுடைய TATA சுப்பரேசி 8500Km ஓடியுள்ள, கிறே கலர் வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : - 071 248 3364

பொருளியல்
மாலை நேர பிரத்தியேகமற்றும் குழு வகுப்புகள்
A/L 2015,2016, 2017
தமிழ் ஆங்கில மொழி
ஆரம்பம்- 07/03/2015 சனி மாலை - 4.00 மணி
L. Reginold B.A (Hons) Eco.Spl
IABF, AAT- ECONOMICS வகுப்புகளும்
ராபி அக்கடமி, கோயில் வீதி, நல்லூர். 077 8448535


### கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய்.

Bitsmans கல்வி நிறுவனத்தின் இயக்குநர்களாகிய பாலா, இராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரி திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Bitsmans கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா கடந்த (28.02.2015) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், தியாகராஜா மற்றும் காலஞ்சென்ற வாலாம்பிகை தம்பதியரின் பெறாமகளும், காலஞ்சென்ற வர்களான சின்னத்துரை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சற்குணராஜாவின் பாசமிகு மனைவியும், தியர்மதா (கனடா), துஷ்யந்தன் (லண்டன்), தாரணி (பபி, சுவிஸ்), விதூசினி, டர்சினி (லண்டன்), மயூரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜலட்சுமி, பாலகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ மெமோரியல் ஆங்கில பாட சாலை), பாலச்சந்திரன் (கனடா), இராஜகுமாரன் (ஆசிரியர், யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ஜீவரஞ்சினி (லண்டன்) வசந்தினிதேவி (சுவிஸ்), வரதராஜா, ரஞ்சினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காண்டீபன் (கனடா), புஸ்பகாந்தன் (சுவிஸ்), உதயதாஸ் (லண் டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற கனகரட்ண ராஜா மற்றும் சரோஜினிதேவி, கலைவாணி (கனடா), அனுஷா, சக்திக்குகன் (லண்டன்), பரஞ்சோதி (சுவிஸ்), கவிதா , சண்முக லிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கஜானி, சுவேதன், நந்தீஸ்காந், பிரியங்கா, தனுஷங்கா, விபுஷங்கா, கிருஷ் ணகாந், துவாரங்கா, கிஷான், லக்ஷிகா, டனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2015) ஞாயிற் றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப் பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தையடி, மானிப்பாய்

தகவல் : குடும்பத்தினர் (077 6667480, 077 6914678,)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.